உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# தமிழ்நாடு காவல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
2022 - 2023

மானியக் கோரிக்கை எண். 22

# மு.க. ஸ்டாலின்
முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I | முன்னுரை | | 1 - 4 |
| II | காவல்துறை தலைமையகம் / காவல் நிர்வாகம் | | 4 - 7 |
| III | காவல்துறையில் பெண் காவலர்கள் | | 8 -9 |
| IV | சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுதல் | | 9 - 11 |
| V | சென்னை மாநகர காவல் ஆணையரகம் | | 11 – 18 |
| VI | தாம்பரம் மற்றும் ஆவடி காவல் ஆணையரகங்கள் | | 18 – 19 |
| VII | பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் | | 20 – 24 |
| VIII | சாலைப் போக்குவரத்து விபத்துகள் | | 24 -28 |
| IX | காவல் துறையின் பல்வேறு பிரிவுகள் – ஒரு பார்வை | | 28 |
| | (i) | குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை (CBCID) | 29 – 31 |
| | (ii) | மாநில நுண்ணறிவு பிரிவு (State Intelligence) | 31 – 58 |
| | (iii) | குற்றப்பிரிவு (Crime Wing) | 58 |
| | | (அ) போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு | 58 - 63 |

| வ. எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | | (ஆ) அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவு | 63 – 66 |
| | (iv) | பொருளாதாரக் குற்றப் பிரிவு | 67 - 71 |
| | (v) | சிலைத் திருட்டு தடுப்பு பிரிவு | 71 - 78 |
| | (vi) | இணைய தள குற்றப்பிரிவு | 78 - 88 |
| | (vii) | மாநில குற்ற ஆவணக் காப்பகம் (SCRB) | 89 - 101 |
| | (viii) | தமிழ்நாடு சிறப்பு காவற் படை | 101 -103 |
| | (ix) | செயலாக்கப்பிரிவு | 104 - 109 |
| | (x) | சிறப்பு இலக்குப்படை | 109 - 110 |
| | (xi) | கடலோர பாதுகாப்பு குழுமம் (CSG) | 110 - 120 |
| | (xii) | இரயில்வே காவற்படை | 120 - 124 |
| | (xiii) | சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு | 124 - 128 |
| | (xiv) | காவல் பணிக்கு உதவிடும் துணைப் பிரிவுகள் | 128 - 130 |
| | (xv) | காவல் பயிற்சி | 130 - 141 |
| | (xvi) | தொழில் நுட்பப் பணிகள் | 141 - 151 |
| | (xvii) | மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு | 151 - 156 |
| | (xviii) | ஊர்க்காவல் படை | 157 - 158 |

| வ. எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| X | (i) | காவலர்களுக்கான நலத்திட்டங்கள் | 158 – 171 |
| | (ii) | காவல்துறை தலைமையகம் | 171 - 180 |
| | (iii) | காவல் நிர்வாகம் - மனித வள மேலாண்மை | 180 - 182 |
| XI | காவல்துறை கட்டிடங்கள் மற்றும் காவலர்களுக்கான வீட்டுவசதி | | 182 - 185 |
| XII | தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் | | 185 - 186 |
| XIII | குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை | | 186 - 189 |
| XIV | தடய அறிவியல் துறை | | 189 - 193 |
| XV | முடிவுரை | | 193 -194 |
| | விளக்கப் படங்கள் மற்றும் பிற்சேர்க்கை I – VIII | | 195 - 206 |
| | புகைப்படங்கள் | | |

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை
## தமிழ்நாடு காவல்துறை மானியக் கோரிக்கை எண்.22
## கொள்கை விளக்கக் குறிப்பு 2022 - 2023

### I. முன்னுரை

தமிழக அரசு சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. இவ்வரசு பதவியேற்ற மே மாதம்-2021 முதல், மாநிலத்தில் பெரிய சட்டம்-ஒழுங்கு பிரச்சனைகள் எதுவும் எழவில்லை. பண்டிகைகள், ஆண்டு விழாக்கள், அதிமுக்கிய நபர் வருகைகள், போராட்டங்கள் போன்ற அனைத்து முக்கிய நிகழ்வுகளும் திறம்பட கையாளப்பட்டன. ஒன்பது மாவட்டங்களில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தல்களும், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களும் சட்டம்-ஒழுங்கு பிரச்சனை ஏதுமின்றி அமைதியாக நடந்து முடிந்தன. சாதி, மத, இன மோதல்கள் எதுவும் நிகழாவண்ணம் மாநிலத்தில் பொது அமைதி மற்றும் ஒழுங்கு சிறப்பாகப் பேணப்பட்டு வருகிறது.

உளவுப் பிரிவினரால் மாநிலத்தில் உள்நாட்டு பாதுகாப்பு உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. மாநில உளவுத்துறை, சிறப்பு இலக்குப் படை மற்றும் உள்ளூர் காவல் துறையின் நக்சலைட் சிறப்புப் பிரிவு போன்ற பல்வேறு காவல் பிரிவுகளின் சிறப்பான ஒருங்கிணைப்பின் காரணமாக, மூன்று மாநிலங்கள் சந்திக்கும் பகுதியில் இடதுசாரி தீவிரவாத மாவோயிஸ்டுகளின் செயல்பாடுகள் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தமிழக எல்லையில் மாவோயிஸ்டுகளின் நடமாட்டம் இல்லை. அது போலவே, மத அடிப்படைவாதிகள் மற்றும் ரவுடிகளின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் கடுமையான அணுகுமுறை பின்பற்றப்படுகிறது.

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இணக்கமான சூழலை ஏற்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. அனைவருக்கும் சமூக நீதி மற்றும் சமத்துவம் என்பதே இந்த அரசின் குறிக்கோள் ஆகும். காவல்துறை - பொதுமக்கள் உறவு

சுமூகமாக இருக்க காவல் பணியாளர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. காவல் துறையினர் பொதுமக்களை நண்பர்களாகக் கருதி, அவர்களிடம் கண்ணியத்துடனும் கருணையுடனும் நடந்து கொள்வதை உறுதி செய்ய அரசு பல பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

காவல்துறையினர் பொதுமக்களை நட்புடன் நடத்துவதை உறுதி செய்ய அவர்களின் மனநிலையில் மாற்றங்களை ஏற்படுத்த சென்னை அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியுடன் இணைந்து, அனைத்து காவல் துறையினருக்கும் விரைவில் விரிவான பயிற்சி அளிக்க பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டு வருகின்றது.

சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதற்கும், குற்றங்களைத் தடுப்பதற்கும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், இணையதளக் குற்றங்கள்,

பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் பிற திட்டமிட்ட குற்றங்கள் மீதான விசாரணைக்கு முன்னுரிமை அளிக்க காவல்துறையினருக்கு விழிப்புணர்வு மற்றும் ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று நோயின் இரண்டு அலைகளின் போதும் காவல்துறையினர் சிறப்பாகக் கடமையாற்றினர். 2021-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த கனமழை மற்றும் திடீர் வெள்ளத்தின் போது, காவல்துறையினர் துரிதமாகச் செயல்பட்டு, சேவை மனப்பான்மையோடு, துயரத்தில் உள்ள மக்களுக்கு உதவியதுடன், பேரிடரை தணிக்க பெரும் பங்கு ஆற்றியதால் பொதுமக்களின் பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றனர்.

## II. காவல்துறை தலைமையகம் / காவல் நிர்வாகம்

காவல்துறை இயக்குநர் மற்றும் காவல் படைத் தலைவர் தமிழக காவல்துறையை வழிநடத்திச் செல்வதுடன், மாநிலத்தில்

உள்ள அனைத்து காவல் சிறப்புப் பிரிவுகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுகிறார். இத்துறையின் பல்வேறு பிரிவுகளுக்கு பொறுப்பு வகிக்கும் காவல்துறை இயக்குநர்கள், கூடுதல் காவல்துறை இயக்குநர்கள் மற்றும் காவல் துறைத் தலைவர்கள், அவர்களது பிரிவு சிறப்பாக செயலாற்றுவதை கண்காணித்து காவல்துறை இயக்குநர் / காவல்படை தலைவருக்கு தெரிவிப்பதில் உறுதுணையாக உள்ளனர்.

மாநில காவல்துறை **4** மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு மண்டல காவல்துறைத் தலைவர் தலைமையில் இயங்குகிறது. இந்த மண்டலங்கள் மேலும் 11 சரகங்களாக பிரிக்கப்பட்டு, காவல்துறை துணைத் தலைவர் தலைமையில் இயங்குகிறது. தற்பொழுது மாநிலத்தில் **9** காவல் ஆணையரகங்கள் உள்ளன. அவற்றில், சென்னை பெருநகரம் மற்றும் தாம்பரம் ஆகியவை காவல்துறை இயக்குநர் தலைமையிலும், ஆவடி காவல் ஆணையரகம் கூடுதல்

காவல்துறை இயக்குநர் தலைமையிலும், மற்ற **6** காவல் ஆணையரகங்கள் காவல்துறைத் தலைவர் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன. **37** காவல் மாவட்டங்கள் மற்றும் **2** ரயில்வே காவல் மாவட்டங்கள் தலா ஒரு காவல் கண்காணிப்பாளரால் நிர்வகிக்கப்படுகின்றன. மேலும், உதவிக் காவல் கண்காணிப்பாளர் அல்லது துணைக் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் **248** காவல் உட்கோட்டங்கள் உள்ளன. மாநிலத்தில் **1,305** சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையங்கள், **47** ரயில்வே காவல் நிலையங்கள், **202** அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், **273** போக்குவரத்து மற்றும் புலனாய்வு காவல் நிலையங்கள் மற்றும் **27** காவல்துறை புறக் காவல் நிலையங்கள் உள்ளன ***(விளக்கப்படம்-I)***.

நுண்ணறிவு, குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றப்பிரிவு, இணைய குற்றப்பிரிவு, பொருளாதாரக் குற்றப்பிரிவு,

அமலாக்கப் பிரிவு, சிறப்பு இலக்குப் படை, தொழில்நுட்ப சேவைகள் பிரிவு, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு, காவல் பயிற்சி பள்ளி, ரயில்வே, ஆயுதப்படை, கடலோர பாதுகாப்புக் குழுமம், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, குடிமைத் தற்காப்பு மற்றும் ஊர்க்காவல் படையினர் மற்றும் மாநில குற்றப் பதிவேட்டுக் கூடம் உள்ளிட்ட பல சிறப்பு பிரிவுகள் காவல்துறையில் செயல்பட்டு வருகின்றன *(விளக்கப்படம்-II)*.

01.01.2022 நிலவரப்படி, காவல்துறையில் ஏற்பளிக்கப்பட்ட காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 1,31,491 ஆகவும், அதில் 1,17,942 காவல் பணியாளர்கள் தற்போது பணியில் உள்ளனர். சமீபத்தில் பயிற்சியில் சேர்ந்துள்ள 10,000 காவலர்களையும், 1,000 உதவி காவல் ஆய்வாளர்களையும் சேர்க்கும் பட்சத்தில் காலிப்பணியிடங்கள் வெகுவாக குறையும்.

## III. காவல் துறையில் பெண் காவலர்கள்

1973-ஆம் ஆண்டில், சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கையாள்வதில் காவல் துறைக்கு உதவி செய்யும் முதன்மை நோக்கத்துடன் மகளிர் காவல் பிரிவு நிறுவப்பட்டது. கடந்த 49 ஆண்டுகளில் இந்தச் சூழல் மிகவும் மாறி உள்ளது. சட்டம்-ஒழுங்கைப் பராமரித்தல், குற்றங்களைத் தடுத்தல் மற்றும் கண்டறிதல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பணிகளில் மகளிர் காவல் துறையினர் திறம்பட செயலாற்றி வருகின்றனர். தற்பொழுது காவல்துறையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக விளங்குகின்றனர். 01.01.2022 அன்று உள்ளபடி, காவல் துறையில் 23,542 பெண் காவலர்கள் பணியில் உள்ளனர்.

தற்போது, மாநிலத்தில் 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பெண்களின் குறைகளைக் கவனிப்பதற்காக கிட்டத்தட்ட ஒவ்வொரு

உட்கோட்டத்திலும் ஒரு மகளிர் காவல் நிலையம் உள்ளது. மேலும் 20 கூடுதல் மகளிர் காவல் நிலையங்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தாலுக்கா காவல் நிலையத்திலும், குறைந்தபட்சம் ஒரு பெண் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று பெண் தலைமைக் காவலர்கள் பணியில் உள்ளனர்.

## IV. சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுதல்

சாமானிய மக்கள் மனதில் அச்சமின்றி அன்றாடப் பணிகளில் ஈடுபடும் வகையில் அமைதி மற்றும் நிலைத்தன்மையைப் பேணுவது அரசின் முதன்மைக் கடமையாகும். குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து சாமான்ய குடிமக்களை பாதுகாக்க, காவல்துறைக்கு தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. பொது அமைதி மற்றும் ஒழுங்குக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சூழ்நிலைகளை சமாளிக்க காவல்துறையினர் சுதந்திரமாகத்

தங்கள் கடமைகளைச் செய்வதற்கும், சட்டத்தை நிலை நிறுத்துவதற்கும் ஏதுவான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக அமைதி மற்றும் மத நல்லிணக்கத்தைப் பேணுவதில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. ஆண்டு முழுவதும் பல அமைப்புகள் பல்வேறு பிரச்சனைகளை முன்வைத்து பல போராட்டங்களை நடத்திய போதிலும் அதன்மூலம் வன்முறைக்கு இடமளிக்காமல் அவைகள் காவல்துறையால் திறமையாகக் கையாளப்பட்டன.

கொரோனா பெருந்தொற்று நோயைக் கட்டுப்படுத்த சுகாதாரம், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு காவல்துறை முனைப்பாக செயல்பட்டது. தொற்றுநோய் காலத்தில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அனைத்து வழிகாட்டுதல்களையும் துல்லியமாக செயல்படுத்தியது. மேலும், காவல்துறை

மனிதாபிமானத்துடன் இவ்வழிகாட்டுதல்களை அமல்படுத்தியதால் பொதுமக்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றது.

குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் காவல் நிலைய மரணங்களைத் தடுப்பதற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் காவல் துறையினருக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களை அணுகும் முறையினை மாற்றி அமைப்பதே இப்பயிற்சிகளின் நோக்கமாகும்.

## V. சென்னை மாநகர காவல் ஆணையரகம் சிறுவர் மற்றும் சிறுமியர் மன்றங்கள்

சிறுவர் மற்றும் சிறுமியருக்காக ஏற்கனவே **82** காவல் மன்றங்கள் சென்னை மாநகரில் பயன்பாட்டில் உள்ளன. இம்மன்றங்கள் சாரண ஆசிரியர் மற்றும் கவனிப்பாளரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. **2021**-ம் வருட நிதிநிலை அறிக்கையில் இவ்வரசால் **51** புதிய சிறுவர் மற்றும் சிறுமியர்

மன்றங்கள் துவங்கப்பட்டன. அவற்றில் **38** மன்றங்கள் சென்னை மாநகரில் உள்ளன. **2021-2022**-ம் நிதியாண்டில் ரூபாய் **38.25** இலட்சம் அனுமதிக்கப்பட்டு, கூடுதலாக ரூபாய். **15.93** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காவல் நிலைய சுற்றுப்புற பகுதிகளில் உள்ள சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் சரியான பாதையில் வழிநடத்தப்படுவதை இம்மன்றங்கள் உறுதி செய்கின்றன.

**காவல் துறையினரின் முயற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தும் பிரிவு (SIRPI)**

குற்றத் தடுப்புக்காகவும், குழந்தைகள் குற்றவாளிகளாக மாறுவதைத் தடுக்கும் பொருட்டும், சென்னை நகரில் உள்ள நூறு பள்ளிகளில் **50** மாணவர்களைக் கொண்ட பொறுப்புள்ள காவல் பணியில் மாணவர்கள் **(SIRPI)** பிரிவை ரூபாய் **4.25** கோடி மதிப்பீட்டில் உருவாக்க ஆணையிடப்பட்டது. இது தேசிய மாணவர் படை (என்.சி.சி)

போன்ற அமைப்பாக பள்ளிகளில் செயல்படுகிறது. இதற்காக 40 வார பாடத்திட்டம் தயார் செய்யப்பட்டு, மாணவர்கள் காவல் துறையினரோடு பணியில் சேர்ந்து செயல்பட வாய்ப்பாக அமைந்துள்ளது.

**சைபர் (இணையதள) குற்ற காவல் நிலையங்கள்**

டிஜிட்டல் மயமாக்கல், இணைய வசதிகள் மற்றும் கைபேசிகளின் பரவலான பயன்பாடு, இணையதள குற்றங்கள் வேகமாக அதிகரிக்கக் காரணமாக உள்ளது. 2011ம் ஆண்டு இணையதள குற்ற புகார்களின் எண்ணிக்கை 748 ஆக இருந்த நிலையில் 2021 ம் ஆண்டு 13,077 ஆக அதிகரித்துள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளில் 1,648% அதிகமாகியுள்ளது. பெரும்பாலான இணையதள குற்ற வழக்குகளில் வெளிநாட்டினர் ஈடுபடுவதால், குற்றவாளிகளைக் கைது செய்தல் மற்றும் களவு போன சொத்துகளை மீட்டு எடுத்தல் மிகப்பெரும் சவாலாக உள்ளது. வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டாலும், சட்ட சிக்கல்கள் மற்றும்

இதர நடைமுறைகள் காரணமாக, புகார்தாரருக்கு பணத்தைத் திரும்ப வழங்குவது காலதாமதத்தை ஏற்படுத்துகிறது. இப்பிரச்சனையை எதிர்கொள்ள சென்னை மாநகரில் கூடுதலாக அதாவது, 4 மண்டலங்களுக்கு தலா ஒன்றும், மத்திய குற்றப்பிரிவிற்கு ஒன்றும் ஆக ஐந்து இணையதள குற்ற காவல் நிலையங்கள் மறுபரவலாக்கமுறை மூலம் ரூ.85.69 இலட்சம் செலவில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ஐந்து இணையதள குற்ற காவல் நிலையங்கள் அமைக்க இவ்வரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. புலன் விசாரணையை அறிவியல் முறையில் மேம்படுத்த இணையதள தடயவியல் ஆய்வகம் அமைத்து, அதில் உயர்தொழில் நுட்ப தடயவியல் கருவிகள், மென்பொருட்கள், சமூக வலைதள உள்ளீட்டு கருவிகள் அமைக்க ரூபாய் 6.9 கோடி செலவில் “பாதுகாப்பான நகர” திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் மட்டுமே

இணையதள குற்றத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அவர்கள் இழந்த பணம் ரூ.6.75 கோடி காவல்துறையின் தீவிர நடவடிக்கையால் மீட்கப்பட்டுள்ளது.

## விடுப்பு செயலி (CL APP)

காவல்துறையினர் தங்கள் கடமைகளை திறம்பட செய்ய, அவர்கள் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். அந்த வகையில் ஒரு நாள் விடுப்பு எடுப்பது கடினமான பணியாக இருந்தது. அக்குறையை நிவர்த்தி செய்யும் விதமாக எந்த நேரத்திலும், எங்கிருந்தும் தங்களுடைய கைபேசியின் மூலம் தற்செயல் விடுப்பு எடுக்கக்கூடிய வகையில் இந்த செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர காவலர்களுக்காக 2021-2022 ஆண்டிற்கான காவல்துறை மானிய கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டபடி, விடுப்பு செயலி (CL APP) என்ற செயலி

**21.01.2022** அன்று ரூ.**10** இலட்சம் செலவில் துவக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்செயலி மூலம் காவலர்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்தே நேரடியாக தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு, மருத்துவ விடுப்பு மற்றும் வாராந்திர அனுமதி விடுப்பு ஆகியவற்றை வழங்க வேண்டி இணைய வழி மூலம் விண்ணப்பித்து அதன் நிலையை உடனடியாக தெரிந்து கொண்டு பயனடைந்து வருகின்றனர். மேற்படி விடுப்பு செயலி **(CL APP)** என்ற செயலி மூலம் இதுவரை **8558** காவல்துறை பணியாளர்கள் பயனடைந்துள்ளனர். இச்செயலியை மற்ற காவல் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**மாநில காவல்துறை அருங்காட்சியகம், எழும்பூர்**

சென்னை எழும்பூரில் உள்ள பழைய காவல் ஆணையர் அலுவலக கட்டிடத்தில், மாநில காவல் அருங்காட்சியகம் அமைத்திட ரூ.**4.60** கோடி செலவில்

பணிகள் மேற்கொண்டு புதுப்பிக்கப்பட்டு 28.09.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொது மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

மாநில காவல் அருங்காட்சியகம் தொடங்கியதிலிருந்து, சிறப்பு விருந்தினர்கள் உட்பட மொத்தம் 14,021 பொதுமக்கள் பார்வையிட்டுள்ளனர். வார இறுதி நாட்களில் காவல் சிறுவர் மற்றும் சிறுமியர் மன்ற மாணவர்களும் மற்றும் அரசுப்பள்ளி மாணவர்களும் காவல் அருங்காட்சியகத்தை இலவசமாக பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், சென்னை பல்கலைக்கழக மற்றும் இதர கல்லூரி மாணவர்களும் காவல் அருங்காட்சியக வளாகத்திற்கு பயிற்சி நோக்கத்திற்காக வருகின்றனர். இந்த அருங்காட்சியகத்தின் நோக்கம், காவல்துறையினர் பயன்படுத்திய தொன்மையான பொருட்களைச் சேகரித்து, பாதுகாத்து, கலைநயத்தோடு காட்சிப்படுத்துவதாகும். இதன் மூலம்

காவல்துறையின் பெருமைமிக்க வரலாற்றையும், அதன் செயல்பாடுகளையும் பொதுமக்கள் அறிந்து கொள்ள இயலும்.

**போக்குவரத்து**

தமிழக அரசு **2021-22** -ம் நிதியாண்டில் சாலைப் பாதுகாப்பு நிதிக்கு ரூ.**65** கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதியிலிருந்து சென்னை பெருநகரில் பழுதடைந்த சாலைகளை மேம்படுத்திட அரசால் ரூ.**1.07** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அந்நிதி மூலம் சாலைப் பாதுகாப்பு தடுப்புகள், உபகரணங்கள் மற்றும் சாலைகள் சீர்செய்யப்படும்.

## VI. தாம்பரம் மற்றும் ஆவடி காவல் ஆணையரகங்கள்

மக்களுக்கான சேவைகளை கொண்டு சேர்ப்பதை மேம்படுத்துவதற்காக கடந்த 1.1.**2022** அன்று ஆவடி மற்றும் தாம்பரம் மாநகர காவல் ஆணையரகங்கள் இவ்வரசால் புதிதாக உருவாக்கப்பட்டன. தாம்பரம் ஆணையரகத்தில் **20** தாலுக்கா

காவல் நிலையங்களும் மற்றும் 16 போக்குவரத்து காவல் நிலையங்களும், ஆவடி ஆணையரகத்தில் 25 காவல் நிலையங்களும் மற்றும் 8 போக்குவரத்து காவல் நிலையங்களும் செயல்படத் துவங்கி உள்ளன. இந்த புதிய ஆணையரகங்கள் முழுத்திறனோடு செயல்படுவதற்கு தேவையான மனித வளம், கருவிகள், உள்கட்டமைப்பு மற்றும் வாகனவசதிகள் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்காவில் உள்ள மேவலூர்குப்பம் கிராமத்தில் சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலையில் சுமார் 12.27 ஹெக்டர் (சுமார் 30 ஏக்கர்) நிலம் ஆயுதப்படை மற்றும் ஆவடி ஆணையரகத்தின் பிற காவல் பிரிவுகளை நிறுவுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தாம்பரம் காவல் ஆணையரகம் அமைப்பதற்கு நிலம் ஒதுக்கும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளது.

## VII. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்

தமிழக காவல்துறையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இணையதள குற்றங்களைக் கையாள்வதற்காக, கூடுதல் காவல்துறை இயக்குநர் தலைமையில் இரண்டு காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் சென்னை பெருநகரத்திற்கு ஒரு காவல் துணை ஆணையர் மற்றும் அனைத்து மாநகரங்கள் / மாவட்டங்களில் தலா ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டு தனிப்பிரிவாக செயல்படுகிறது.

இப்பிரிவினரால் தமிழகம் முழுவதும் நடப்பாண்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்து, பொது இடங்களில் **466** விழிப்புணர்வு பேரணிகள் மற்றும் **42,359** விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

கடந்த 01.05.2021 முதல் இதுவரை பெண்கள் உதவி எண் 181 மூலம் 11,778 உதவி அழைப்புகளும், குழந்தைகள் உதவி எண் 1098 மூலம் 39,758 அழைப்புகளும் மற்றும் காவலன் செயலி மூலம் 15,246 அழைப்புகளும் பெறப்பட்டு அனைத்து அழைப்புகளுக்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 800 பெண்கள் உதவி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, நிர்பயா நிதி மூலம் தலா ஒரு லட்சம் மதிப்பில் வாகனங்கள், கணினிகள் வழங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை புலன் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு, தமிழக காவல்துறை இயக்குநர் அவர்களால் நிலையான புலன் விசாரணை வழிகாட்டியும் (Standard Operating Procedure - SOP) விசாரணைக்

கையேடுகளும் அனைத்து காவல்நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டு உரிய பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரிவு அதிகாரிகளால் போக்சோ வழக்கு சம்பந்தமாக ஆய்வு மேற்கொண்டு, அனைத்து மாவட்ட அதிகாரிகளுக்கும் அறிவுரை வழங்கியதன் விளைவாக, நடப்பாண்டில் பதிவான **723** போக்சோ வழக்குகளில் **86** வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளது. மற்ற வழக்குகளில் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

இப்பிரிவு அதிகாரிகளால் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் போதைப் பொருட்கள் விற்பனை செய்வது சம்பந்தமாக மிகப்பெருமளவில் நுண்ணறிவு தகவல் சேகரிக்கப்பட்டு, அதன் பேரில் **2138** வழக்குகள் பதிவு செய்யப்பட்டு **148** குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பிரிவின் தலைமையகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான இணையதள குற்றப் புகார்களை கையாள இணையதள குற்ற காவல்நிலையம் செயல்படுகிறது, நடப்பாண்டில் **6000** இணையதள புகார்கள் மற்றும் **3072** குழந்தைகள் ஆபாச இணையதள புகார்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு **81** வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழக காவல்துறை சார்பில் **1542** குழந்தைகள் உதவி மைய அதிகாரிகள் காவல் நிலையங்களில் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு குழந்தைகள் தொடர்பான குற்றங்களை திறம்பட கையாண்டு வருகின்றனர்.

கடந்த வருடம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு சிறந்த சேவை புரிந்ததற்காக இந்திய

அளவில் வழங்கப்படும் மதிப்பு வாய்ந்த விருதான "ஸ்காச்" (SKOCH) விருதை இப்பிரிவு பெற்றுள்ளது.

## VIII. சாலைப் போக்குவரத்து விபத்துகள்

வாகனங்கள் மற்றும் மக்கள் தொகை வேகமாக அதிகரித்து வரும் சூழ்நிலையில் சாலை விபத்துகளைத் தடுப்பது அரசின் முக்கிய நோக்கமாக உள்ளது. போக்குவரத்து விதிகளை முறையாகக் கடைப்பிடிப்பதன் மூலமும், போக்குவரத்து மேலாண்மை முறையை நவீனமயமாக்குவதன் மூலமும் மட்டுமே சாலைப் பாதுகாப்பை மேம்படுத்த முடியும் என்பதில் காவல் துறை உறுதியாக உள்ளது. நெடுஞ்சாலைகளில் தீவிர ரோந்து பணிகளை மேற்கொள்வது, போக்குவரத்து விதிகளை முறையாக அமல்படுத்துவது, பிற குற்றச் சம்பவங்களை சாலைகளில் தடுப்பது, விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்கள் மீது உடனடி கவனம் செலுத்தி உயிர்காக்கும் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு

விரைந்து அழைத்துச் செல்வது சாலை பாதுகாப்பில் முக்கிய அம்சமாகும். **01.01.2022** நிலவரப்படி, மாநிலத்தில் சுமார் **3.19** கோடி வாகனங்கள் இயக்கப்படுகின்றன. அவற்றில் **2021**-ஆம் ஆண்டில் மட்டும் **14.60** லட்சம் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. **2021** - ஆம் ஆண்டில் **55,682** சாலை விபத்து வழக்குகள் பதிவாகியுள்ளன. இதில் **15,384** பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் **55,996** பேர் காயமடைந்துள்ளனர்.

சாலைப் பாதுகாப்பு கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகள் பிற முக்கிய துறைகளுடன் ஒருங்கிணைந்து நடத்தப்படுகிறது. சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு சாலையைப் பயன்படுத்துவோர் மற்றும் ஓட்டுநர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக ஊடகங்கள், உள்ளூர் தொலைக்காட்சி, கல்வி நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் ஏற்படுத்தப்படுகிறது. அபராதத் தொகையை இ-சலான் மூலம் கூகுள் பே, போன் பே போன்ற

இணைய சேவையைப் பயன்படுத்தி செலுத்தும் முறை 02.09.2021 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

**2022-2023-ஆம் ஆண்டுக்கான உத்தேச செயல் திட்டம்**

- விபத்துகளை கண்காணிக்கவும், விபத்துகள் அடிக்கடி நிகழும் இடங்களில் குறைகளை சரிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மண்டலம் மற்றும் மாவட்ட வாரியாக அந்த இடங்கள் நேரில் பார்வையிடப்பட்டு விபத்து நிகழா வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக ஒவ்வொரு மாதமும் அனைத்து மாவட்டங்கள் / மாநகரங்களில் மாவட்ட ஆட்சியர்களால் மாவட்ட சாலைப் பாதுகாப்பு குழுக்கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

- மாவட்ட அதிகாரிகள் மூலம் ஒவ்வொரு முக்கிய சாலையிலும் சாலைப் பாதுகாப்பு தணிக்கை நடத்தப்படும்.

**2021 ஆம் ஆண்டின் சாதனைகள்**

தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் விபத்து நடந்த இடத்தை விரைவாக சென்றடையவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான நேரத்தில் உதவவும் **304** நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் இயக்கப்படுகின்றன.

நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்ட **'**தங்க மணி நேரம்**' (Golden Hour)** திறமையான மேலாண்மை காரணமாக, நெடுஞ்சாலைகளில் நடைபெற்ற **22,394** விபத்துகளில் **14,865** விபத்துகள் உடனடியாக கையாளப்பட்டு, விலைமதிப்பற்ற மனித

உயிர்களைக் காப்பாற்றுவதில் கணிசமாக இவ்வாகனங்கள் பங்களிப்பை அளித்துள்ளன.

மாண்புமிகு முதலமைச்சரின் "இன்னுயிர் காப்போம்-நம்மை காக்கும் **48**" என்ற திட்டம் 18.12.2021 அன்று அரசால் தொடங்கப்பட்டது. இதில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் **48** மணி நேரத்துக்கான அவசர சிகிச்சைக்கான செலவை உச்சபட்சமாக தனி நபர் ஒருவருக்கு ரூ.1 இலட்சம் வரை மாநில அரசே ஏற்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துகள் மற்றும் இறப்புகளை குறைக்கும் முதல் மூன்று மாவட்டங்கள் மற்றும் ஒரு மாநகரத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் "சிறந்த செயல்திறன் விருதுகள்" வழங்கப்பட்டு வருகின்றன.

## IX. காவல் துறையின் பல்வேறு பிரிவுகள் - ஒரு பார்வை

காவல் துறையில் பல்வேறு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன (*விளக்கப்படம் 11*). அவற்றில் சில பிரிவுகளின் விவரம் பின்வருமாறு:

**(i) குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (CB CID)**

1906-ம் ஆண்டு குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை ஒரு காவல் துறை துணைத்தலைவரின் தலைமையில் 37 காவல் ஆளிநர்களுடன் ஒரு சிறிய பிரிவாக உருவாக்கப்பட்டது. அப்போது அது சிறப்புப் பிரிவையும் சேர்த்து கவனித்துக் கொண்டிருந்தது. பின்னர் 1929-ம் ஆண்டு குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டு, சிறப்பு பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (SBCID) தனியாக உருவாக்கப்பட்டது. தற்போது குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை ஒரு காவல்துறை இயக்குநர் தலைமையில் 893 காவல் ஆளிநர்களைக் கொண்டு சிறப்புப் பிரிவுகளையும் சேர்த்து இயங்கி வருகிறது. 37 மாவட்ட பிரிவுகளைத் தவிர, 7 ஒருங்கிணைந்த குற்றத்தடுப்பு பிரிவுகள், 4 கள்ளநோட்டு தடுப்பு பிரிவுகள் மற்றும் 5 சிறப்பு புலனாய்வு பிரிவுகள் மாவட்டங்களில் / ஆணையரகங்களில் இயங்கி

வருகின்றன. மேலும் இணையதள குற்றத் தடுப்பு பிரிவு மற்றும் ஆட்கடத்தல் தடுப்பு பிரிவு ஆகிய சிறப்பு பிரிவுகள், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை தலைமையகத்தில் இயங்கி வருகின்றன. குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறையின் முக்கிய அலுவல் தமிழக அரசு, தமிழக காவல் துறை தலைவர் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றம் ஆகியோரால் ஒப்படைக்கப்படும் வழக்குகளில் புலன் விசாரணை செய்வதாகும்.

**01.05.2021** முதல் **28.02.2022** வரை தமிழக அரசு, தமிழக காவல் துறை தலைவர் மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றம் ஆகியோரால் ஒப்படைக்கப்பட்ட **73** இனங்களில் முக்கிய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. **27** வழக்குகளில் குற்றப் பத்திரிகை பல்வேறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்நீதிமன்ற வழக்குகளில்

21 வழக்குகளில் தண்டனை பெறப்பட்டுள்ளது. இதில் ஒரு வழக்கில் 4 ஆயுள் தண்டனைகள் பெறப்பட்டுள்ளன.

**(ii) மாநில நுண்ணறிவு பிரிவு (State Intelligence)**

**நுண்ணறிவுப் பிரிவு**

மாநில நுண்ணறிவுப் பிரிவானது, பாதுகாப்பு, அமைதி மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த தகவல்களைச் சேகரித்தல், ஒன்றிணைத்தல், பகிர்ந்தளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவில், தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, க்யூ-பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சிறப்புப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத்துறை மற்றும் திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு ஆகியன ஒவ்வொன்றும் ஒரு காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் இயங்கி வருகின்றன. மாநில நுண்ணறிவுப் பிரிவானது, காவல் துறை கூடுதல் இயக்குநர், நுண்ணறிவு அவர்களின் தலைமையின் கீழ்

இயங்குகிறது. இப்பிரிவுகளை ஒரு காவல்துறைத் தலைவர் மேற்பார்வையிடுகிறார். க்யூ பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, சிறப்புப்பிரிவு ஆகியவை காவல்துறைத் தலைவர் (உள் பாதுகாப்பு)-ன் கீழ் இயங்கி வருகிறது.

**தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை**

தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையின் பணியானது, இரகசிய மற்றும் மறைமுக நடவடிக்கைகள் மற்றும் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கக் கூடிய, மத நல்லிணக்கத்தை குலைக்கக் கூடிய, பல்வேறு மதத்தினர், சாதியினர் மற்றும் வகுப்பினர்களிடையே பகைமையை தூண்டக் கூடிய வகையிலான தனி நபர்கள் மற்றும் அமைப்புகளின் சூழ்ச்சியான செயல்கள் குறித்த தகவல்களை சேகரித்தல் ஆகும். இப்பிரிவானது, மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க ஏதுவாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டி சேகரித்த தகவல்களை பகுப்பாய்வு செய்து

முன்கூட்டியே சம்பந்தப்பட்ட மாவட்ட மற்றும் மாநகரங்களுக்கு பகிர்ந்து வருகிறது. இப்பிரிவில் தற்போது ஒரு காவல் கண்காணிப்பாளரும், இரண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களும், 11 துணை காவல் கண்காணிப்பாளர்களும், **83** காவல் ஆய்வாளர்களும், **182** உதவி காவல் ஆய்வாளர்களும், **249** தலைமைக் காவலர்களும் மற்றும் **329** காவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

**பாதுகாப்புப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை**

பாதுகாப்புப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையானது தமிழகத்திற்கு வருகை தரும் அயல்நாட்டு அதிபர்கள், இதர பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்கள் உள்ளிட்ட அதி முக்கிய / முக்கிய நபர்களுக்கான பாதுகாப்பு அளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமின்றி, தமிழகத்தில் பணிபுரியும் காவல்துறை ஆளிநர்களுக்கு, காவல்

தனிப்பிரிவு பயிற்சிப்பள்ளியின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பிரிவில் தற்போது இரு காவல் கண்காணிப்பாளர்களும், **3** துணை காவல் கண்காணிப்பாளர்களும், **23** காவல் ஆய்வாளர்களும், **124** உதவி காவல் ஆய்வாளர்களும், **90** தலைமை காவலர்களும், **28** காவலர்களும் மற்றும் வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயல் இழக்க வைக்கும் **(BDDS)** பிரிவைச் சேர்ந்த **5-** உதவி ஆய்வாளர்களும், 11- தலைமைக் காவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

## முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு

சிறப்பு பாதுகாப்புப் பிரிவை மூன்றாக பிரித்து **1997**ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் பாதுகாப்பிற்கென முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு துவக்கப்பட்டது. இது மாநில நுண்ணறிவுப் பிரிவின் ஒரு அங்கமாகும். இப்பிரிவு காவல் கண்காணிப்பாளர் தலைமையில்

ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 2 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 12 காவல் ஆய்வாளர்கள், 20 உதவி காவல் ஆய்வாளர்கள், 31 தலைமைக் காவலர்கள், 69 காவலர்கள் மற்றும் தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த 6 ஆய்வாளர்கள், 14-உதவி ஆய்வாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு**

மாநில நுண்ணறிவுப்பிரிவின் ஒரு அங்கமாக திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவானது அமைப்பு ரீதியாக செயல்படும் குற்றவாளிக் குழுக்கள், கும்பல் கொள்ளையர்கள், தலைமறைவு குற்றவாளிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் குறித்த பயனுள்ள, நடவடிக்கை எடுக்கத்தக்க நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து அத்தகவல்களை உள்ளூர் காவல் துறையினருக்கு பகிர்ந்தளிக்கும் பணிகளை மேற்கொள்கிறது. இப்பிரிவில்

தற்போது ஒரு காவல் கண்காணிப்பாளரும், 12 துணை காவல் கண்காணிப்பாளர்களும், 21 காவல் ஆய்வாளர்களும், 25 உதவி காவல் ஆய்வாளர்களும் மற்றும் 229 இதர காவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

**2021-ஆம் ஆண்டிற்கான சாதனைகள்**

**தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை**

பல்வேறு அமைப்புகளின் நடவடிக்கைகள் குறித்து தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையினரின் நுண்ணறிவுத் தகவல்களைக் கொண்டு மாவட்ட காவல்துறையினர் எடுத்த தீவிர நடவடிக்கைகள் காரணமாக அனைத்து போராட்டங்களும் சட்டம் ஒழுங்குக்கு எவ்வித குந்தகமும் விளைவிக்காத வகையில் அமைதியான முறையில் நடந்தேறியது.

தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையானது, சுகாதாரத்துறை உள்ளிட்ட பிற துறைகளுடன் இணைந்து பொதுமக்களை கோவிட்-19 பரிசோதனைக்கு உட்படுத்துவதிலும், தொற்றுக்குள்ளானவர்களை தனிமைப்படுத்தி தகுந்த மருத்துவ வசதிகளை வழங்குவதிலும் முழு மூச்சுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. தொற்று காலத்தில் வெளிநாட்டினர் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து வருபவர்கள் குறித்த தகவல்கள், அத்தியாவசிய பொருட்களின் இருப்பு நிலவரம், முக்கிய சந்தைகளில் நிலவிய குறைபாடுகள் மற்றும் தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்த தகவல்களை தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை உடனுக்குடன் அரசுக்கு வழங்கியது. அத்தியாவசியப் பண்டங்கள் மற்றும் வாகன எரிபொருள் விலையேற்றம், ஒன்றிய அரசின் வேளாண் சட்டங்கள், மேகதாதுவில் காவிரியின் குறுக்கே கர்நாடக அரசு அணை கட்ட முயற்சித்தல் போன்றவைகளுக்கு எதிராக பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் மீனவர் சங்கங்கள்

நடத்திய போராட்டங்கள் எவ்வித சட்டம் ஒழுங்கு பிரச்சினையுமின்றி திறமையாக கையாளப்பட்டது.

பல்வேறு சாதிச் சங்கங்கள்/அரசியல் கட்சிகளால் கடைபிடிக்கப்பட்ட சாதித் தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாட்களில் மேற்கொள்ளப்பட்ட தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த தகவல்களின் பேரில் எவ்வித அசம்பாவித சம்பவமுமின்றி அமைதியாக நடந்து முடிந்தது.

கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக பொது இடங்களில் விநாயகர் சிலைகள் நிறுவக்கூடாது மற்றும் விநாயகர் சிலை கரைப்பு ஊர்வலங்கள் நடத்தக் கூடாது என்ற மாநில அரசின் முடிவைத் தொடர்ந்து, மாநிலத்தில் செப்டம்பர் (10.9.2021 மற்றும் 18.9.2021) மாதம் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி விழாக்களும், பாபர் மசூதி இடிப்பு தின (டிசம்பர் 6) அனுசரிப்பும் அமைதியாக நடைபெற்றன.

**பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை:**

**அதி முக்கிய நபர்களின் பாதுகாப்பு**

மாநிலத்திற்கு வருகை தரும் முக்கிய மற்றும் அதிமுக்கிய நபர்களுக்கும், முக்கிய நிகழ்வுகளின் போதும் முழுமையான பாதுகாப்பை வழங்குவதில் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. இக்காலக்கட்டத்தில் வெளி மாநிலத்திலிருந்து வந்த **887** அதி முக்கிய நபர்களுக்கும், தமிழ்நாட்டைச் சேர்ந்த **218** முக்கிய நபர்களுக்கும் சிறப்பான திட்டமிடல் மற்றும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அவர்களின் வருகை அமைதியாக நடந்தேறியது.

**குடிபெயர்தல்**

பாதுகாப்புப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகள், தூத்துக்குடி, இராமேஸ்வரம், கடலூர், நாகப்பட்டினம், காட்டுப்பள்ளி கடல் துறைமுகங்கள் மற்றும் மதுரை விமான நிலையம் ஆகிய துறைமுக பதிவு

அலுவலகங்களில் துறைமுக பதிவு அதிகாரிகளாக பணியமர்த்தப்பட்டு, அந்நிய நாட்டு பயணிகள் மற்றும் கப்பல் ஊழியர்களின் வருகை மற்றும் புறப்பாடு ஆகியவற்றை சோதனையிட்டு அனுமதிப்பர். இக்காலகட்டத்தில், துறைமுக / விமான பதிவு அதிகாரிகள் **1,910** விமானங்கள் மற்றும் கப்பல்களின் வருகை மற்றும் புறப்பாட்டினை கையாண்டு, அயல்நாட்டினர் வருகை **(38,917)** மற்றும் அயல்நாட்டவரின் புறப்பாடு **(41,418)** குறித்து உரிய ஒப்புதல் அளித்துள்ளனர்.

**பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்**

இக்காலகட்டத்தில், பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் மத்திய நுண்ணறிவுப் பிரிவு மற்றும் தொழில் பாதுகாப்புப் படையுடன் இணைந்து மாநிலத்தில் **6** பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பாதுகாப்பு சோதனை நடத்தியுள்ளனர்.

**முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு**

இக்காலகட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 757 உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட / வெளிமாநில பயணங்கள் மற்றும் குடியரசு/சுதந்திர தின விழாக்களின் போதும் பாதுகாப்புப் பிரிவு காவல்துறையினர் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

**திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு**

**போக்கிரிகளின் நடவடிக்கைகள்**

கடந்த வருடத்தில், உயிருக்கு அச்சுறுத்தல் தொடர்பான 1,400 விழிப்பூட்டு எச்சரிக்கை தகவல்கள் அனுப்பப்பட்டு அதன் அடிப்படையில், 467 எதிரிகள் கைது செய்யப்பட்டனர். மேலும் 206 நபர்களிடம் குற்றவியல் விசாரணை சட்ட விதிகளின் 107/110ன் கீழ் நன்னடத்தைப் பத்திரம் பெறப்பட்டது. குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் 10 எதிரிகள் தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டனர். பிணையில் வெளிவர முடியாத

98 பிடியாணைகள் நிறைவேற்றப்பட்டன. 42 புதிய அழைப்பாணைகள் வழங்கப்பட்டன. 75 போக்கிரிகள் மீதான வரலாற்றுப் பதிவேடுகள் துவக்கப்பட்டன.

## ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்து பொருட்கள்

இக்காலகட்டத்தில், சுமார் 224 எச்சரிக்கை குறிப்பாணைகள் நகரங்களுக்கும் மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. திட்டமிட்ட குற்றத்தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு காவல் துறையினர் 11-எஸ்.பி.எம்.எல். துப்பாக்கி, 3-ஏர்கன், 2-பெரிய அளவிலான ரவை குண்டுகள், 27-நாட்டு வெடிகுண்டுகள், 1,513 - வெடிமருந்து எலக்ட்ரிக் டெட்னேட்டர்கள், 3,405 - ஸ்லர்ரி, 6 - உந்துவிசைகள், 500 கிராம் பால்ரஸ், 50-சிறிய தோட்டாக்கள், 2.5 கிலோ கரிபவுடர், 6 கிலோ வெள்ளை பாஸ்பரஸ், 200 கிராம் துப்பாக்கி பவுடர், 2 மூட்டைகள் ப்யூஸ் ஆகியவற்றை சமூக விரோதிகள் மற்றும் போக்கிரிகளிடமிருந்து பறிமுதல் செய்தனர்.

**ஆட்கடத்தல் மற்றும் போதை பொருட்கள் கடத்தல்**

**2021**-ஆம் ஆண்டு, சுமார் **1,019** விழிப்பூட்டு எச்சரிக்கைகள் மாநகரங்களுக்கும், மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டன. இக்காலகட்டத்தில் திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு காவல்துறையினரால் **1,56,170** ரூபாய் மதிப்பிலான **36,199.55** கிலோ மதிப்புள்ள புகையிலை பொருட்கள், **69.92** இலட்சம் மதிப்பிலான **699.25** கிலோ கஞ்சா ஆகியவை பல்வேறு நகரங்கள்/மாவட்டங்களிலிருந்து கைப்பற்றப்பட்டன. இத்தகைய திட்டமிட்ட குற்றத்தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினரின் இரகசிய தகவலின் பேரில் ரூபாய் **13.13** கோடி மதிப்பிலான **13,129.72** கிலோ கஞ்சாவும் மற்றும் ரூபாய் **1.05** கோடி மதிப்பிலான **10,482** கிலோ தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் ஆகியவை காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டன.

**கலப்பட டீசல்**

இப்பிரிவினர் கொடுத்த தகவல்படி மூன்று குற்றவாளிகளை, சட்டத்திற்கு புறம்பாக கலப்படம் செய்யப்பட்ட **9000** லிட்டர் டீசலை வைத்திருந்த குற்றத்திற்காக குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு துறையினர் கைது செய்தனர். மேலும் டேங்கர் லாரி மற்றும் இதர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

**பொது விநியோக திட்டம் (PDS) அரிசி**

இக்காலகட்டத்தில், திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினர் உதவியுடன் **366** டன் பொது விநியோக திட்ட ரேஷன் அரிசியை பறிமுதல் செய்தனர். இது சம்பந்தமாக, **75** நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து **22** இரு சக்கர வாகனங்கள், **8** மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் **42** நான்கு சக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

**சிறைச்சாலை நடவடிக்கைகள்**

இக்காலகட்டத்தில், மொத்தம் **65** விழிப்பூட்டு எச்சரிக்கைகள் சிறைத்துறை இயக்குநர் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் / மாநகர காவல் ஆணையாளர்களுக்கு அனுப்பப்பட்டு சிறைவாசிகளின் பாதுகாப்பு, சிறை மாற்றம் செய்தல் மற்றும் அவர்களின் நடவடிக்கைகளை கண்காணித்தல் ஆகிய செயல்பாடுகளின் விளைவாக எவ்வித பெரிய அளவிலான அசம்பாவிதமும் நடைபெறாமல் பாதுகாக்கப்பட்டது.

**2022-2023-ஆம் ஆண்டிற்கான உத்தேச செயல்திட்டம்**

**பாதுகாப்புப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை**

**2022**-ம் ஆண்டிற்கான காவல் சிறப்பு பயிற்சிப் பள்ளியின் வருடாந்திர பயிற்சிகள் மற்றும் சிறப்புப் பயிற்சிகள் நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள காவலர்களுக்கு அனைத்து காவல் பயிற்சிகளையும்

செவ்வனே நடத்தி முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**க்யூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை**

**1967-1970-**ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நக்சலைட்டுகளின் சட்டவிரோத செயல்பாடுகள் தலை தூக்கிய போது தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் தனியாக ஒரு பிரிவு **26.07.1970-**ல் உருவாக்கப்பட்டது. தனிப்பிரிவு-**II** குற்றப் புலனாய்வுத் துறை என்ற பெயரில் இயங்கிவந்த இப்பிரிவு, 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 'க்யூ' பிரிவில் ஒரு காவல் கண்காணிப்பாளர், **3** கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், **13** துணைக் கண்காணிப்பாளர்கள், **34** காவல் ஆய்வாளர்கள், **293** சார்பு காவல் ஆய்வாளர்கள் மற்றும் **586** இதர காவல் ஆளிநர்கள் ஆக **930** பேர் பணிபுரிகின்றனர்.

'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் பிரிவுகள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு நக்சலைட்டுகள், தீவிரவாதிகள் மற்றும் போராளிகளின் நடவடிக்கைகள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து வருவதோடு, அத்தகைய தீய சக்திகள் மாநிலத்தில் களம் அமைக்காத வகையில், அவர்களைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மேலும் 'க்யூ' பிரிவானது, வழக்குகளின் புலன் விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம், களத்தில் பெறப்படும் நுண்ணறிவுத் தகவல்களையும், விசாரணையையும் ஒருங்கிணைத்து சிறப்பான நடவடிக்கைகளுக்கு வழிவகை செய்கிறது. 'க்யூ' பிரிவு, இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து தமிழகத்தில் தங்கியிருப்போர் மற்றும் சட்டத்துக்கு விரோதமாக செயல்படும் இலங்கை குடியுரிமை பெற்றவர்களின் நடவடிக்கைகளையும் கண்காணித்து வருகிறது.

## 2021- 2022 ஆம் ஆண்டிற்கான சாதனைகள்

### வழக்குகள்

இக்காலகட்டத்தில் 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது இலங்கைத் தமிழர்கள், சி.பி.ஐ. மாவோயிஸ்ட் இயக்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் உள்ளூரைச் சேர்ந்தவர்கள் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் 10 வழக்குகள் பதிவு செய்துள்ளது.

### தண்டனைகள்

இக்காலக்கட்டத்தில் 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர் இலங்கைத் தமிழர்கள் தொடர்பான வழக்குகளில் மேற்கொண்ட தரமான புலனாய்வின் காரணமாக மூன்று வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன.

**கைது நடவடிக்கைகள் மற்றும் சரணடைதல்**

ரூ. 2 லட்சம் ரொக்க வெகுமதி அளிக்கப்படும் என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டவரும், வருசநாடு காவல்நிலைய குற்ற எண்.111/2007 (மாவோயிஸ்ட் சிந்தனைகளை பிரச்சாரம் செய்தது மற்றும் துண்டு பிரசுரங்களை விநியோகித்தது தொடர்பான வழக்கு) வழக்கில் சம்பந்தப்பட்டவருமான 10 ஆண்டுகளுக்கும் மேலாக தலைமறைவாக இருந்த மாவோயிஸ்ட் 03.12.2021 அன்று மகாராஷ்டிரா மாநிலம், கட்சிரோலி மாவட்டத்தில் தமிழக க்யூ பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு, தமிழகம் அழைத்து வரப்பட்டு, 05.12.2021 அன்று நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்.

இராமநாதபுரம் க்யூ பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, குற்ற எண். 01/2015 வழக்கில் தொடர்புடையவரும், 5 வருடமாக தேடப்பட்ட தலைமறைவு எதிரியும் முன்னாள்

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவருமான இலங்கைத் தமிழர் ஒருவர் **16.12.2021** அன்று திருச்சியில் கைது செய்யப்பட்டார்.

**தமிழக காவல்துறையிடம் சரணடைந்த பெண் மாவோயிஸ்ட்டுக்கு மறுவாழ்வு**

கர்நாடக மாநிலத்தில் **40**-க்கும் மேற்பட்ட வழக்குகளில் தொடர்புடைய தலைமறைவு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி-(மாவோயிஸ்ட்) உறுப்பினர் ஒருவர் திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் **18.12.2021** அன்று சரணடைந்தார். **30.12.2021** அன்று சென்னை க்யூ பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வு மற்றும் மறுவாழ்வு குழு கூட்டத்தில் சரணடைந்த இந்த மாவோயிஸ்ட் உறுப்பினர் கர்நாடக மாநிலம், துங்கபத்திரா தளம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) பகுதி குழு உறுப்பினர் என அடையாளம் காணப்பட்டார். அக்குழு

வழிகாட்டுதலின்படி சரணடைந்த இவருக்கு அளிக்க வேண்டிய மறுவாழ்வு தொகுப்பை முடிவு செய்து, அவருக்கு ரூ.1.5 இலட்சம் நிவாரணத் தொகையும், மாதம் ஒன்றுக்கு ரூ.4,000 வீதம் 36 மாதங்களுக்கு உதவித் தொகையும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**சட்டவிரோத ஆட்கடத்தல்**

மே 2021 முதல் 20.3.2022 வரை 62 இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வது க்யூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரால் தடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய குற்றங்களில் ஈடுபட்ட முகவர்கள் உள்ளிட்ட 24 இலங்கைத் தமிழர்கள் மற்றும் 25 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**பறிமுதல்கள்**

**01.05.2021** முதல் **20.03.2022**-க்கான இடைப்பட்ட காலத்தில் தூத்துக்குடி, நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட க்யூ பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையினர் இலங்கைக்கு கடத்திச் செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த **17,355** கிலோ விரலி மஞ்சள், **2210** கிலோ கஞ்சா, **505** கிலோ பீடி இலைகள் மற்றும் **2** கிலோ அம்பர்கிரிஸ், **10** கிலோ மெத்தாம்பேட்டமைன் (போதைப்பொருள்) மற்றும் **550** கிலோ ஏலக்காய் ஆகியவற்றை பறிமுதல் செய்துள்ளனர்.

**சிறப்பு பிரிவு-தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையின் செயல்பாடுகள்**

கோவை தொடர் குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து மத அடிப்படைவாத மற்றும் தீவிரவாத அமைப்புகள் தொடர்பான நுண்ணறிவுத் தகவல்களை திரட்டி அவைகளின் நேரடி மற்றும் மறைமுக நடவடிக்கைகளைக்

கண்காணிக்கவும், சட்ட விரோத நடவடிக்கைகளை தடுப்பதையும் குறிக்கோளாகக் கொண்டு 1998-ல் சிறப்புப் பிரிவு துவக்கப்பட்டது. சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 இடங்களில் சிறப்பு நுண்ணறிவுப் பிரிவு தற்போது இயங்கிவருகிறது.

அமைதி மற்றும் மதநல்லிணக்கத்தைப் பேணும் வகையில் தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன

- மத அடிப்படைவாத / பயங்கரவாத அமைப்புகளின் வெளிப்படையான மற்றும் இரகசிய நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் மதவாத / மத அடிப்படைவாதிகள் மற்றும் பயங்கரவாதிகளின் தீய செயல் திட்டங்களை முறியடிக்க பயனுள்ள நடவடிக்கைகளை எடுப்பது.

- மதவாத பிரச்சினைகள் தொடர்பாகவும் மற்றும் சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்யப்படும் மதவாத பிரச்சினைகள் மற்றும் மதநல்லிணக்கத்தை சீர்குலைக்கும் ஆத்திரமூட்டும் / அவதூறான பதிவுகள் பற்றிய உளவுத்துறை உள்ளீடுகளை சேகரித்து உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு பகிர்தல்.

- தீவிரவாத சிந்தனை கொண்டவர்களை நல்வழிப்படுத்துவதற்கான முழுமையான நிகழ்ச்சிகளை நடத்துவது.

- சிறப்பு பிரிவிற்கு காவல் கண்காணிப்பாளர் - 1, கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் -2, துணை காவல் கண்காணிப்பாளர்கள் - 9, காவல் ஆய்வாளர்கள் -25, காவல் உதவி ஆய்வாளர்கள் - 90, தலைமை காவலர்கள் - 128, காவலர்கள் - 44 உட்பட

மொத்தம் **299** காவல் அதிகாரிகள் / ஆளிநர்களுடன் செயல்பட்டு வருகிறது.

- சிறப்பு பிரிவின் மூலம் சமூக வலைதளங்களில் மதங்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்தும் கருத்துகள் அடங்கிய பதிவுகள் ஒரு குழுவினரின் மூலம் தினந்தோறும் கண்காணிக்கப்பட்டு, அவ்வப்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வதந்தி பரப்புதல் மற்றும் மதவாத பதற்றம் உடனுக்குடன் தடுக்கப்படுகிறது.

- விநாயகர் சதுர்த்தி ஊர்வலம், பாபர் மசூதி இடிப்பு நினைவு தினம் போன்ற மத நிகழ்வுகள் தொடர்பான நுண்ணறிவுத் தகவல்கள் சிறப்பு பிரிவின் மூலம் திரட்டப்பட்டு தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் **2021 - 2022** ம் ஆண்டு எந்தவித

சிறு அசம்பாவிதங்களுமின்றி மேற்கண்ட நிகழ்வுகள் நடைபெற்றது.

- தமிழகத்தில் இரகசியமாக செயல்பட்டு வந்த ஒரு அமைப்பு வேற்றுமத தலைவர்களை தாக்க திட்டமிட்ட சதிசெயல்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு எதிராக வழக்குகள் பதியப்பட்டு, கைது செய்யப்பட்டு அவர்களின் திட்டம் முறியடிக்கப்பட்டது.

- சிலநாடுகளில் தடைசெய்யப்பட்ட உலகளாவிய ஒரு அடிப்படைவாத அமைப்பின் அனுதாபிகள் அடையாளம் காணப்பட்டு அவர்களின் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவர்களின் சதிச்செயல்கள் முறியடிக்கப்பட்டன.

- சில தீவிரவாத இயக்கங்களின் கொள்கை சார்ந்த தீவிரவாத எண்ணம் கொண்ட இளைஞர்கள் கண்டறியப்பட்டு, அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக மத அறிஞர்கள், மனோதத்துவ நிபுணர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின்

உதவியுடன் சிறப்புப் பிரிவில் **2021 - 2022**-ம் ஆண்டில் 11 நபர்கள் நல்வழிப்படுத்தப்பட்டனர். இக்குழுவின் மூலம் இதுவரை 61 தீவிரவாத சிந்தனையுடைய இளைஞர்கள் நல்வழிப்படுத்தப்பட்டுள்ளனர்.

- வங்கதேசத்திலிருந்து சட்டவிரோதமாக திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் குடியேறிய **58** நபர்கள் இதுவரை கண்டறியப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். மியான்மர் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தை தொடர்ந்து, தமிழ்நாட்டில் உரிய ஆவணங்களின்றி குடியேறியுள்ள **88** ரோஹிங்கியா இனத்தவர்கள் செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கத்தில் தங்க வைக்கப்பட்டு, தவறான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருக்க தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- இதனால் தமிழகம் மதமோதல்களின்றி அமைதிப் பூங்காவாக திகழ்ந்து வருகிறது.

## (iii) குற்றப்பிரிவு (Crime Wing)

குற்றப்பிரிவானது போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவு பிரிவு மற்றும் அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

### (அ) போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு (குற்ற புலனாய்வுத் துறை)

போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவானது (குற்ற புலனாய்வுத் துறை) சென்னையில் 17.12.1963 அன்று ஏற்படுத்தப்பட்டது. 1987, 1990, 1994 மற்றும் 1995-ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசு ஆணைகளின் படி திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திண்டுக்கல், தேனி, விழுப்புரம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், தூத்துக்குடி, வேலூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி

ஆகிய இடங்களில் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் இயங்கி வருகின்றன. தற்போது மொத்தம் 15 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வருகின்றன. போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களை தயாரித்தல், பயன்படுத்துதல், கடத்துதல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை பற்றி நுண்ணறிவு தகவல்களை சேகரித்தல் மற்றும் இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வது ஆகியவை இப்பிரிவின் முக்கிய பணிகள் ஆகும்.

உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் கீழ் இயங்கும் போதைப் பொருள் நுண்ணறிவுப் புலனாய்வுப் பிரிவானது காவல் துறை கூடுதல் இயக்குநர், குற்றம் (SIT) அவர்கள் தலைமையில், ஒரு காவல் துறைத் தலைவர் (குற்றம்) (ANTF), ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு கூடுதல் காவல்

கண்காணிப்பாளர், 12 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 126 காவலர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது.

**2021ம் ஆண்டின் சாதனைகள்**

- **2021**-ம் ஆண்டில் **20.45** டன் எடையுள்ள போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அது சம்பந்தமான **6,853** வழக்குகளில் தொடர்புடைய 19 வெளிநாட்டினர் உட்பட மொத்தம் **9,571** குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- மாநிலங்களுக்கிடையே கூட்டாக சேர்ந்து போதைப் பொருட்கள் கடத்தலில் ஈடுபடும் ஆந்திரா, கர்நாடகம், ஒடிசா மற்றும் தெலுங்கானா மாநிலங்களை சேர்ந்த குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- மாநிலம் முழுவதும் உள்ள மருந்தகங்களில், போதிய ஆவணங்களின்றி விற்கப்படும் போதைப் பொருட்கள்

மற்றும் போதை மருந்துகளின் விற்பனையை தடுக்க மருந்தாய்வாளர்களுடன் இணைந்து திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

- தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களின் அதிகாரத்திற்குட்பட்ட நிதியின் கீழ் போதைப் பொருட்களை கடத்துபவரை கண்காணிக்க நுண்ணறிவு பிரிவிற்கென சிறப்பு தகவல் மையம் உருவாக்கப்பட்டுள்ளது.
- போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வினை ஏற்படுத்த தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் மூலம் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவிற்கென இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக குறும்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

- தற்போது மாநிலம் முழுவதும் 10 மோப்ப நாய்கள் போதைப் பொருட்களை கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவிற்கென தனியாக 3 மோப்ப நாய்கள் புதிதாக வாங்கப்பட்டு தற்சமயம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**2022 - 2023ம் ஆண்டிற்கான செயல்முறை மற்றும் நடவடிக்கைகள்**

- தமிழ்நாடு போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு மற்ற மாநிலங்களில் உள்ள சட்ட அமலாக்கப் பிரிவுகளுடன் இணைந்து கஞ்சா கடத்துவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு இப்பிரிவின் பணி மற்றும் சட்டம் சார்ந்த உயர் பயிற்சிகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் மீது துரித நடவடிக்கைகள் எடுக்க தனியாக குற்றப்பிரிவு தொடங்கப்படவுள்ளது.

**(ஆ) அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு (IPREC)**

தமிழகத்தில் திருட்டு வீடியோவை ஒழிக்கவும், காப்புரிமை சட்ட விதிமீறல்களை கட்டுப்படுத்துவதற்காகவும் தமிழ்நாடு காவல்துறையில் "திருட்டு வீடியோ தடுப்பு பிரிவு"என்ற புதிய பிரிவு உருவாக்கப்பட்டது. பெருகி வரும் அறிவுசார் சொத்துரிமை சட்ட மீறல்களை கருத்தில் கொண்டு திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவினை "அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு"என்ற பெயர் பின்னர் மாற்றம் செய்யப்பட்டது.

மாநிலம் முழுவதும் உள்ள இப்பிரிவில் 12 அலகுகளுக்கு 1 காவல் கண்காணிப்பாளர், 1 துணை காவல் கண்காணிப்பாளர், 12 ஆய்வாளர்கள், 14 சார்பு-ஆய்வாளர்கள், 76 காவல் ஆளிநர்கள் உட்பட மொத்தம் 104 காவல் ஆளிநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவின் செயல்பாடு**

- 1957-ம் ஆண்டு பதிப்புரிமை சட்டம் மற்றும் 1984-ம் ஆண்டு கேபிள் டி.வி. ஒழுங்குமுறை சட்டம் ஆகியவற்றை அதற்குரிய இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளுடன் நடைமுறைப் படுத்தி வருகிறது.

- போலியான பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையை கண்டுபிடித்து மேற்படி குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மீது தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும்

அவற்றை கைப்பற்றுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

- சட்ட விரோதமாக திரைப்படங்களை காட்சிப் படுத்துதல் மற்றும் வலைதளங்களில் பதிவேற்றம் செய்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மேலும் திருட்டுத் தனமாக திரையரங்குகளில் திரைப்படங்களை வீடியோ எடுத்தல் மற்றும் நகல் எடுக்க அனுமதிக்கும் மற்றும் ஈடுபடும் திரையரங்க உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களை கண்டுபிடித்து அவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுத்து வருகிறது.

**2021 - 2022 ஆம் ஆண்டிற்கான சாதனைகள்**

- **2021**-ம் ஆண்டில், **145** பதிப்புரிமை சட்ட மீறல் வழக்குகளும், **6** கேபிள் டி.வி. ஒழுங்குமுறை சட்ட மீறல் வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு சுமார் **63.40** இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

- **2021**-ம் ஆண்டு **348** வழக்குகளில் நீதிமன்றத்தின் மூலம் எதிரிகளுக்கு தண்டனை பெறப்பட்டுள்ளது.

- நடப்பு **2022**-ம் ஆண்டில், பிப்ரவரி மாதம் முடிய **13** அறிவு சார் சொத்துரிமை சட்ட மீறல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு **9.89** இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(iv) பொருளாதாரக் குற்றப்பிரிவு**

வணிகவியல் குற்றப்புலனாய்வுப் பிரிவு கடந்த **25.06.1967** முதல் தமிழ்நாட்டின் கூட்டுறவு சங்கங்கள் சார்ந்த வணிகக் குற்றங்களை புலனாய்வு செய்து வருகிறது. பொருளாதாரக் குற்றப் பிரிவானது, குற்றப் பிரிவு புலனாய்வுத் துறையிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு, கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் தலைமையில் **30.12.1999** முதல் தனிப் பிரிவாக செயல்பட்டு வருகிறது. இப்புதிய பிரிவு வங்கியல்லாத நிதி நிறுவனங்கள், முறைப்படி பதிவு செய்யப்படாமல் இயங்கி வரும் நிதி நிறுவனங்கள் சார்ந்த வழக்குகளைக் கையாண்டு வருகிறது.

ஒருங்கிணைக்கப்பட்ட பொருளாதாரக் குற்றப்பிரிவு தற்போது 1 காவல்துறை கூடுதல் இயக்குநர், **4** காவல்துறை கண்காணிப்பாளர்கள், **20** காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள், **63** காவல்துறை ஆய்வாளர்கள்,

72 காவல்துறை உதவி ஆய்வாளர்கள் மற்றும் 397 இதர ஆளினர்களுடன் இயங்கி வருகிறது.

ஒருங்கிணைக்கப்பட்ட இப்பிரிவில் 01.05.2021 முதல் 120 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு 72 வழக்குகளில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 8603 முதலீட்டாளர்கள் தங்களின் முதலீட்டு தொகையான ரூ.191.08 கோடி வரை இழந்துள்ளனர். 36 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளது.

இக்கால கட்டத்தில் கூட்டுறவு சங்கங்களில் ரூ.17.84 கோடி முறைகேடு நடைபெற்று அதில் ரூ.1.97 கோடி கைப்பற்றப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. சிறப்பு நீதிமன்ற விசாரணையில் இருந்த 59 வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டு, 46 வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளது.

மிக அதிகபட்சமாக 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் குற்றவாளிக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 128 பிடியாணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1057 முதலீட்டாளர்கள்/ பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.10.35 கோடி பணம் திரும்ப வழங்கப்பட்டுள்ளது. ரூ.113.41 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு அரசால் பறிமுதல் செய்யப்படவும் அதன்முலம் முதலீட்டாளர்கள் / பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**முன்மொழியப்பட்ட திட்டங்கள்**

பொருளாதாரக் குற்றப்பிரிவில் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்கள், ஆவண சேகரிப்பு முடித்து, வழக்குகளில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தருவதே முக்கிய நோக்கமாகும். சிறந்த முறையில் செயல்படும் புலனாய்வு,

தண்டனை பெற்றுத் தருதல் ஆகியவை பிரதான நடைமுறை செயல்களாகவும், இச்செயல்பாட்டின் மூலம் முதலீட்டாளர்களின் பணத்தை திரும்ப தர தவறியவர்கள் குற்றவாளிகள் மற்றும் வழக்கு சொத்துக்களை கண்டறிதல், கைப்பற்றுதல், ஏலம் விடுதல், முதலீட்டாளர்களுக்கு பணம் திரும்ப பெற்றுத் தருதல் போன்ற திறன் சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறப்பு நீதிமன்றங்களில் **1366** வழக்குகள் விசாரணையில் உள்ளன. வழக்கு விசாரணையில் விரைவான முன்னேற்றம் காண அனைத்து புலனாய்வு அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தற்போதைய நிலையில், பழைய வழக்குகள், குறிப்பாக **10** ஆண்டுகளுக்கும் மேல் நிலுவையில் உள்ள வழக்குகளை **2022**-க்குள் விரைந்து முடிவுக்கு கொண்டு வர அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொருளாதார குற்றப் பிரிவு, தனியார் நிதி நிறுவனங்கள், சிட்ஃபண்டுகள், வங்கி சாரா நிதி நிறுவனங்களின் சட்ட விரோத செயல்பாடுகள், பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கூட்டுறவு சங்கங்கள் / நிறுவனங்களில் ஏற்படக் கூடிய நிதி இழப்புகள், கையாடல்கள் குறித்து மேற்படி அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்குதல் போன்ற பணிகளைச் செய்து வருகிறது.

**(v) சிலைத் திருட்டுத் தடுப்பு பிரிவு**

தொன்மை (**Antiques**) வாய்ந்ததாக கருதப்பட்ட சிலைத் திருட்டு வழக்குகளை புலனாய்வு செய்ய இப்பிரிவு **1983**-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பிரிவின் தலைவராக காவல்துறை இயக்குனர் அவர்களும், அவருக்கு உதவியாக காவல்துறை தலைவரும் உள்ளனர். இப்பிரிவு காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களின் நேரடி மேற்பார்வையில் ஒரு

துணை காவல் காண்காணிப்பாளர், ஐந்து காவல் ஆய்வாளர்கள் மற்றும் **23** காவலர்களுடன் இயங்கி வருகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள காவலர்கள் மற்றும் அதிகாரிகள் மட்டுமல்லாது உயர்நீதிமன்ற உத்தரவுப்படி **3** கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், **3** காவல் துணை கண்காணிப்பாளர்கள், **9** ஆய்வாளர்கள், **25** உதவி ஆய்வாளர்கள் உட்பட மொத்தம் **129** காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் அயல்பணியாக பல்வேறு மாவட்டங்களிலிருந்து சிலைத் திருட்டுத் தடுப்பு பிரிவில் அயல் பணியில் உள்ளார்கள்.

சிறப்பு புலனாய்வு குழுவின் தலைமை அலுவலகம் திருச்சியில் உள்ளது. சென்னையில் உள்ள தலைமை அலுவலகம் தவிர கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் சென்னை (வடக்கு மண்டலம்), திருச்சி மற்றும் கும்பகோணம் (மத்திய மண்டலம்), மதுரை

மற்றும் திருநெல்வேலி (தெற்கு மண்டலம்), கோயம்புத்தூர் மற்றும் சேலம் (மேற்கு மண்டலம்) ஆகிய மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது.

**மே 2021-க்குப் பிறகு இப்பிரிவின் செயல்பாடுகள்**

- சிலைத் திருட்டுத் தடுப்பு பிரிவின் பெரும் முயற்சியின் விளைவாக கடந்த காலங்களில் தமிழகத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட கோவில் சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.

- இப்பிரிவின் சட்ட பூர்வமான வேண்டுகோள் கடிதங்களின் (Letters Rogatory) விளைவாக அமெரிக்காவில் இருந்து 2 சிலைகளும் (நின்ற கோலத்தில் உள்ள பார்வதி / ஸ்ரீதேவி, வரதராஜ பெருமாள்) ஆஸ்திரேலியாவில் இருந்து ஒரு சிலையும் (குழந்தை சம்பந்தர்) சமீபத்தில் மீட்கப்பட்டு தற்போது புதுடெல்லி இந்திய தொல்லியல் துறையினரின்

வசம் உள்ளது. அவை விரைவில் தமிழகம் வந்தடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- மேலும் இப்பிரிவின் தொடர் முயற்சியின் விளைவாக அமெரிக்காவில் இருந்து 7 புராதன சிலைகள் (நடராஜர், கங்காளமூர்த்தி, நந்திகேஸ்வரர், சிவன், பார்வதி மற்றும் இரண்டு துவாரபாலகர் சிலைகள்) இந்தியா கொண்டு வரப்பட்டு புதுடெல்லி இந்திய தொல்லியல் துறையினரின் வசம் உள்ளது. மேற்கூறிய அனைத்து சிலைகளையும் மீட்டு உரிய கோயில்களில் ஒப்படைக்க உள்ளது.

- மேலும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் மற்றும் இங்கிலாந்தில் உள்ள 31 தொன்மையான சிலைகளை மீட்டு இந்தியாவிற்கு கொண்டு வர வேண்டுகோள் கடிதங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றது.

- சிலை கடத்தல் வழக்குகளில் மீட்கப்பட்ட **850** சிலைகளும் பாதுகாப்பாக எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்திலும், திருவொற்றியூர் சிலைகள் பாதுகாப்பு மையத்திலும் வைக்கப்பட்டுள்ளது. தேசத்தின் கலாச்சார நினைவுச்சின்னங்கள் மற்றும் பாரம்பரியத்தை சித்தரிக்கும் வகையில் கைப்பற்றப்பட்ட சில சிலைகளை எழும்பூர் காவல் அருங்காட்சியகத்தில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

- இவ்வாண்டில் தற்போது வரை **30** முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்குகளில் சம்பந்தப்பட்ட **126** சிலைகள் கைப்பற்றப்பட்டு **35** குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். **2021**-ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை மொத்தம் **80** பிடியாணைகள் நிறைவேற்றப்பட்டன.

- தமிழகத்திற்கு சொந்தமான பழங்கால சிலைகள் மற்றும் கலை பொருட்கள் வெளிநாட்டு அருங்காட்சியகங்களில் இருப்பதை அடையாளம் காணும் பொருட்டு இணையதளங்களை ஆய்வு செய்யும் சிறப்பு குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு மாவட்டத்திலும் பழமையான தெய்வ விக்ரகங்களை கொண்ட தொன்மை வாய்ந்த பல கோயில்கள் சிதிலமடைந்த நிலையில் உள்ளன. அத்தகைய கோயில்களை கணக்கெடுத்து ஆவணப்படுத்தவும், பாதுகாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தற்போது இப்பிரிவு **342** வழக்குகளை கையாண்டு வருகிறது. தவிர **80** வழக்குகள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து மாற்றம் செய்யப்பட உள்ளது.

- சிலைத் திருட்டுத் தடுப்பு பிரிவினரால் சிலைக் கடத்தல் வழக்குகளில் கைப்பற்றப்பட்ட சுமார் 300 உலோக/கற்சிலைகளின் முப்பரிமாண வீடியோ படங்கள் சென்னை ஐஐடி மற்றும் திருநெல்வேலி இந்துக் கல்லூரியின் உதவியுடன் ஒரு முன்னோடி திட்டமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு சிலைத் திருட்டுத் தடுப்பு பிரிவு வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு, இந்து அறநிலையத்துறை மற்றும் தொல்லியல் துறை ஆகிய துறை அலுவலர்களை கொண்ட ஓர் உயர் மட்டக்குழு அமைக்கப்பட்டு தமிழகத்தில் உள்ள அனைத்து சிலைகளையும் ஆவணப்படுத்தி அவற்றின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- சிலைத் திருட்டுத் தடுப்பு பிரிவு குற்றப்புலனாய்வு துறை காவல் நிலையத்திற்கென புதிய கட்டடம் ரூ 1.25 கோடி செலவில் நிதி ஒதுக்கிடு செய்து சென்னை அசோக் நகரிலுள்ள காவல் தலைமை பயிற்சி கல்லூரியில் கட்டடம் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது.

**சிலைத் திருட்டுத் தடுப்பு பிரிவில் காவலர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குதல்:**

கடந்த ஆண்டு சட்டப்பேரவையில் மானியக்கோரிக்கையின் போது அறிவித்ததற்கிணங்க சிலை திருட்டுத் தடுப்பு பிரிவுகளின் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கென 130 காவல் அதிகாரிகள் / ஆளிநர்கள் மற்றும் 11 அமைச்சுப் பணியாளர்கள் கூடுதலாக ஒப்பளிக்கப்பட்டுள்ளனர்.

**(vi) இணையதள குற்றப் பிரிவு**

- **46** இணையதள குற்றத் தடுப்பு காவல் நிலையங்கள் அனைத்து மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களில்

அமைக்கப்பட்டுள்ளன. மேலும் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கெதிரான குற்றத்தடுப்பு பிரிவு, தமிழ்நாடு போதை பொருள் நுண்ணறிவு பிரிவு மற்றும் பொருளாதார குற்றப் பிரிவிற்கென தலா ஒரு இணையதள குற்றத் தடுப்பு காவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

- இப்பிரிவானது கடந்த ஏப்ரல் 2021 முதல், முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வருகிறது.

- கடந்த ஆண்டு சட்டப்பேரவையில் அறிவித்ததற்கிணங்க ஒரு இணையதள குற்றத் தடுப்பு புலனாய்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழக அரசு, கணினிசார் குற்றத்தின் முக்கியத்துவத்தினையும், அவசியத்தையும், அவசரத்தையும் உணர்ந்து மாநில அளவிலான இணையதள குற்றத் தடுப்பு புலனாய்வு மையம்

ஒன்றினை ரூ.11.36 கோடி செலவில் அமைக்க ஆணையிட்டுள்ளது.

- மாநில அளவிலான இணையதள குற்றத் தடுப்பு புலனாய்வு மையம், மாநில அளவிலான அதிகார வரம்பு கொண்ட காவல் நிலையமாக அறிவிக்கப்பட்டது.

**2021 - 22 ஆம் ஆண்டின் சாதனைகள்**

- இணையதள குற்றத் தடுப்பு பிரிவின் தலைமையகத்தில் சூன் 2021 முதல் 24 மணி நேரமும் இயங்கக் கூடிய கட்டுப்பாட்டு அறை துவங்கப்பட்டது. இக்கட்டுப்பாட்டு அறையின் எண் 155260. இவ்வெண்ணானது காவல் உதவி எண் 112-என்ற எண்ணோடு இணைக்கப்பட்டுள்ளது. கணினிசார் குற்றத் தடுப்பு காவல் உதவி எண் கடந்த 24.01.2022 முதல் “1930” என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- இணையதள குற்றத் தடுப்பு காவல் உதவி எண் மூலம் இதுவரை **4342** புகார்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்களின் இழப்பு தொகையிலிருந்து ரூ.**3.18** கோடி வங்கிகளின் மூலம் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

- மாநிலத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் தேசிய கணினிசார் குற்றத் தடுப்பு அறிக்கையிடல் இணைய முகப்பு **(NCR Portal)** பயன்படுத்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கணினிசார் குற்றப் புகார்கள் மீது திறமையாகவும், விரைவாகவும் நடவடிக்கை எடுக்க உதவுகிறது.

- இதுவரை இணையதள குற்றத் தடுப்பு காவல் நிலையங்கள் மூலம் **1754** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, **311** குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

- இணையதள குற்றத் தடுப்பு பிரிவானது மக்கள் இணையவழி குற்றங்களில் ஏமாறாமல் இருக்க இதுவரை **65** இணையதள குற்ற எச்சரிக்கை அறிக்கைகள் அளித்துள்ளது. மேலும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் **213** பள்ளிகளிலும், **140** கல்லூரிகளிலும், **117** அரசு அலுவலகங்களிலும் மற்றும் **793** மக்கள் கூடும் பொது இடங்களிலும் நடத்தப்பட்டுள்ளன.

- **135** விழிப்புணர்வு விளம்பர பதாகைகள் இணையதள குற்றத்தடுப்பு காவல் நிலைய அதிகாரி மற்றும் காவலர்களால் உருவாக்கப்பட்டு, சமூக வலைதளங்களில் இக்குற்றங்களுக்கெதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- தாலுக்கா மற்றும் தொழில்நுட்ப காவல் உதவி ஆய்வாளர்களுக்கான திறன் மேம்படுத்துதல் பயிற்சி

மூன்று நாட்கள் நடைபெற்றது. இதில் 100 காவல் உதவி ஆய்வாளர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

- இணையதள குற்றத் தடுப்பு பிரிவால் தினமும் இரண்டு மணி நேர இணையவழி பயிற்சி வகுப்புகள் மாவட்ட கணினிசார் குற்றத் தடுப்பு காவல் நிலையங்களில் உள்ள காவலர்களுக்கு இணையதள புலனாய்வு பற்றிய அடிப்படை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும் சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைந்து 50 காவல் ஆளிநர்களுக்கு நேரடி பயிற்சி வகுப்பும், மாவட்ட கணினிசார் குற்றத் தடுப்பு காவல் நிலையத்தில் உள்ள அனைத்து காவல் ஆளிநர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரைக்கும் இணையவழி பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

- இணையதள குற்றத் தடுப்பு பிரிவு, சமூக ஊடக மேலாண்மை குறித்து மாநிலம் தழுவிய பயிற்சியினை நடத்தியது.

- **Open Source Intelligence (OSINT)** அறிக்கையின் அடிப்படையில் இணையதள குற்றத் தடுப்பு பிரிவு தலைமையிடத்தால் மோசடி இணையதளங்களைக் கண்டறிந்து அதற்கான நுண்ணறிவு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த நுண்ணறிவு அறிக்கைகள் மோசடி இணையதளங்களை தடை செய்வதற்கும், பொது மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உதவி செய்கிறது.

- இவ்வறிக்கையின் பலனாக **531** வலைதளங்கள், **23** வலைஒளி **(YouTube)** காணொளிகள், **59** முகநூல் பக்கங்கள், **17** இன்ஸ்டாகிராம் பக்கங்கள் மற்றும் **32** கூகுள்

செயலிகள் போலியாக / ஏமாற்றும் விதமாக இருப்பதால் தடைசெய்யப்பட்டுள்ளன.

- மாநிலங்களுக்கு இடையிலான இணையதள குற்றத் தடுப்பு வழக்குகளின் தொடர்புகளை ஆராய்ந்து அதில் நமது மாநிலத்தோடு தொடர்புடைய வழக்குகளை பிரித்து அவற்றை மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கும், மாநகர ஆணையர்களுக்கும் உரிய நடவடிக்கை எடுக்க தகவல்கள் பரிமாறப்படுகின்றன, இதில் வேறு மாநிலங்களில் கைது செய்யப்படும் குற்றவாளிகளிடம் இருந்து கைப்பற்றப்படும் கைபேசி எண்கள், வங்கி கணக்குகள் மற்றும் ஏனைய தகவல்களின் அடிப்படையில் பகுத்தாய்ந்து, இதுவரை **(21.03.2022) 823** வழக்குகள் அயல் மாநிலங்களில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளோடு தொடர்புடையது என கண்டறியப்பட்டுள்ளது.

- முதல் முறையாக இணையதள குற்றத் தடுப்பு பிரிவால் இணையதள குற்றங்களை கையாளும் செயல்பாட்டு நடைமுறையை "இணையதள குற்றத் தடுப்பு புலனாய்வு கையேடு" ஆக தொகுத்து உள்ளனர். இது இவ்வழக்கு விசாரணைகளை கையாளும் அலுவலர்களுக்கு முதன்மையான வழிகாட்டியாக உள்ளது.

**2022-23 ஆண்டிற்கென முன்மொழியப்பட்ட செயல் திட்டம்**

- மாநில இணையதள கட்டளை மையம் **(SCCC)**, மண்டல ஆய்வகம் மற்றும் கணினிசார் குற்றத் தடுப்பு காவல் நிலையங்களுக்கான உபகரணங்களை பெறுதல்.

- பொதுமக்களிடையே பிரபலபடுத்தும் விதத்தில் இணையதள குற்றத் தடுப்பு காவல் உதவி எண் **1930** **(**முன்னர் **155260) -**ஐ பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தியும், இணையதள குற்றங்களை உடனடியாக காவல்

துறையிடம் நேரடியாகவோ, உதவி எண் மூலமாகவோ, இணையவழி மூலமாகவோ புகார் தெரிவிப்பதற்கு மக்களை தயார் படுத்துதல்.

- புகழ்பெற்ற நிறுவனங்கள் மற்றும் நிபுணர்களுடன் இணைந்து காவலர்களுக்கு இணையதள குற்றத் தடுப்பு சம்பந்தமான சிறந்த அறிவுத்திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல்.

- வேறு மாநில காவல் துறையுடன் தகவல்களை பரிமாறியும் அவர்களுடன் இணைந்தும் இணையதள குற்றங்களைத் தடுக்க முனைதல்.

- பாதிக்கப்பட்டவர்களின் இழப்புகளை தவிர்க்கவும், உடனடியாக புகார்களை பதிவு செய்தும் சந்தேகத்திற்குரிய வங்கிகணக்குகளை முடக்கியும் நடவடிக்கை எடுத்தல்.

- தேசிய இணையதள குற்றத் தடுப்பு அறிக்கையிடல்

இணைய முகப்பில் **(NCR Portal)** பதிவாகும் புகார்களை முதல் தகவல் அறிக்கையாக மாற்றம் செய்தும், நேரடி புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் அதிக முன்னேற்றம் அடைய முனைதல்.

- புகார்களின் அடிப்படையில் வங்கிகளில் முடக்கப்படும் பணத்தின் விகிதத்தை கூட்டவும், வங்கிகளில் முடக்கப்பட்ட பணத்தை மக்களிடம் திருப்பித் தரவும் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

- மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திலும் இணையதள குற்றத்தடுப்பு உதவி மையம் **(Cyber Cell)** அல்லது இணையதள குற்றத்தடுப்பு உதவி அதிகாரியை **(Cyber Support Officer)** நியமித்தல்.

- மாநில இணையதள குற்றத் தடுப்பு கட்டளை மையத்தில் சமூக ஊடக பகுப்பாய்வு குழு ஒன்றை உருவாக்குதல்.

## (vii) மாநில குற்ற ஆவணக் காப்பகம் (SCRB)

காவல் துறையின் செயல்திறனை மேம்படுத்தவும், குற்ற ஆவண முறையை மேம்படுத்தவும், தமிழ்நாட்டில் மாநில குற்ற ஆவண காப்பகம் உருவாக்கப்பட்டது. மாநில குற்ற ஆவணக்காப்பகத்தின் கீழ், காவல் கணினிப் பிரிவு, விரல் ரேகைப் பதிவுக் கூடம் , குற்றச் செயல் முறை கண்டறியும் பிரிவு, மற்றும் புள்ளியியல் பிரிவு ஆகியன செயல்படுகின்றன. இக்காப்பகம் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறையினை (CCTNS) பெற்று முகமையாக செயல்படுகிறது.

காவல் கணினிப்பிரிவு 1971-ம் ஆண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் அனைத்து குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளின் தரவுகள் கணினிமயமாக்கப்பட வேண்டும் என்பதும், புலன் விசாரணைக்கு உதவிகரமாகவும் மற்றும் குற்றங்கள் பற்றிய

ஆய்வுகளை மேற்கொள்ள தேவையான தகவல்களைத் திரட்டி வகைப்படுத்தவும் உதவுகிறது.

மே 2021 முதல் இது நாள் வரையிலான மாநில குற்ற ஆவணக்காப்பகத்தின் செயல்பாடுகள் பற்றியவிவரம்:

**முகம் அடையாளம் கண்டறியும் தொழில்நுட்பம் (FRS)**

இத்தொழில்நுட்பம் கொல்கத்தாவில் உள்ள **C-DAC** என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் **04.10.2021** அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருள் மூலம் ஏற்கனவே தரவு தளத்திலுள்ள தெரிந்த நபர்களின் ஒத்த முக அடையாளங்களை சரிபார்க்க முடியும். இத்திட்டத்தை துவக்கி வைத்த நாள் முதல், **213** காவல் சரிபார்ப்பு விண்ணப்பதாரர்கள், **84** பாஸ்போர்ட் விண்ணப்பதாரர்கள், **69** சந்தேக நபர்கள் மற்றும் **259** குற்றவாளிகள் மீது குற்ற வழக்குகள் உள்ள விவரம் மேற்படி செயலி மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

**பொது மக்களுக்கான இணைய தள சேவைகள்**

இணையதள சேவை மூலம் இதுவரை (மே **2021**) **1,95,007** இணையதள புகார்கள் பதிவாகியுள்ளன. **1,47,516** காணாமல் போன ஆவண அறிக்கைகள் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. **98,335** சாலை விபத்து வழக்கு தொடர்பான ஆவணங்கள் பாதிக்கப்பட்டவர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும், ரூ.**33.73** இலட்சம் கட்டணம் செலுத்தி **19** காப்பீட்டு நிறுவனங்கள் சாலை விபத்து வழக்கு தொடர்பான ஆவணங்களை பதிவிறக்கம் செய்துள்ளன. **2,78,813** இணையவழி காவல் சரிபார்ப்பு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மேலும், **28,189** சாட்சிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணைகள் குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

**காவல் துறைக்கான இணையதள (CCTNS) பயன்பாடுகள்**

**2021**-ம் ஆண்டு மே மாதம் முதல் இதுவரை **104** காணாமல் போனவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் அடையாளம்

தெரியாத பிரேதங்களின் விவரத்துடன் ஒப்புநோக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. **3** காணாமல் போன நபர்கள் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். **139** காணாமல் போன வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. **2570** பாஸ்போர்ட் விண்ணப்பதாரர்கள், **342** முன்னடத்தைகள் மற்றும் **7127** காவல் சரிபார்ப்பு விண்ணப்பதாரர்கள் மீது குற்றவழக்குகள் உள்ள விவரம் **CCTNS** மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

**கணினியில் குற்றவாளிகளின் உருவப்படம் வரைதல் (Colour Portrait Building System (CPBS)):**

**2021**-ம் ஆண்டு மே மாதம் முதல் இதுவரை இம்முறை மூலம் கணினியில் **16** குற்றவாளிகளின் மாதிரி உருவப்படங்கள் வரையப்பட்டு, **2** வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்படுவோரை கண்காணித்தல்:**

**2021**-ம் ஆண்டு மே மாதம் முதல் இதுவரை சிறையிலிருந்து விடுதலையான அல்லது பிணையில் விடுவிக்கப்பட்ட **14,821** சொத்து சம்பந்தமான வழக்குகளுடன் தொடர்புடைய கைதிகள் குறித்த விவரங்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆணையரகங்களுக்கு தொடர் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**CCTNS சேவை நிதி:**

**CCTNS** சேவை நிதி என்னும் புதிய அரசு கணக்கு தலைப்பு உருவாக்கப்பட்டு, **CCTNS** இணையதள சேவைக்கான கட்டணத் தொகையாக மே **2021** முதல் மார்ச் **2022** வரையில் ரூ.**14.17** கோடி செலுத்தப்பட்டுள்ளது. இத்தொகையானது காவல்துறையின் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டு பணிகளுக்கு செலவிடப்படுகிறது.

**இந்த பிரிவின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான எதிர்காலத் திட்டங்கள்:**

தற்பொழுது நடைமுறையிலுள்ள CCTNS கணினி வன்பொருட்களின் ஆயுள்காலம் முடிவடைந்துவிட்டதால், கணினி மற்றும் பிற கணினி வன்பொருட்களை மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்பொழுது காவல் அதிகாரிகள் / பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள CCTNS மென்பொருளின் கட்டமைப்பிலிருந்து மாற்றம் செய்து இணையவழி அடிப்படையிலான மென்பொருள் ஒன்றுஉருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

CCTNS தளத்தில், வீடியோ பகுப்பாய்வுடன் கூடிய FRS 2.0, காவல் நிலைய விரல்ரேகை மென்பொருள் (AFIS), இ-பீட் (e-beat), பாதுகாப்பு மேலாளர், குற்றவாளிகளின் சரித்திரப்பதிவேடு, கிராம சரித்திரப்பதிவேடு போன்ற துணை மென்பொருட்களை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி

மென்பொருட்களை பயன்படுத்துவதற்கு ஏதுவாக, கைபேசி, கையடக்க கணினி **(Tablet)**, கைவிரல்ரேகை ஸ்கேனர், விரல்ரேகை பதிவு செய்யும் கருவி **(Finger Print enrollment device)** ஆகியவற்றினை கொள்முதல் செய்வதற்கு டெண்டர் கோரும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வெளியீடுகள்**

மாநில குற்ற ஆவணக்காப்பகம் ஒவ்வொரு ஆண்டும் "தமிழ்நாடு குற்ற ஆய்வு" என்கின்ற வெளியீட்டை வெளியிடுகிறது. **2020**-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு குற்ற ஆய்வு வெளியீடு வெளியிடப்பட்டுள்ளது. இக்காப்பகம் மாநிலத்தைப் பொறுத்த வரையிலான மாதந்திர குற்ற விவரங்களையும் ஒவ்வொரு மாதமும் பிரசுரித்து வருகிறது. இது டிசம்பர் **2021** வரை முடிக்கப்பட்டுள்ளது.

**"வாகன் சமன்வே" முறையின் கீழ் கண்காணிப்பு மேற்கொள்ளுதல்**

2014 முதல் இம்முறை செயல்பட்டு வருகிறது. இம்முறையின் கீழ் ஒரு குறிப்பிட்ட வாகனம் திருடப்பட்டுள்ளதா அல்லது மீட்கப்பட்டுள்ளதா என்பதை பொதுமக்கள் அறிந்து கொள்ள இயலும். மாவட்ட / மாநகர குற்ற ஆவணக் காப்பகத்துடன் கலந்தாலோசித்து பயனாளிகளின் விவரங்களை காவல் கணினி மையம் சரி பார்க்கிறது. நாடு முழுவதிலுமுள்ள வாகனத்தின் உரிமையாளர் விவரம் குறித்தும் காவல்துறையினர் கண்டறிய முடியும்.

**குற்றச் செயல் முறையைக் கண்டறியும் பிரிவு (MOB)**

இப்பிரிவானது, குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவற்றைப் புலன் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு பகிர்ந்தளிக்கிறது.

காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களையும் இப்பிரிவு சேகரிக்கிறது. குற்றச் செயல்முறையைக் கண்டறியும் பிரிவானது பல்வேறு தலைப்புகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றங்கள் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்து அவற்றை தேசிய குற்ற ஆவணக் கூடத்திற்கு அனுப்புகிறது.

**விரல் ரேகை பதிவுக் கூடம்**

**1895**-ம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்ட தமிழ்நாடு விரல்ரேகை பதிவுக் கூடம் உலகிலேயே மிகப்பழமையான விரல்ரேகைப் பிரிவாகும். விரல் ரேகைப் பதிவுகள் அடங்கிய சேமிப்புக் கிடங்காக இக்கூடம் திகழ்கிறது. இதில், **2,06,847** தண்டனை பெற்ற நபர்களின் விரல் ரேகை பதிவுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கூடமானது நீதிமன்றங்கள் மற்றும் பிறதுறையினரால் வல்லுநர் கருத்துக்காக அனுப்பப்படுகின்ற ஐயத்திற்குரிய

ஆவணங்களின் மீது காணப்படும் விரல் ரேகைப் பதிவுகளைக் கூர்ந்தாய்வு செய்யும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தனி விரல் ரேகைப் பதிவுக் கூடப் பணியாளர்களின் முக்கியப் பணியானது, குற்றச் சம்பவ இடங்களுக்குச் சென்று குற்றவாளிகள் விட்டுச் சென்ற தடயப் பதிவுகளைச் சேகரிப்பதாகும். இந்த விரல் ரேகைப் பதிவுகள், நீக்கம் செய்யப் படுவதற்காக குற்ற நிகழ்வு நடந்த இடத்தில் இருப்பவர்களின் விரல் ரேகைப் பதிவோடு ஒப்பீடு செய்து மீதமுள்ள சந்தேக நபரின் கைரேகைப் பதிவுகளை எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி சோதிப்பதும், விரல் ரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறைமை தரவுத்தளத்தில் சரிபார்க்கப்படுகிறது.

மாநிலத்தில் **45** தனிவிரல் ரேகை பதிவுக்கூடங்கள் இயங்கி வருகின்றன. மேலும் சிறப்பு பிரிவுகளான

பொருளாதாரக் குற்றப் பிரிவு (EOW) மற்றும் ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவுகளில் செயல்பட்டு வருகிறது.

2021-ம் ஆண்டு 83 ஆவணங்கள் பல்வேறு அரசு அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் (நீதிமன்றங்கள், நில அபகரிப்பு பிரிவு, இரயில்வே பணியாளர் தேர்வாணையம்) விரல் ரேகை சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இதற்காக ரூ.41,500/- கைரேகைகளை சரிபார்த்ததற்கும், குடியேற்றத்திற்கு வந்தவர்களுக்கு விரல் ரேகைப் பதிவுகள் எடுத்து அனுப்பி வைத்ததற்காக ரூ.1,09,000/- இணையதளம் மூலம் பெறப்பட்டு அரசுக்கணக்கில் செலுத்தப்பட்டது.

**விரல்ரேகைப் பிரிவின் சாதனைகள்**

- 12,491 தினசரி கைது சீட்டுகளும், 1,822 தண்டனைச் சீட்டுகளும் மேற்படி காலகட்டத்தில் FACTS 7.0 தரவு

தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், விரல் ரேகைப் பிரிவு பணியாளர்கள் **4534** குற்ற நிகழ்விடங்களை பார்வையிட்டனர்.

- **FACTS 7.0** மென்பொருளைப் பயன்படுத்தி **89** சொத்து வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.**55.60** இலட்சம் மதிப்பிலான திருடப்பட்ட சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

- விரல் ரேகைப் பிரிவு பணியாளர்களால் மென்பொருளின்றி **(Manual method) 371** சொத்து வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.**4.08** கோடி மதிப்பிலான திருடப்பட்ட சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

- **NAFIS:** தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தால் செயல்படுத்தப்படும் தேசிய தானியங்கி விரல்ரேகை அடையாளம் கண்டறியும் அமைப்பு **(NAFIS)**

தமிழகத்திலுள்ள **45** தனிவிரல்ரேகைக் கூடங்களிலும் **2022**-ம் ஆண்டு சனவரி திங்களில் நிறுவப்பட்டுள்ளன. இந்த அமைப்பு மூலம், **36** சொத்து வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.**76,250** மதிப்பிலான திருடப்பட்ட சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

**(viii) தமிழ்நாடு சிறப்புக் காவற்படை**

தமிழ்நாடு சிறப்புக் காவற்படை என்பது தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் / காவல்துறைத் தலைவர் ஆகியோரின் இருப்பு காவல் படையாகும்.

சட்டம் மற்றும் ஒழுங்கு, பொதுத் தேர்தல்கள், முக்கிய பண்டிகைகள், இயற்கை சீற்றங்கள் மற்றும் இதர முக்கிய பாதுகாப்புப் பணிகளில் மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு உதவுவதன் மூலம் தமிழ்நாடு சிறப்புக் காவற்படை முக்கியப் பங்காற்றுகிறது.

தமிழ்நாடு சிறப்புக் காவற்படை சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு கூடுதல் காவல்துறை இயக்குநர் தலைமையில் இயங்குகிறது. அவருக்கு உதவியாக ஒரு காவல்துறை தலைவர் மற்றும் ஒரு துணை காவல்துறை தலைவர் உள்ளனர். மாநிலத்தில் 15 தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகள் (த.சி.கா), ஒரு படைப்பயிற்சி மையம் மற்றும் சிறிய ஆயுதப் பட்டறை ஆகியவை உள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் தளவாய் / காவல் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள ஒரு அதிகாரி தலைமை தாங்குகிறார்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் **www.letsfightcorona.com** என்ற இணையதளத்தை **27.05.2021** அன்று தொடங்கினர். இதன் மூலம் பொதுமக்கள், கொரோனா பாதித்தவர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு சேவை செய்ய விரும்பும் மெய்நிகர் தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு

நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன. அவர்கள் மூலம் பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு ஆயுதப்படை இணைய முகப்பில், நிறுமத்தில் பணியமர்த்தல், தினசரி நிலை அறிக்கை, வள மேலாண்மை, குறைகளைக் கண்டறிதல், விளையாட்டு நடவடிக்கைகள், இடமாற்றங்கள் மற்றும் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கிய முழு கையேடு செயல்முறையையும் தானியங்குப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. **2021** ஆம் ஆண்டில் த.சி.கா அதிகாரிகள் / பணியாளர்களால் புதுதில்லி திகார் சிறை வாயிற்சோதனை மற்றும் தேடுதல் மூலம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் / கைதிகளிடமிருந்து ரூ.**2,52,819/-** பணமாகவும், **535** கைபேசிகளும், **51.410** கிலோகிராம் எடையுள்ள புகையிலை / போதைப் பொருட்களும், **1267** கைபேசி பாகங்களும் மற்றும் இதர- **2842** பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

**(ix) செயலாக்கப்பிரிவு**

தமிழ்நாடு அதிதீவிரப்படை மற்றும் அதிதீவிரப் பயிற்சிப் பள்ளி ஆகிய பிரிவுகள் காவல்துறை கூடுதல் இயக்குநர் (செயலாக்கம்) அவர்களின் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. தீவிரவாத தாக்குதல்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுப்பது தமிழ்நாடு அதிதீவிரப்படையின் முதன்மை பணியாகும். தமிழ்நாடு அதிதீவிர பயிற்சி பள்ளி மூலம் சிறப்பு பயிற்சிகளான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கமாண்டோ பயிற்சி, ஸ்னைபர் பயிற்சி, ஆயுதம் கையாளும் பயிற்சி, வெடிபொருட்களை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பயிற்சி ஆகிய பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. மேற்கண்ட பயிற்சிகளை மருதம், ஒத்திவாக்கம், பள்ளிப்பட்டு, வளநாடு மற்றும் மேட்டூர் ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி மையங்களில் நடத்தி வருகிறது.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 13 ம் அணி, தற்போது தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை மீட்புப் படையாக செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு இயற்கை மற்றும் மனிதர்களால் உருவாக்கப்படும் பேரிடர்களின் போது மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பருவ மழை காலங்களின் போது இப்பேரிடர் மீட்பு படையானது காவல்துறை கூடுதல் இயக்குநர், செயலாக்கம் அவர்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

**பணியிட விபரங்கள்**

தமிழ்நாடு அதி தீவிரப்படை மற்றும் பயிற்சிப் பள்ளி பிரிவுகள் **2** காவல் கண்காணிப்பாளர்கள், **3** கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 1 துணைக் காவல் கண்காணிப்பாளர், 14 காவல் ஆய்வாளர்கள், **45** உதவி காவல் ஆய்வாளர்கள் மற்றும் **347** இதர காவலர் பணியிடங்களுடன் தற்போது இயங்கி வருகிறது. இவை தவிர, துணைத் தளவாய் நிலையில்

இந்தோ - திபெத் எல்லை பாதுகாப்புப் படையிலிருந்து ஒரு அதிகாரியும், எல்லைப் பாதுகாப்புப் படையிலிருந்து இரண்டு அதிகாரிகளும் மற்றும் உதவித் தளவாய் நிலையில் மத்திய ரிசர்வ் காவல் படையிலிருந்து ஒரு அதிகாரியும் அயல்பணியில் பணியாற்றுகின்றனர்.

**செயல்திறன்**

தமிழ்நாடு அதிதீவிரப்படை தீவிரவாத தாக்குதலுக்கு வாய்ப்புள்ள மிக முக்கிய இலக்குகளை பார்வையிட்டு அதன் கட்டமைப்புகளை (ரெக்கி- RECCE) ஆய்வு செய்து வருகிறது. மேலும், தீவிரவாத தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பு ஒத்திகைகளையும் அவ்வப்போது நடத்தி வருகிறது. மத்திய துணை இராணுவப் படைகளான தேசிய பாதுகாப்புப்படை, மத்திய தொழில் பாதுகாப்புப் படை மற்றும் கடலோர காவல் படை ஆகிய பிரிவுகளுடன் தமிழ்நாடு அதிதீவிரப்படை பிரிவினர் கூட்டு ஒத்திகைகளை நடத்தியுள்ளனர். மேலும்,

தமிழ்நாடு அதிதீவிரப் படை கடந்த மே 2021 முதல் 20 (இருபது) ரெக்கிகளையும் மற்றும் நான்கு கூட்டு பாதுகாப்பு ஒத்திகைகளையும் திறம்பட நடத்தியுள்ளது. தமிழ்நாடு அதிதீவிரப் படை மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மாண்புமிகு பாரத பிரதமர் ஆகியோரின் வருகையின் போது பாதுகாப்பு பணிகளை மிகவும் கவனத்துடன் செயல்படுத்தியது. இது தவிர, பேரிடர் காலங்களில், மீட்பு பணிகளில் ட்ரோன் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அதிதீவிரப் பயிற்சி பள்ளி 13 பல்வேறு சிறப்பு பயிற்சிகளை நடத்தியுள்ளது. அதில் தமிழக காவல்துறையைச் சேர்ந்த 4,467 காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு அதிதீவிரப் பயிற்சி பள்ளியில் உள்ள வெடிகுண்டு பிரிவு, 52 காவல் அதிகாரிகளுக்கு கடந்த

ஆண்டில் வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயலிழத்தல் தொடர்பான பயிற்சிகளை திறம்பட அளித்துள்ளது. மேலும், மோப்ப நாய் படை பிரிவானது, 11 காவல் மோப்ப நாய்களுக்கு புத்தாக்க பயிற்சியினை சிறப்பாக கொடுத்துள்ளது. அதிதீவிரப் பயிற்சி பள்ளியில் உள்ள பயிற்றுனர்கள் காவல்துறையினருக்கு பயிற்சி அளிப்பது மட்டுமல்லாமல் தாங்களும், என்.எஸ்.ஜியினர் நடத்தும் திறம்பட வாகனம் ஓட்டுதல், வெடிகுண்டு கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பயிற்சிகளையும் அவ்வப்போது பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை மீட்பு படையினர் கடந்த **2020-21** ஆம் ஆண்டு வடகிழக்கு பருவ மழையின் போது கன்னியாகுமரி, தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பேரிடரால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை விரைந்து செயல்பட்டு மீட்டுள்ளனர். மேலும், இப்பிரிவினர் மாவட்ட நிர்வாகத்திற்கும், மின்சார துறைக்கும் தங்களது முழு

ஒத்துழைப்பை நல்கி மீட்பு பணிகளை செய்து சீரான மின் விநியோகம் கிடைக்க துரித நடவடிக்கை எடுத்துள்ளனர்.

**(x) சிறப்பு இலக்குப்படை**

சிறப்பு இலக்குப் படைப் பிரிவு தற்பொழுது காவல்துறைத் தலைவர் தலைமையில் இயங்குகிறது. இப்படையினருக்கு வனத்திற்குள் ஆயுதமேந்திய தீவிரவாத மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளை சமாளிக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பேரிடர்கள் மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் போது உள்ளூர் காவல் துறையினருக்கு இப்படையினர் உதவுகின்றனர்.

தற்போது, காப்புக் காடுகளில் மாவோயிஸ்டுகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக, தமிழ்நாட்டில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளை உள்ளடக்கிய பகுதிகளை சிறப்பு இலக்கு படையினர் கண்காணித்து வருகின்றனர்.

திறமையான கண்காணிப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின் காரணமாக மாநிலத்தில் மாவோயிஸ்டுகள் நடமாட்டம் கண்டறியப்படவில்லை.

சிறப்பு இலக்குப்படையினர் அடர் வனங்களுக்குள் போரிடுதல் மற்றும் அடர் வனங்களுக்குள் வாழ்தல் முதலான பயிற்சிகளை காவல்துறையினருக்கு மட்டுமல்லாது வனத்துறையினருக்கும், இந்திய வனப்பணி மற்றும் இந்திய காவல் பணி அதிகாரிகளுக்கும் பயிற்சி அளித்து வருகின்றனர்.

**(xi) கடலோர பாதுகாப்புக் குழுமம் (CSG)**

கடலோர பாதுகாப்புக் குழுமம், குற்றப்புலனாய்வுத்துறை, தமிழ்நாடு அரசால் பின்வரும் நோக்கங்களுடன் உருவாக்கப்பட்டது;

- தமிழ்நாடு கடற்கரையிலிருந்து இலங்கைக்கு எரிபொருள், மருந்துகள் மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுத்தல்.
- தமிழ்நாட்டிற்குள் போராளிகளின் ஊடுருவலைத் தடுத்தல் மற்றும் மீனவர்களுக்கும், போராளிகளுக்கும் இடையிலான கூட்டுச் சதியைத் தடுத்தல்.

இப்பிரிவு கூடுதல் காவல்துறை இயக்குநரின் கீழ் செயல்படுகிறது. அவருக்கு உதவியாக சென்னையில் ஒரு காவல்துறை துணைத் தலைவரும் நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரத்தில் இரண்டு காவல் கண்காணிப்பாளர்களும் உள்ளனர்.

கடலோர பாதுகாப்புக் குழுமத்திற்கு சென்னை, நாகப்பட்டினம், வேதாரண்யம், பட்டுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 மண்டல அலுவலகங்களும்,

சென்னை, மாமல்லபுரம், கடலூர், நாகப்பட்டினம், வேதாரண்யம், முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, ராமேஸ்வரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் 11 அலகு அலுவலகங்களும் உள்ளன.

திருவள்ளூர் முதல் கன்னியாகுமரி வரையிலான தமிழகக் கடலோரப் பகுதிகளில் **60** சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன. இச்சோதனைச் சாவடிகளை ஆயுதமேந்திய தமிழ்நாடு சிறப்பு காவல்படையினர் நிர்வகிக்கின்றனர்.

கடலோர பாதுகாப்பு படையின் ஒரு பிரிவு சென்னை மெரினா கடற்கரையில் நீரால் மூழ்கி இறக்கும் பொதுமக்களைக் காப்பதற்காக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் தற்போது கடலில் மூழ்கி இறப்பவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

இந்திய அரசின் கடலோர பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 12 டன் எடையுள்ள 12 வேகமான இடைமறிக்கும் படகுகளும், 5 டன் எடையுள்ள 12 வேகமான இடைமறிக்கும் படகுகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் படகுகளில் இலகுரக இயந்திர துப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. ரோந்துப் படையினருக்கு இன்சாஸ் துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

அதிவிரைவு இடைமறி படகுகளை இயக்குவதற்கு கடற்படை மற்றும் கடலோர காவல்படையில் பணியாற்றிய தொழில்நுட்பப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதில் 18 தொழில்நுட்ப பணியாளர்கள் பணியில் உள்ளனர்.

கடலோர பாதுகாப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 30 கடல்சார் காவல் நிலையங்களுக்கு

வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு தற்போது இயங்கி வருகின்றன. கடல்சார் காவல் நிலையத்திற்கு ஒரு உதவி ஆய்வாளர், மூன்று தலைமைக் காவலர்கள் மற்றும் 10 காவலர்கள் என்ற எண்ணிக்கையில் அனைத்து 30 காவல் நிலையங்களுக்கும் ஆளினர்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளனர்.

கடலோரப் பாதுகாப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் மீன்வளத் துறை மூலம் சிஎஸ்ஜி படகுகள் நிறுத்துவதற்கு 9 படகு இறங்குதளங்கள் அமைக்கும் பணி தலா ரூ.50 லட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளது.

சென்னை, மெரினா கடல்சார் காவல் நிலையத்தில் உள்ள கடலோர பாதுகாப்புக் குழுமக் காவலர்களுக்கு 15 நாட்கள் புத்தாக்கப் பயிற்சி (குழுவிற்கு 30 நபர்கள் வீதம்) அளிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில், மூன்று குழுக்கள் இப்பயிற்சியை முடித்துள்ளன.

**2021-ஆம் ஆண்டின் சாதனைகள்**

**மீனவர்கள் மற்றும் படகுகள் மீட்பு**

கடலோர பாதுகாப்பு மற்றும் மீனவர்கள் சந்திக்கும் இன்னல்கள் குறித்த தகவல்கள் பெறுவதற்கு **24** மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி எண் **1093** என்ற வசதி செய்யப்பட்டுள்ளது. **2021**-ஆம் ஆண்டில் இக்கட்டணமில்லா தொலைபேசி மூலம் **25** அழைப்புகள் பெறப்பட்டு, இன்னல்களில் சிக்கித் தவித்த **85** மீனவர்கள் மற்றும் **13** படகுகளை எம்.ஆர்.சி.சி **(Maritime Rescue Co-ordination Centre)**, மீன் வளத்துறை மற்றும் உள்ளூர் மீனவர்களின் உதவியுடன் கடல்சார் காவல் படையினர் மீட்டுள்ளனர்.

**கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு (கடத்தல் பொருட்கள் பறிமுதல்)**

கடலோர பாதுகாப்புக் குழுமம் கடந்த **2021** ஆம் ஆண்டில், **290.15** கிலோ கஞ்சா, **10,200** கிலோ பொது விநியோகத் திட்ட

அரிசி, 2,726 கிலோ கடல் அட்டை, 250 கிலோ ஏலக்காய் மற்றும் 18,050 கிலோ விரலி மஞ்சள் ஆகியவற்றை பறிமுதல் செய்தது. இவ்வாறு அடிக்கடி பறிமுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கடத்தல்கள் கட்டுப்படுத்தப்பட்டு, கடல்சார் உயிரினங்களைக் களவாடும் குற்றவாளிகளின் நடவடிக்கையும், அவற்றை விலைக்கு வாங்கி சேகரித்து விற்பனை செய்வோரது நடவடிக்கையும் தடுக்கப்பட்டுள்ளன.

01.01.2021 முதல் 31.12.2021 வரையிலான காலகட்டத்தில், 1967 ஆம் ஆண்டு இந்திய கடவுச்சீட்டு சட்டம், 1946 ஆம் ஆண்டு வெளிநாட்டினர் சட்டம், 1959-ஆம் ஆண்டு ஆயுதச் சட்டம், 1908 ஆம் ஆண்டு வெடிபொருள் சட்டம் மற்றும் 1981-ஆம் ஆண்டு இந்திய கடல்சார் மண்டலங்கள் (மீன்பிடி கப்பல்கள் ஒழுங்குமுறை) சட்டம் உள்ளிட்ட பல்வேறு சட்டங்களின் கீழ் 165 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தீவிரமாக அமல்படுத்தப்பட்டன.

## கிராம விழிப்புணர்வுக் குழுக் கூட்டங்கள்

கடலோரப் பாதுகாப்புக் குழுமத்தின் மண்டல / பிரிவு அலுவலர்கள் அவ்வப்போது அனைத்து கடற்கரை கிராமங்களிலும் கிராம விழிப்புணர்வுக் குழுக் கூட்டங்கள் நடத்தி வருகின்றனர். 01.01.2021 முதல் 31.12.2021 வரையிலான காலகட்டத்தில், கடலோரப் பாதுகாப்பு குழும அதிகாரிகள் கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடற்கரை சார்ந்த பிற பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த 272 கிராம விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தினர். இதன்மூலம் கடலோர கிராம மக்களுக்கும், காவலர்களுக்கும் இடையேயான நல்லுறவு மேம்படுத்தப்பட்டது.

## கடலோர பாதுகாப்புப் பயிற்சி

கடற்கரைகளில் பாதுகாப்பு ஆயத்தப் பணிகளில் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைய ஆறு மாதத்திற்கு ஒரு முறை கடலோரப் பாதுகாப்புக் குழுமமானது பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கடந்த

2021-ஆம் ஆண்டில் இத்தகைய பயிற்சி நடவடிக்கை 12.01.2021 மற்றும் 13.01.2021 ஆகிய இரண்டு நாட்களில் மேற்கொள்ளப்பட்டது.

**கடலோர பாதுகாப்பு குறித்த தேசிய பட்டறை**

கடலோர பாதுகாப்புக் குழுமம், குஜராத் மாநிலம் காந்தி நகரில் உள்ள தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஒரு நாள் "கடலோர பாதுகாப்பு குறித்த தேசிய பட்டறை" ஒன்றை 30.07.2021 அன்று நடத்தியது. 13 கடலோர மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள், இந்திய கடற்படை, இந்திய கடலோர காவல்படை, உள்துறை அமைச்சகம், மத்திய தொழில் பாதுகாப்புப் படை, எல்லை பாதுகாப்புப் படை, சுங்கத்துறை உள்ளிட்ட துறைகளை சேர்ந்தவர்கள் இதில் பங்கேற்றனர். தமிழக கடலோர பாதுகாப்புக் குழுமத்தின் சார்பில் தேசிய அளவில் நடத்தப்பட்ட முதல் பட்டறை இதுவாகும்.

இந்திய கடலோர காவல்படை, இந்திய கடற்படை மற்றும் பிற தேசிய பாதுகாப்புப் படைகளில் சேருவதற்கு வசதியாக மீனவ இளைஞர்களுக்கு கடலோர பாதுகாப்பு குழுமம் மூலம் ரூ.90 லட்சம் செலவில் ஆறு மாத பயிற்சி அளிப்பதற்கான திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. முதற்கட்டமாக ஒரு குழுவினருக்கு பயிற்சி அளிக்க தமிழக அரசு ரூ.45 லட்சம் வழங்கியுள்ளது.

நீரிலும், நிலத்திலும் செல்லக்கூடிய ஒரு படகு, 6-எச்.டி.பி.இ. படகு, 11- நீரில் செல்லக்கூடிய வாகனங்கள் (ஜெட் ஸ்கீ), 5-மீட்புப் படகுகள், 5-கடற்கரை மணலில் பயன்படுத்தக்கூடிய நான்கு சக்கர வாகனங்கள், 11-கண்காணிப்புக் கோபுரங்கள் மற்றும் 236 சிசிடிவி கேமராக்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய ரூ.15.96 கோடி ஒதுக்கப்பட்டு, படகுகள் மற்றும் வாகனங்கள் கொள்முதல் செய்து கடலோர பாதுகாப்புக் குழுமத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இவற்றின் பராமரிப்பு மற்றும் தொடர் செலவினங்களுக்காக அரசு ரூ.95.00 இலட்சம் அனுமதித்துள்ளது. ரோந்துப் பணிகள் மற்றும் மீட்புப் பணிகளுக்காக மேற்கூறிய சாதனங்கள் கூடுதலாக பயன்படுத்தப்படுகின்றன.

### (xii) இரயில்வே காவற் படை

தமிழ்நாட்டில் அரசு இருப்புப்பாதை காவல் என்பது சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி என இரு காவல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு மொத்தம் 1564 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுடன் செயல்பட்டு வருகிறது.

அரசு இருப்புப்பாதை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடக்கும் குற்றங்களில் வழக்கு பதிவு செய்து தகுந்த சட்ட நடவடிக்கை மேற்கொண்டு பொதுமக்களை பாதுகாத்து வருகிறது.

இரயில்களில் நாள்தோறும் அதிகப்படியான மக்கள் பயணம் செய்கின்றனர். இவர்களின் பயணத்தின் போது எவ்வித இடையூறும் இல்லாமல் பாதுகாப்பு அளித்து பயணிகள் நல்ல முறையில் பயணம் செய்ய அரசு இருப்புப்பாதை காவலர்கள் மிகவும் சிரத்தையோடும், கண்ணியத்தோடும் பணியாற்றி காவல் துறைக்கு பெருமை சேர்க்கின்றனர்.

கடந்த **01.05.2021** முதல் **20.03.2022** வரை அரசு இருப்புப்பாதை காவல் பிரிவில் **3140** வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இதில் **1161** திருட்டு வழக்குகள், **1824** விபத்து மரண வழக்குகள் மற்றும் **155** இதர குற்ற வழக்குகள் ஆகும்.

மேற்கூறிய வழக்குகளில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு பயணிகளின் திருடு போன தங்க நகைகளின் சொத்துக்களின் மதிப்பு சுமார் ரூபாய் **19.74** இலட்சம் மற்றும் கைபேசிகளின் மதிப்பு சுமார் ரூபாய் **6.68** இலட்சம் மீட்கப்பட்டு

உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் **487.920** கிலோ கஞ்சா, **36,040** கிலோ ரேஷன் அரிசி மற்றும் **3169.854** லிட்டர் மதுபானங்கள் கைப்பற்றப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் இரயிலில் பயணம் செய்யும் போது பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களில் **18** வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தண்டவாளங்களில் கல்வைப்பு சம்பவங்களில் **8** வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் **5** வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பிற்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து, வழிதவறி வரும் பெண்கள் மற்றும் குழந்தைகளை மீட்டு, பாதுகாப்பாக பெற்றோர்களிடமோ அல்லது

அரசு காப்பகங்களிலோ ஒப்படைக்கப்படுகின்றனர். கடந்த **01.05.2021** முதல் **20.03.2022** வரை **863** சிறார்கள் மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்டவர்களில் பெற்றோர் வசம் **131** சிறார்களும், காப்பகத்தில் **732** சிறார்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பயணிகளின் உடமைக்கும், உயிருக்கும் பாதுகாப்பு தருவதோடு அல்லாமல், எவ்வாறு பாதுகாப்பாக பயணம் செய்வது என்பது குறித்து, பல்வேறு இரயில் நிலையங்கள், கடவுப்பாதைகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்களிலும் **01.05.2021** முதல் **20.03.2022** வரை மொத்தம் **25,249** விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கூறிய கால கட்டத்தில் காவல் உதவி மையத்திற்கு இரயில் பயணிகளிடம் இருந்து பாதுகாப்பு சம்பந்தமாகவும்,

பலவிதங்களில் உதவி கேட்டு **19,383** அழைப்புகள் வந்ததில் அனைத்து அழைப்புகளுக்கும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**(xiii) சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு**

**1972** ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் “நடமாடும் காவல் படை” என்ற பெயரில் பட்டியல் இன சாதியினர் மற்றும் பட்டியல் இன பழங்குடியினருக்கு எதிராக நடைபெறும் வன்கொடுமைகளை தடுப்பதற்காகவும் மற்றும் சாதி வேறுபாட்டினை ஒழிக்கும் பொருட்டு விழிப்புணர்வுகள் ஏற்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டது. **2005**-ல் சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டு **1989** ஆம் ஆண்டு பட்டியல் இன சாதியினர் மற்றும் பட்டியல் இன பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டம் மற்றும் **1955** ஆம் ஆண்டு குடிமையியல் உரிமைகள்

பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்துவதை கண்காணிப்பதற்காக இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவானது கூடுதல் காவல்துறை இயக்குநர் அவர்களின் தலைமையில் காவல்துறை உதவி தலைவர், **38** துணை காவல் கண்காணிப்பாளர் / உதவி ஆணையர்களுடன் இயங்கி வருகிறது. இது தவிர **32** புள்ளியியல் ஆய்வாளர்கள், **64** சார்பு ஆய்வாளர்கள் மற்றும் **157** காவலர்கள் சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் பணிபுரிந்து வருகின்றனர்.

**1989** ஆம் ஆண்டு பட்டியல் இன சாதியினர் மற்றும் பட்டியல் இன பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டத்தின் கீழ் **01.05.2021** முதல் **20.03.2022** வரை **1298** வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு **1021** வழக்குகள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் மொத்தமாக, **1352** புதிய

வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது, மேலும் **468** வழக்குகள் நீதிமன்ற விசாரணை முடிந்து அவற்றில் **51** வழக்குகளில் தண்டனை வழங்கியும், **417** வழக்குகளில் விடுதலை செய்தும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத் தொகை இதுவரை இல்லாத அளவு அதிகபட்ச தொகையான ரூ. **26.07** கோடியை பாதிக்கப்பட்ட **2622** நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**1989** ஆம் ஆண்டு பட்டியல் இன சாதியினர் மற்றும் பட்டியல் இன பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டம் மற்றும் **1995** ஆம் ஆண்டு பட்டியல் இன சாதியினர் மற்றும் பட்டியல் இன பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) விதியின் படி **2021**-ம் ஆண்டில், **445** கிராமங்கள் வன்கொடுமை விரவிய கிராமங்கள் என்றும், **341** கிராமங்கள் வன்கொடுமை நிகழ்ந்த கிராமங்கள் என அடையாளம் கண்டறியப்பட்டு மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை நிலவும் பொருட்டு

543 சமூகநீதி மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. சமூகநீதி மற்றும் மனித உரிமை பிரிவானது தெரிவு செய்யப்பட்ட வன்கொடுமை கிராமங்களை பார்வையிட்டு அக்கிராமங்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்புகளை ஆண்டுதோறும் ஆய்வு செய்து வருகிறது. மேலும் 2021- க்கான ஆய்வு அறிக்கை தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அரசிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி முறையான நிவாரணம் மற்றும் வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்கு தேவையான விழிப்புணர்வு பயிற்சிகள் “சமத்துவம் காண்போம்” என்ற தலைப்பில் காவல்துறை, வருவாய்துறை அலுவலர்களுக்கு அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியில் நடத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

**1989** ஆம் ஆண்டு பட்டியல் இன சாதியினர் மற்றும் பட்டியல் இன பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டத்தின் கீழ் பதியப்படும் வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச மானியத்தை ரூ.**85,000/-** லிருந்து ரூ.**1,00,000/-** ஆகவும் மற்றும் அதிகபட்ச மானியத்தை ரூ.**8,25,000/-** லிருந்து ரூ.**12,00,000/-** ஆகவும் உயர்த்தி இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

**(xiv) காவல் பணிக்கு உதவிடும் துணைப் பிரிவுகள்**

**மோப்ப நாய்ப் படை**

மோப்ப நாய்ப் படை குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், குற்ற வழக்குகளில் தடயங்களை கண்டுபிடிக்கவும் உதவிகரமாக செயல்படுகிறது. மறைத்து வைக்கப்பட்டுள்ள வெடிமருந்துகள் மற்றும் போதைப் பொருட்களைக் கண்டறியவும் மோப்ப நாய்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டம் மற்றும் ஆணையரகத்திலும் ஒரு

மோப்ப நாய்ப் படை செயல்பட்டு வருகிறது. சிறப்பு இலக்குப் படை, இரயில்வே காவல் படை மற்றும் அதிரடிப்படை போன்ற சிறப்புப் பிரிவுகளிலும் மோப்ப நாய்ப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் தற்போது 176 மோப்ப நாய்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் 71 மோப்ப நாய்கள் கண்காணிப்புப் பணிகளிலும், 99 மோப்ப நாய்கள் வெடிமருந்துகள் மற்றும் போதைப் பொருட்களை கண்டறிவதிலும், 2 மோப்ப நாய்கள் தாக்குதல் பணிகளிலும் மற்றும் 4 மோப்ப நாய்கள் இதர பணிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**குதிரைப் படை**

காவல்துறை குதிரைப் படையானது குடியரசு தின விழா மற்றும் சுதந்திர தின விழா போன்ற சிறப்புக்கால நிகழ்வுகளின்போது கூட்டங்களை கட்டுப்படுத்த ஈடுபடுத்தப்படுகிறது. இப்படையிலுள்ள குதிரைகளின் எண்ணிக்கை 31 ஆகும். சென்னை மற்றும் மதுரை

மாநகரங்களில் உள்ள காவல் துறை குதிரைப் படையானது பண்டிகைகள் / ஊர்வலங்கள், பெரிய அளவிலான விளையாட்டு போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளின் போது கூட்டத்தை கட்டுப்படுத்த ஈடுபடுத்தப்படுகிறது.

### (xv) காவல் பயிற்சி

**1896**–ஆம் ஆண்டு வேலூரில் காவல் பயிற்சி பள்ளி முதலில் உருவாக்கப்பட்டது. பின்னர் **1905** ஆம் ஆண்டில் இது காவலர் பயிற்சி கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. **1976**-ஆம் ஆண்டு சென்னை அசோக் நகருக்கு காவல் பயிற்சி கல்லூரி மாற்றப்பட்டு, நேரடியாக பணியமர்த்தப்பட்ட உதவி ஆய்வாளர்கள் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டது. **2008** ஆம் ஆண்டு தமிழ்நாடு உயர் பயிற்சியகம், வண்டலூரில் உருவாக்கப்பட்டு, உதவி ஆய்வாளர்கள் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு அடிப்படைப்

பயிற்சி அளிக்கப்பட்டது. காவல் பயிற்சி கல்லூரி மீண்டும் **2010** ஆம் ஆண்டிலிருந்து சென்னை அசோக்நகரில் இயங்கிவருகிறது.

இப்பயிற்சிக் கல்லூரியானது தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாம் நிலை காவலர்களுக்கு மாநிலம் முழுவதும் அடிப்படை பயிற்சி வழங்கி வருகிறது. இக்காவல் பயிற்சிக் கல்லூரியில் கூடுதல் காவல்துறை இயக்குநர் தலைமையில், 1 காவல்துறை தலைவர், 1 காவல்துறை துணை தலைவர், 1 முதல்வர் / காவல் கண்காணிப்பாளர் ஆகியோருடன் இயங்கி வருகிறது. தற்போது இப்பயிற்சி கல்லூரியானது தமிழ்நாடு காவல் பயிற்சி தலைமையிடமாக மாற்றப்பட்டுள்ளது.

தமிழகத்தில், வேலூர், கோவை, மதுரை, சேலம், திருச்சி, தூத்துக்குடி, திருவள்ளூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் **8** நிரந்தர காவலர் பயிற்சி பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. காவல் பயிற்சி பள்ளியில் 1 காவல் கண்காணிப்பாளர்,

8 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 8 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 132 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 336 காவல் ஆளிநர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இதில் பணிபுரியும் காவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி, அடிப்படைப் பயிற்சி, பாடத்திட்டம் வடிவமைப்பு ஆகியவைகள் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை மேற்கு, சென்னை கிழக்கு, திண்டுக்கல், சேலம், திருநெல்வேலி, வேலூர், விழுப்புரம், திருச்சி, இராமநாதபுரம், மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் காஞ்சிபுரம் சரக தலைமையகத்தில் அமைந்துள்ள 13 பணியிடை பயிற்சி மையங்கள் தமிழ்நாடு காவல் பயிற்சி தலைமையகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

புதுதில்லியிலுள்ள காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணியகத்தின் **(BPR&D)** வழிகாட்டுதலின் படி மாணவர் காவல் படைப்பயிற்சி (**Student Police Cadet)** ஏற்பாடு செய்து காவல் பயிற்சி கல்லூரியின் மூலம் செயல்பட்டு வருகிறது, இது மாநிலம் முழுவதும் **1,117** பள்ளிகளில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் **2021** ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் மொத்தம் **49,998** மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள்.

**செயல்திறன்**

**14.07.2021** முதல் **28.10.2021** வரையிலான காலகட்டத்தில் பணிபுரியும் காவல்துறை அதிகாரிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டு, சென்னை காவல் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்பட்டன. **416** காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் இப்பயிற்சியில் பங்கு பெற்றார்கள்.

காவல் பயிற்சி பள்ளி திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள காவலர் பயிற்சி பள்ளிகளில் 2021 ஆம் ஆண்டிற்கான 506 தகுதியான தலைமை காவலர்கள் / சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு முன் பயிற்சி வழங்கப்பட்டது. மேலும், இதுவரை, 1064 காவலர்கள் 13 சரக பணியிடை பயிற்சி மையங்களில் 28 பயிற்சி பாடங்கள் நடத்தப்பட்டு அதன் மூலம் பயன் அடைந்துள்ளனர். ஹைதராபாத்திலுள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் தேசிய காவல் உயர்பயிற்சியகத்தால் நடத்தப்பட்ட பணியிடைப் பயிற்சி-III திட்டத்தை, இந்திய காவல் பணி அதிகாரிகளுக்கு ஆன்லைன் மூலம் சென்னை காவல் பயிற்சிக் கல்லூரியில் வழங்குவதற்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

புதிதாகப் பணியமர்த்தப்பட்ட 10,484 தேர்வு காவலர்களுக்கான அடிப்படை பயிற்சியானது 43 நிரந்தர மற்றும் தற்காலிக காவல் பயிற்சி பள்ளிகளில் 14.03.2022

அன்று தொடங்கப்பட்டுள்ளது. தற்பொழுது **9,801** பயிற்சி காவலர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். அதில் **2,953** ஆயுதப்படை பெண் காவலர்கள் மற்றும் **749** ஆயுதப்படை ஆண் காவலர்கள், **6,099** தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஆண் காவலர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம்**

இந்தியாவிலுள்ள சிறந்த பயிற்சி நிறுவனங்களில் ஒன்றான தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம், காவல்துறை உதவி ஆய்வாளர்கள் மற்றும் அதற்கு மேல் உள்ள அதிகாரிகளுக்கு உயர்தர பயிற்சி அளிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. இந்த அதிநவீன பயிற்சியகம் சுமார் **129** ஏக்கர் பரப்பளவில் நகர எல்லையை ஒட்டிய காப்புக்காடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது.

இப்பயிற்சியகத்தில் இன்று வரை **3,068** நேரடி உதவி காவல் ஆய்வாளர்களுக்கு **17** அணிகளாகவும், **249** நேரடி

காவல் துணை கண்காணிப்பாளர்களுக்கு 11 அணிகளாகவும் மற்றும் **87** இந்திய காவல் பணி அதிகாரிகளுக்கு 12 அணிகளாகவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் **437** உதவி ஆய்வாளர்களுக்கு (தொழில்நுட்பம்) **7** அணிகளாகவும் மற்றும் **188** விரல்ரேகை பிரிவு உதவி ஆய்வாளர்களுக்கு **2** அணிகளாகவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**செயல்பாடு**

தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில், வரலாற்றிலேயே முதன் முறையாக, ஒரே அணியில் **88** காவல் துணை கண்காணிப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு **29.07.2021** அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் முன்னிலையில் இவ்வணிக்கு பயிற்சி நிறைவு அணிவகுப்பு நடத்தப்பட்டது.

தற்போது **930** உதவி காவல் ஆய்வாளர்கள், (தாலுகா, ஆயுதப்படை மற்றும் த.சி.கா) (18 முதல் **20**வது அணிகள்)

1.9.2021 முதல் ஒரு வருட அடிப்படை பயிற்சியினை பெற்று வருகின்றனர். இப்பயிற்சியினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காணொலி காட்சி மூலம் சிறப்புரை ஆற்றி துவக்கி வைத்தார்கள். 73-ம் அணியைச் சேர்ந்த 9 இந்திய காவல் பணி அதிகாரிகளுக்கு 20.12.2021 முதல் 15.1.2022 வரை பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்கள் தற்போது மாவட்ட செயல்முறைப் பயிற்சியில் உள்ளார்கள்.

காவல் உதவி ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெறத் தகுதியான 984 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மற்றும் தலைமை காவலர்களுக்கு 9 வார பதவி உயர்வு முன் பயிற்சி அளிக்கப்பட்டது.

பெண்கள் மற்றும் சிறார்களின் பாதுகாப்பு, பெண்கள் மற்றும் சிறார்களுக்கு எதிரான குற்றங்களை கையாளவும் சிறந்த முறையில் புலன் விசாரணை மேற்கொள்ளவும்

குற்றங்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் காவல் அதிகாரிகள் மற்றும் விசாரணை அலுவலர்களுக்கு பணியிடைப் பயிற்சி தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில் அளிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட பயிற்சிகளைத் தவிர, தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகம் பிற துறை அதிகாரிகளுக்கு கீழ்க்கண்டவாறு பயிற்சி அளித்துள்ளது:-

- போக்குவரத்து துறை (4 மோட்டார் வாகன ஆய்வாளர்கள்),
- மத்திய கலால் ஆய்வாளர்கள் (162 அதிகாரிகள்)
- நீதித்துறை நடுவர்கள் (67 நடுவர்கள்)

பணியில் இருக்கும் காவல் அதிகாரிகளின் திறனை மேம்படுத்தவும் தற்போதைய திருத்தப்பட்ட சட்ட விதிகளை அறிந்து கொள்வதற்கு ஏதுவாகவும் 26 காவல் துணை

கண்காணிப்பாளர்கள், **81** ஆய்வாளர்கள் மற்றும் **84** உதவி ஆய்வாளர்களுக்கு அவர்களது பணியை மேம்படுத்தவும் பல புத்தாக்க, திறன் மேம்பாட்டு சிறப்பு வகுப்புகள் மனித கடத்தல் தடுப்பு, ஒழுக்கக்கேடான கடத்தல், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் காணாமல் போன நபர்களை விசாரணை செய்தல், பேரிடர் மேலாண்மை மற்றும் காவல்துறையின் துரித நடவடிக்கை, ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள் வழக்குகளை கையாளுதல் மற்றும் போதைப்பொருள் சட்ட அமலாக்கங்கள், **SC/ST** சட்டம் மற்றும் நடைமுறைகள் மீதான விசாரணை குறித்த பயிற்சித் திட்டம், அறிவுசார் சொத்துரிமைகள் **(IPR)**, இயற்கைக்கு மாறான மரணங்கள், தீவைப்பு மற்றும் தீவைப்பு பற்றிய விசாரணை சமூக மற்றும் சட்டப் பரிமாண பயிற்சி ஆகிய தலைப்புகளில் நடத்தப்பட்டது. இது தவிர இவ்வாண்டில் சுமார் **500** க்கும் மேற்பட்ட காவல் அதிகாரிகளுக்கு திறன் மேம்பாடு, புத்தாக்க

மற்றும் சிறப்பு பயிற்சிகள் தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில் இணையவழி மூலம் நடத்தப்பட்டது. 135 அமைச்சுப் பணியாளர்கள் கலந்துகொண்ட அமைச்சுப் பணியாளர் பாடங்களில் மூன்று புத்தாக்க பயிற்சிகள் நடத்தப்பட்டன.

**சாதனைகள்**

தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்திற்கு தனித்த புதிய இணையதளம் தொடங்கப்பட்டது.

வனப்பகுதியில் உள்ள தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக வளாகம் முழுவதும் கம்பியில்லா இணைய வசதி (wi-fi) செய்யப்பட்டுள்ளது. இது தமிழகத்தில் முதல் நிகழ்வு ஆகும்.

சூரிய மின்சக்தி நிலையம் தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில் நிறுவப்பட்டு மின் தேவைகள் பூர்த்தி

செய்யப்படுகிறது. காவல் உயர்பயிற்சியகத்தில் ஏற்கனவே உள்ள வசதிகள் தவிர தற்போது ஒருங்கிணைந்த இணைய ஆய்வுக்கூடம் மற்றும் தடய அறிவியல் ஆய்வகம், சமுதாய காவல் பாதுகாப்பு மையம், உருவகப்படுத்தப்பட்ட (simulated) ஆயுத பயிற்சி மையம் (துப்பாக்கி சுடுதல்) ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. தேசிய அறிவு இணையம் தொடர்பு வாயிலாக உயர்தகவல் தொழில்நுட்ப உத்திகள் கற்பிக்கப்படுகிறது. அதிநவீன வகுப்பறைகள் மற்றும் கட்டமைப்புகள் தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**(xvi) தொழில்நுட்பப் பணிகள்**

காவல் வானொலி பிரிவானது ராணுவ பயன்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட உயர் அலைவரிசை சாதனங்களைக் கொண்டு 1948-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு,

1996-ஆம் ஆண்டு 'காவல் தொலைத்தொடர்புப் பிரிவு' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**2021-ஆம் ஆண்டிற்கான புதிய முயற்சிகள்**

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தாம்பரம் காவல் ஆணையரகத்திற்கு பிரத்யேக அதி உயர்அலை தகவல் தொடர்பு (VHF) வசதிகளை வழங்குவதற்காக வண்டலூர் மற்றும் பல்லாவரத்தில் அதி உயர்அலை திருப்பி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இது தவிர வண்டலூரில் கூடுதலாக ஒரு அதி உயர் அலை திருப்பி கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இத்துடன், தாம்பரம் காவல் ஆணையரகத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவிற்கென இரண்டும், போக்குவரத்து பிரிவிற்கென ஒன்றும் ஆக மொத்தம் மூன்று பிரத்யேக தகவல் தொடர்பு சேனல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆவடி காவல் ஆணையரகத்திற்கு பிரத்யேக அதி உயர்அலை தகவல் தொடர்பு வசதிகளை வழங்குவதற்காக மதுரவாயல் மற்றும் பல்லாவரத்தில் அதி உயர்அலை திருப்பி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இது தவிர, மதுரவாயலில் கூடுதலாக ஒரு அதி உயர்அலை திருப்பி கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இத்துடன், ஆவடி காவல் ஆணையரகத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவிற்கென இரண்டும், போக்குவரத்து பிரிவிற்கென ஒன்றும் ஆக மொத்தம் மூன்று பிரத்யேக தகவல் தொடர்பு சேனல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறை / அவசர கால உதவி மையத்தில் பொதுமக்களிடமிருந்து வரும் இணைய வழி நிதி மோசடி தொடர்பான அழைப்புகளை எளிதாகக் கையாள்வதற்காக, தொழில்நுட்ப மாற்றங்கள் செய்யப்பட்டு, எண் **155260**ஐ ஒருங்கிணைத்து இணைய

குற்றப் பிரிவிற்கு அழைப்பை எளிதாக மாற்றுவதற்காக ஒற்றை பொத்தான் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இணைய குற்றப் பிரிவில் பெறப்படும் நிதி மோசடி சம்பந்தப்பட்ட புகார்கள் 24 மணி நேரத்திற்குள் பெறப்படின் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

ரூ.71.30 இலட்சம் செலவில் 31 ஆளில்லா விமானங்கள் வாங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

சென்னை, காவல்துறை தலைமையகத்தில் நிறுவப்பட்ட மாநில செயல்பாட்டு மையத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற தேவர் ஜெயந்தி விழா மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் கார்த்திகை தீபத் திருவிழா நிகழ்வுகளின் நேரடி காணொளி காட்சிகளை 24 சிசிடிவி கேமராக்கள் மற்றும் ஆளில்லா விமானம் மூலம் பெற்று

நேரலை காட்சிகளை காவல்துறை தலைமையகத்தில் உயர் அதிகாரிகள் கண்காணித்தனர்.

காவல்துறை வீட்டுவசதி கழகம் மூலம், காவல் துறைக்கான தகவல் தரவு மையம் அமைக்கும் பணிகள் ரூ.80 லட்சம் செலவில் காவல்துறைத் தலைமை அலுவலக வளாகத்தில் உள்ள தொழில்நுட்ப சேவைகள் மையத்தில் துவக்கப்பட்டு கடந்த 2021-ஆம் ஆண்டு அனைத்து பணிகளும் நிறைவுற்றது.

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பற்றி ஆய்வு செய்வதற்கும், அதற்கான அறிவுத் தளத்தை முழுமையாக மேம்படுத்துவதற்கும் தொழில்நுட்ப சேவைகள் பிரிவு 10 வெவ்வேறு தொழில்நுட்பக் குழுக்களை உருவாக்கியது. அதன்படி, குழு உறுப்பினர்களுக்கு 15 புதிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

'டெக்-டானிக்" என்ற மின்னிதழ் ஏப்ரல் 2021-இல் அறிமுகம் செய்யப்பட்டு காவல்துறை உயர் அதிகாரிகள் உட்பட அனைத்து களப்

பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. இம்மின்னிதழ், திறன் மேம்பாட்டின் ஒரு பகுதியாக தொழில்நுட்ப அதிகாரிகளின் அறிவுத் திறனை மேம்படுத்துவதோடு, உயர் அதிகாரிகளுக்கு தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது.

**2021 ஆம் ஆண்டிற்கான சாதனைகள்**

**மாநில காவல் தலைமை மற்றும் அவசரகால உதவி மையம்:**

அவசரகால உதவி மைய திட்டத்தின் ஒரு பகுதியாக, 112 என்ற எண்ணை தொடர்பு கொண்டால் அந்த அழைப்புகள் அனைத்தும் சென்னை எழும்பூரிலுள்ள மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறைக்கு வரும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அந்த அவசரகால அழைப்புகள் அங்கிருந்து உடனடியாக இதர சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டு அவற்றுடன் தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது.

**2021** டிசம்பர் வரை, சுமார் **1.20** கோடி அழைப்புகள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் **20.70** லட்சம் துயர்நீக்க அழைப்புகளாகும். காவல் மற்றும் தீ விபத்து தொடர்பான புகார்கள் மற்றும் பொது விசாரணை அழைப்புகள் **6.65** இலட்சம் ஆகும். இவை தவிர, சுகாதாரம், மின்சாரம், இரயில்வே மற்றும் கடலோரப் பாதுகாப்பு போன்ற சுமார் **43,000** இதர துறைகளுக்கான அவசர கால அழைப்புகளும் கையாளப்பட்டுள்ளன. மேலும், இம்மையமானது **"காவலன்"** செயலியைப் பயன்படுத்தி பெறப்பட்ட சுமார் **2.60** இலட்சம் அவசரகால புகார் அழைப்புகளையும் கையாண்டுள்ளது. இதில், ஏறத்தாழ **30,000** உண்மைத் தன்மையுள்ள புகார் அழைப்புகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் **14.5** இலட்சம் பொதுமக்கள் காவலன் செயலியை பதிவிறக்கம் செய்துள்ளனர். அதில், இச்செயலியின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக,

9.5 லட்சம் நபர்கள் ப்ளே ஸ்டோரில் பதிவு செய்துள்ளனர். சேவை செயல்திறன் அடிப்படையில், இச்செயலிக்கு 4.7 / 5.0 என்ற மதிப்பீடு அளிக்கப்பட்டுள்ளது.

2018-ம் ஆண்டில் 21 கணினி இணைப்புக் கட்டுப்பாடுகள் இருக்கக்கூடிய நவீன தரவுத் தளம் ஒன்று அமைக்கப்பட்டது. கூடுதலாக, 2021-ம் ஆண்டில், தகவல் தொழில்நுட்பம் அடிப்படையிலான பல்வேறு கணினி இணைப்புக் கட்டுப்பாடுகள் மற்றும் கைப்பேசி செயலிகள் அளிப்பதற்காக 7 கணினி இணைப்புக் கட்டுப்பாடுகள் அமைக்கப்பட்டன. எழும்பூரிலுள்ள மாநில காவல் நவீன கட்டுப்பாடு அறை மற்றும் அவசரகால உதவி மையத்திலுள்ள தொழில்நுட்ப பிரிவால் உருவாக்கப்பட்ட நவீன தரவு மையத்தில், இதுநாள் வரையில், 21 இலட்சம் அவசரகால அழைப்புகளின் விவரங்களும், 9.5 இலட்சம் காவலன் செயலி பயன்படுத்துவோரின் தகவல்களும் உள்ளன. இந்திய தரச் சான்றிதழ்படி தரவு

பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு, இந்திய தரச் சான்றிதழ் 27001:2013 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரிடமிருந்து 3.11.2021 அன்று பெறப்பட்டது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் படைக்கு வரும் அழைப்புகளை அவசரகால உதவி மையத்துடன் இணைக்க அரசு 15.66 கோடி ரூபாயை ஒப்பளிப்பு செய்துள்ளது. ஒப்பளிப்பின் அடிப்படையில், 101 தொலைபேசி எண்ணுக்கான அவசரகால அழைப்புகளை பெறுவதற்காக தற்போதுள்ள சிஏடி (CAD) மென்பொருளை மாற்றியமைப்பதற்கு தேவையான பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டு, 2021-ம் ஆண்டில் அமல்படுத்தப்பட்டது. மேலும், 2021 ஜூலை மாதத்தில், புதிய அவசர தொலைபேசி இணைப்பகம் ரூ.2.04 கோடி செலவில் பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் படைக்கு வரும் மாநில அளவிலான 101 எண்ணுக்கான அவசரகால அழைப்புகள்,

முன்மாதிரி சோதனைக்குப் பின்னர், 29.7.2021 அன்று மாநில காவல் நவீன கட்டுப்பாட்டு அறை மற்றும் அவசரகால உதவி மையத்தில் கையாளப்பட்டன.

820 காவல் நிலையங்களுக்கு இணையவழி கேமராக்களுடன் கூடிய உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் 23.40 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளது. மாண்பமை உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களின்படி, ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும், இரவிலும் பார்க்க கூடிய, 2 / 3 மணி நேரம் தாங்கக்கூடிய மின்கலம், 20 முதல் 30 நாட்களுக்கான காணொளிகளை பதிவு செய்யக்கூடிய சேமிப்பு திறன் ஆகிய அம்சங்களைக் கொண்ட 6 இணையவழி கேமராக்களுடன் கூடிய உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் வழங்கப்பட்டுள்ளன.

எழும்பூர், முதன்மை பெருநகர குற்றவியல் நீதிமன்றம் உட்பட நான்கு நீதிமன்றங்களில் இணையவழி கேமராக்களுடன்

கூடிய உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் ரூ.7.65 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது. இவற்றின் செயலாக்கம் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**(xvii) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு (PEW)**

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல், பதுக்கி வைத்து விற்றல் போன்ற குற்றங்களை கண்டுபிடித்தல் மற்றும் அண்டை மாநிலத்தில் இருந்து கடத்தி வரப்படும் மதுபானங்களைத் தடுத்தல் ஆகியவை மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் முக்கியப் பணிகள் ஆகும். இப்பிரிவு காவல்துறை கூடுதல் இயக்குநரின் (அமலாக்கம்) கீழ் இயங்கிவருகிறது. அவருக்கு உதவியாக காவல்துறை தலைவர் (அமலாக்கம்), சென்னையில் காவல் கண்காணிப்பாளர் கீழ் ஒரு மத்திய புலனாய்வு பிரிவும், சென்னை, சேலம் மற்றும் மதுரை மண்டலங்களில் காவல்

கண்காணிப்பாளர் (அமலாக்கம்) கீழ் தலா ஒரு பிரிவும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் மொத்தம் **99** மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் / மாநகரங்களில் உள்ள மதுவிலக்கு அமலாக்கப் பிரிவும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் / துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் இயங்கி வருகிறது. மதுவிலக்கை அமல்படுத்துவதில் முதன்மைப் பொறுப்புடைய அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையர்களின் நிர்வாக மற்றும் செயல்பாட்டு கட்டுபாட்டின் கீழ் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு செயல்படுகின்றது. இவை தவிர, போலி மதுபானம், தெளிந்த சாராவி மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தப்படுவதை கண்காணிக்கும்

வகையில், தமிழ்நாட்டில் **45** நிரந்தர சோதனை சாவடிகளும், **7** நடமாடும் சோதனை சாவடிகளும் இயங்கிவருகின்றன.

**செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்**

தமிழ்நாட்டில் **01.05.2021** முதல் **20.03.2022** வரை கள்ளச்சாராய இறப்பு நிகழ்வுகள் ஏதும் நடைபெறவில்லை. **1,52,595** வழக்குகள் பதிவு செய்யப்பட்டு **1,52,422** குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். **6,44,695** லிட்டர் கள்ளச்சாராயம், **92,569** லிட்டர் தெளிந்த சாராவி மற்றும் **5,30,314** பிறமாநில மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. மதுவிலக்குக் குற்றங்களில் பயன்படுத்தப்பட்ட **5,543** மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டு பொது ஏலத்தில் விற்கப்பட்டன.

நுண்ணறிவு தகவல்கள், அலைபேசி அழைப்புகள் ஆய்வு ஆகியவற்றின் மூலம் குற்றவாளிகளைக் கண்டறிந்து கைது செய்ய சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தெளிந்த சாராவி, போலி மதுபானம் தயாரிப்பதற்காக அண்டை மாநிலங்களில் இருந்து கடத்தப்படுகிறது. இக்கடத்தலைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் உள்ள மாநில எல்லைகளில் வாகன தணிக்கைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**1937** ஆம் ஆண்டு மதுவிலக்கு தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் "மெத்தனால்" என்ற இரசாயனப் பொருளின் பயன்பாட்டால் உயிரிழப்புகள் நிகழ்கின்றன. ஆதலால் "மெத்தனால்" எளிதாக கிடைப்பதைத் தடுக்க அரசு **1959**-ம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராயம், மெத்தில்

ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்சு பாலிஷ்) விதிகளில் உரிய திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

மேலும் "மெத்தனால்" தயாரிக்கும் மற்றும் பயன்படுத்தும் உரிமம் பெற்ற நிறுவனங்களை சோதனையிட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கள்ளச்சாராயம் மற்றும் மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணி, கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், தெருமுனை பிரச்சாரம் போன்றவை தமிழ்நாடு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும் மதுவிலக்கு விழிப்புணர்வு தொடர்பாக கவிதை, கட்டுரை, குறும்படம் போன்ற பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் போலி மதுபானம் விற்பனை ஆகிய மதுவிலக்கு

குற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள் தகவல் அளிக்க ஏதுவாக கட்டணமில்லா மதுவிலக்கு உதவி எண் 10581 ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அமலாக்கப்பிரிவின் தலைமையகத்தில் 24-மணி நேரமும் இயங்கி வருகிறது.

தெளிந்த சாராவி, போலி மதுபானம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து மதுபானம் கடத்துதல் தொடர்பாக இரகசிய தகவல் தரும் நபர்களுக்கு பண வெகுமதி வழங்கப்படுகிறது. இதற்கென இந்தாண்டு ரூ.15.00 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**காந்தியடிகள் காவலர் பதக்கம்**

கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் திறம்பட செயல்படும் காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளினர்களுக்கு “காந்தியடிகள் காவலர் பதக்கம்” ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

**(xviii) ஊர்க்காவல் படை**

தமிழ்நாடு ஊர்க்காவல்படை விதி 1963-ன்படி தமிழக ஊர்க்காவல்படை அமைப்பு 1963ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இது ஒரு தன்னார்வ சேவை அமைப்பாகும். ஊர்க்காவல் படையினர் காவல்துறையுடன் இணைந்து சட்டம் ஒழுங்கினை பராமரித்தல், புயல் வெள்ளம் மற்றும் இயற்கை சீற்ற காலங்களில் பொதுமக்களை காப்பாற்றுவதற்கான நிவாரண பணிகளில் ஈடுபடுதல், போக்குவரத்து நெரிசலை சரி செய்யும் பணிகளில் ஈடுபடுதல், மக்கள் கூட்டம் மிகுந்த பகுதிகளில் உள்பாதுகாப்பு, மத நல்லிணக்கத்தை மேம்படுத்துதல், சுகாதாரம், சுத்தமான உணவு மற்றும் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துதல் போன்ற பணிகளை செய்து வருகின்றனர். ஊர்க்காவல்படையில் தற்போது 15,053 நபர்கள் (2805 பெண் ஆளிநர்கள் உள்பட) பணியாற்றுகின்றனர்.

(அ) **2022**-ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல் பாதுகாப்புப் பணியில் **12,321** ஊர்க்காவல் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

(ஆ) **2021**-ம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது மீட்பு பணிகளில் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறைக்கு உதவும் வகையில் கடலோர மாவட்டங்களில் உள்ள ஊர்க்காவல்படையினர் சிறப்பாக பணிபுரிந்தனர்.

**X (i) காவலர்களுக்கான நலத்திட்டங்கள்**

- தமிழ்நாடு காவல்துறை கருணைக்கொடைத் திட்டத்தின் கீழ் இறப்பு நிவாரணநிதி, கல்வி உதவித்தொகை, சந்தாதாரார் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகை போன்ற உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு காவலர் சேம நல நிதி திட்டத்தின் கீழ் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய்களுக்கு, மருத்துவ சிகிச்சை மேற்கொள்வதற்காக அதிகபட்ச நிதியுதவியாக ரூ. 5 இலட்சம் வரை வழங்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இதற்கென, ஆண்டொன்றிற்கு ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. 2021-ம் ஆண்டில் இதுவரை 107 காவலர்களின் நலனுக்காக ரூ.3.80 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு கல்வி ஆண்டிலும், பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில், முறையே முதல் 10 இடங்களில் தேர்ச்சி பெற்ற காவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. 2020-2021 ஆம்

ஆண்டில் **634** பிள்ளைகளுக்கு ரூ.**21.15** இலட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- காவல்துறை / அமைச்சுப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு உயர் கல்விக்கென சிறப்பு கல்வி உதவித்தொகையை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்படி, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் **100** மாணவ, மாணவியருக்கு தலா ரூபாய் **25,000/-** அல்லது கல்வி நிறுவனங்களில் செலுத்தப்படும் சரியான கட்டணம், இவற்றில் எது குறைவானதோ, அத்தொகையை நான்கு வருட காலத்திற்கு அல்லது அப்படிப்பு முடியும் வரை வழங்கப்படுகிறது. **2020 - 2021**-ம் கல்வியாண்டில் காவல் பணியாளர்களின் பிள்ளைகள் **402** பேருக்கு ரூ.**79.18** இலட்சம் வழங்கப்பட்டது.

- காவல் பணியாளர்கள் பணியின்போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு அல்லது துன்பகரமான சூழ்நிலைகளில் சிக்கி உயிரிழக்க நேரிட்டால் அல்லது ஊனம் ஏற்பட்டால் அல்லது காயமடைந்தால், அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் / இழப்புகளுக்கு ஈடு செய்யும் வகையில் அரசினால் கருணைத் தொகை ரூபாய் 20,000/- முதல் ரூபாய் 15 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது.
- 2021-2022 ஆம் நிதியாண்டில், 8 காவல் பணியாளர்களுக்கு ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம் நவல்பட்டு காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பூமிநாதன் 21.11.2021 அன்று இரவு ரோந்துப் பணியில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது அடையாளம் தெரியாத இரண்டு திருடர்களால்

கொடூரமாக வெட்டி கொலை செய்யப்பட்டு உயிரிழந்தமைக்கு நிவாரணமாக அன்னாரின் குடும்பத்தினருக்கு ரூ.1 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

- 02.11.2021 அன்று தலைமைச் செயலக வளாகத்திலுள்ள முதலமைச்சரின் தனிப்பிரிவு கட்டிடத்தின் அருகில் உள்ள பழமை வாய்ந்த பெரியமரம் மழையின் காரணமாக வேரோடு சாய்ந்து விழுந்ததினால் உயிரிழந்த, தலைமைக்காவலர் திருமதி.J.கவிதா, முத்தியால் பேட்டை போக்குவரத்து காவல்நிலையம் அவர்களது குடும்பத்தினருக்கு ரூ.10 இலட்சம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும், ரூபாய் 15 இலட்சம் கூடுதல் நிவாரணத் தொகையாகவும் வழங்கப்பட்டது மற்றும் காயமடைந்த திரு.K.முருகன், வண்ணாரப்பேட்டை போக்குவரத்து காவல் நிலையம் என்பவருக்கு

ரூ.2 இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும், ரூ.3 இலட்சம் கூடுதல் நிவாரணத் தொகையாகவும் வழங்கப்பட்டது.

- 22.12.2021 அன்று அதிகாலை மதுரை மாநகர் விளக்குத்தூண் காவல் நிலையத் தலைமைக் காவலர்கள் திரு.சொ.சரவணன் மற்றும் திரு.கா.கண்ணன் ஆகிய இருவரும் இரவு பாதுகாப்புப் பணிக்குச் சென்றபோது கீழவெளி வீதியில் பாழடைந்த நிலையிலிருந்த கட்டடம் முன் நின்று கொண்டிருந்தபோது அக்கட்டடம் திடீரென இடிந்து விழுந்ததில் தலைமைக் காவலர் திரு.சொ.சரவணன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், மற்றொரு தலைமைக் காவலரான திரு.கா.கண்ணன் என்பவருக்கு தலையில் பலத்த காயமும், கையில் எலும்பு முறிவும் ஏற்பட்ட நிலையில், விபத்தில்

உயிரிழந்த தலைமைக் காவலர் திரு.சொ.சரவணன் அவர்களது குடும்பத்தினருக்கு ரூ.25 இலட்சமும், காயமடைந்த மற்றொரு தலைமைக் காவலர் திரு.கா.கண்ணன் அவர்களுக்கு ரூ.5 இலட்சமும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

- 2021-2022-ம் ஆண்டில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த 5 காவலர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு ஆக மொத்தம் ரூ.1.78 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- மேலும், கொரோனா நோய் தொற்று தடுப்பு பணியில் முன்களப் பணியாளராக பணியாற்றும் போது கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்டு உயிரிழந்த 101 காவலர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.25 லட்சம் வீதம் சிறப்பு நிவாரண நிதியாக ரூ.25.25 கோடியும், 1 துப்புரவு பணியாளர் குடும்பத்தினருக்கு ரூ.5 லட்சமும், ஆக மொத்தம் ரூ.25.30 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- **2021-2022**-ம் நிதியாண்டில், சிறுகாயங்கள் மற்றும் பெரு காயங்களுக்கான பாதிக்கப்பட்ட **8** காவலர்களுக்கு ரூ.**9** இலட்சம் கருணைத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- இந்த வருடத்தில் கொரோனா இரண்டாம் அலையைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்ட காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரையிலானவர்களுக்கு தலா ரூ. **5,000/-** வீதம் **1,17,184** பேருக்கு ரூ. **58.60** கோடி பெற்று வழங்கப்பட்டுள்ளது.
- காவலர் முதல் தலைமைக் காவலர் வரையிலானவர்களுக்கு வார ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. பொதுப்பிரிவில் பணிபுரியும் காவலர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலானவர்களுக்கு மாத இடர்படி ரூ.**1,000/-** ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- மேலும் சென்னையைத் தலைமையிடமாக கொண்டு பணிபுரியும் குறிப்பிட்ட சிறப்புப்பிரிவு (SIU, CBCID, CSG, EOW, RP & PTS) காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரையிலானவர்களுக்கு சென்னை மாநகர காவலர்களுக்கு இணையாக மாதம் 26 நாட்களுக்கு உணவுப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.
- உணவு மானியத் திட்டத்தின் மூலம் காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல் பணியாளர்களுக்கு அரிசி, சர்க்கரை போன்ற அத்தியவாசிய உணவுப் பொருள்கள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், பொது மக்களுக்கு வழங்கப்படும் விலையில் பாதி விலையில் வழங்கப்படுகிறது. இதற்காக, அவர்களுக்கு காக்கி நிறத்தில் தனித்தன்மையான குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்நாள் வரையில், 63,205 காவல் பணியாளர்கள் இதன் மூலம் மானிய விலையில்

அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர். 2020-2021 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கு ஏறக்குறைய ரூபாய் 8.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- காவலர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்கள் பயனடையும் வகையில் 13 இடங்களில் காவல் மருத்துவமனைகளும், 36 இடங்களில் புறநோயாளிகள் மருத்துவ சேவை மையங்களும் செயல்பட்டு வருகின்றன. காவல் மருத்துவமனைகளின் தரம், படிப்படியாக உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.
- 30 வயது நிரம்பிய காவலர்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை அரசு மருத்துவமனைகளில் இலவச முழு உடல் மருத்துவப் பரிசோதனை அளிக்கப்பட்டு வருகிறது.

- தற்போது **30** வயதிற்கு மேற்பட்ட ஆண்/பெண் காவலர்களுக்கு வழங்கப்படும் முழு உடல் பரிசோதனைத் திட்டம், ஆண் மற்றும் பெண் காவலர்களின் வாழ்க்கைத் துணைக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- மாநிலம் முழுவதும் **50** இடங்களில் தமிழ்நாடு காவலர் சிறப்பு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. பணியிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற காவல் பணியாளர்கள், தீயணைப்பு துறை பணியாளர்கள், வனத்துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனர். தமிழ்நாடு காவல் சிறப்பு அங்காடிகளால் **1,80,550** குடும்பங்கள் (காவல் துறை-**1,58,044**, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை-**8,786**, சிறைத்துறை-**5,878** மற்றும் வனத்துறை-**7,842)** பயனடைந்துள்ளனர். மேலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட

**6** மாவட்டத்திலும் தமிழ்நாடு காவலர் சிறப்பு அங்காடிகள் ஆரம்பிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- காவலர்கள் பணியின்போது உயிரிழக்க நேரிட்டால், அவரை இழந்து வாடும் குடும்பத்திலிருந்து தகுதியுடைய மற்றும் சட்டப்படியான வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படுகிறது. மேலும் **53** வயது பூர்த்தியாவதற்கு முன்பு மருத்துவ இயலாமையின் மூலம் ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் தகுதியுடைய வாரிசுதாரர் ஒருவருக்கு அவரின் கல்வித் தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படுகிறது.
- **2021-2022**-ம் ஆண்டில் **1480** நபர்களுக்கு தகவல் பதிவு உதவியாளர் **(Data Entry Operator)** பதவிக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. **56** நபர்களுக்கு அலுவலக உதவியாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

16 நபர்களுக்கு அடிப்படை அரசு பணியாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிறப்பு நேர்வாக 1 நபருக்கு இளநிலை உதவியாளர் பதவியும், 1 நபருக்கு தட்டச்சர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. ஆகமொத்தம் 1554 பதவி வழங்கப்பட்டுள்ளது.

- அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி (AASC) மூலம் 1,20,000 காவலர்களுக்கு, போலீஸ் மற்றும் பொதுமக்கள் தொடர்பு மேம்படுத்துவதற்காக பயிற்சி தரும் திட்டம் தலைமைச் செயலாளரின் தலைமையில் தயார் செய்யப்பட்டு வருகிறது.
- 2021-2022-ம் ஆண்டு தமிழ்நாடு காவலர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 15 காவல் ஆளிநர்களுக்கு ரூ.29.66 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- மேலக்கோட்டையூரில் காவலர் பொது பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அப்பள்ளியில் தற்போது 1 முதல் 5-ஆம்

வகுப்பு வரை 105 மாணவர்கள் படித்து வருகின்றனர். தற்போது இவர்களிடம் பள்ளிக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை.

**(ii) காவல்துறை தலைமையகம்**

காவல்துறை இயக்குநர் அலுவலகத்தில் தலைமையிட பிரிவின் கீழ் இயங்கும் வரவு செலவு திட்டப் பிரிவு **(Budget)**, கட்டிடப்பிரிவு **(Buildings)**, மோட்டார் வாகன பிரிவு **(Motor Transport)** மற்றும் கணக்கு பிரிவு **(Accounts)** ஆகிய பிரிவுகள் மூலம் மாநிலம் முழுமைக்கான அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மோட்டார் வாகன பிரிவு**

காவல்துறையில் தோற்றுவிக்கப்படும் புதிய பணியிடங்கள் மற்றும் பிரிவுகளுக்கு புதிய வாகனங்கள் தேவைக்கேற்ப புதிய தலைமுறை வாகனங்கள் மற்றும் கழிவு

செய்யப்படும் பழைய காவல் வாகனங்களுக்கு ஈடாக புதிய வாகனங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் அனைத்து வகை வாகன பராமரிப்பு செய்யும் பணி ஆகியன காவல்துறை தலைமையக மோட்டார் வாகனப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது காவல்துறையில் **855** கனரக வாகனங்கள், **1866** மிதரக வாகனங்கள், **6323** இலகுரக வாகனங்கள், **600** சிறப்புவகை வாகனங்கள் மற்றும் **10377** இருசக்கர வாகனங்கள் உள்ளிட்ட **20,021** வாகனங்கள் உள்ளன.

மே **2021** முதலான காலத்தில் ரோந்து பணி, முக்கிய நபர்களின் பாதுகாப்பு, சட்டம் & ஒழுங்கு பராமரிப்பு போன்றவைக்காக கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுடன் புதிதாக உருவாக்கப்பட்ட தாம்பரம் மற்றும் ஆவடி காவல் ஆணையரகங்களுக்கு மற்றும் மாநில

இணைய குற்றப்புலனாய்வு மையத்திற்கு வழங்கப்பட்ட புதிய வாகனங்கள் உட்பட **352** நான்கு சக்கர வாகனங்களும் மற்றும் **396** இருசக்கர வாகனங்களும் ரூ **44.36** கோடி செலவில் கொள்முதல் செய்து சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

காவல்துறையில் கழிவு செய்யப்பட்ட காவல் வாகனங்களை ஏலம் விடும் முறையை எளிமையாக்கி சம்பந்தப்பட்ட காவல் ஆணையாளர் **/** காவல் கண்காணிப்பாளர்களுக்கு ஏலம் விடும் அதிகாரம் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் காவல்துறையில் கழிவு செய்யப்பட்ட **1,024** வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்ட சுமார் **11,741** வாகனங்களும் ஏலம் விடப்பட்டு **ரூ.18,87,65,834/-** அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**கணக்கு பிரிவு**

இப்பிரிவில், தமிழ்நாடு முழுவதிலுமுள்ள அனைத்து மாவட்டங்கள், காவல் ஆணையரகங்கள், சிறப்பு பிரிவுகள் ஆகியவற்றிற்கான சம்பளம் மற்றும் இதர செலவினங்களுக்காக அரசிடமிருந்து நிதி ஒப்பளிப்பு பெற்று பகிர்ந்தளிப்பது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், மாநிலம் முழுவதுமுள்ள காவல் துறையினரின் ஊதிய முரண்பாடு களைதல், தலைமையக பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர படிகள் பெற்று வழங்குதல் மற்றும் பணப்பிரிவு தொடர்பான இதர பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**காவல் நவீனமயமாக்கல் பிரிவு (MPF)**

காவல் நவீனமயமாக்கல் பிரிவு **MPF** திட்டத்தின் கீழ் பல்வேறு கொள்முதல்களைக் கையாளுகிறது. "காவல்துறையின் நவீனமயமாக்கலுக்கு மாநிலத்திற்கு உதவி" என்ற மானிய

உதவித் திட்டத்தின் கீழ் **60:40** என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநிலப் பங்கைக் கொண்ட மத்திய நிதியுதவித் திட்டமாகும். காவல் துறைக்கான பல்வேறு நிதியின் கீழ் பல்வேறு உபகரணங்கள், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள், தளவாடங்கள், துணைக்கருவிகளுடன் கூடிய கணினிகள் போன்றவற்றை இப்பிரிவின் மூலம் கொள்முதல் செய்து வழங்கப்படுகிறது. மே **2021** முதல் **MPF** திட்டத்தின் கீழ் ரூ.**42.60** கோடி செலவில் கீழ்கண்டவாறு கொள்முதல் செய்யப்பட்டுள்ளன:-

அ) தாம்பரம் மற்றும் ஆவடி ஆணையரகத்தின் பயன்பாட்டிற்காக பல்வேறு அறைகலன்கள், மடிக்கணினிகள், பணிநிலையங்கள், துணைக்கருவிகளுடன் கூடிய கணினி, பிரிண்டர்கள், ஸ்கேனர்கள் போன்றவற்றை ரூ. **3.33** கோடி செலவில் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.

ஆ) பல்வேறு அறைகலன்கள், உயர்நிலை கணினிகள், பல்வகை செயல்பாட்டு அச்சுப்பொறிகள், ஒருங்கிணைந்த

கணினிகள் போன்றவற்றை வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு ரூ.2.79 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டது.

இ) மல்டி ஷெல் லாஞ்சர்கள், குண்டு துளைக்காத கவசங்கள், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள், ட்ரோன் போலீஸ் பிரிவு மற்றும் உடற்பயிற்சி உபகரணங்களை வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு ரூ 13.20 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டது.

ஈ) குண்டு துளைக்காத கவசங்கள், மொபைல் ஒலி பெருக்கி அமைப்பு, தண்ணீர் டேங்கர் லாரி, கண்ணீர்ப்புகை துப்பாக்கி, வாகன நிறுத்திகள் மற்றும் மல்டி ஷெல் லாஞ்சர்கள் வாங்குவதற்கு 8.76 கோடி அனுமதி அளிக்கப்பட்டது.

உ) சூப்பர் காப் பெல்ட் வாங்குதல், பாதுகாப்புப் பணியின் போது பயன்படுத்தப்படும் கையடக்க பொது அறிவிப்பு உபகரணங்கள், பெண்களுக்கான வாகன ஓய்வு அறை,

டிஜிட்டல் பதாகைகள், வாகனத்தில் பொருத்தப்பட்ட எக்ஸ்ரே பேக்கேஜ் ஸ்கேனர், சிசிடிவி காட்சிகள் மற்றும் புகைப்படங்களை ஆய்வு செய்வதற்கான போட்டோகிராமெட்ரி வீடியோ அனலைசர், சமூக விழிப்புணர்வுக்காக வாகனம் ஆகியவை ரூ.8.84 கோடி செலவில் அனுமதி அளிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டது.

ஊ) அகச்சிவப்பு மற்றும் புற ஊதாக்கதிர் விளக்கு, கேஸ் மாஸ்க், இரவுப் பார்வை பைனாகுலர், தேடு விளக்குகள், எளிய நுண்ணோக்கி ஆகியவற்றின் கொள்முதலுக்காக ரூ.3.65 கோடி பயன்படுத்தப்பட்டது.

எ) போக்குவரத்து விதிமீறல்களுக்கு எதிராக வழக்குத் தொடர இ-சலான் முறை மாநிலம் முழுவதும் ரூ.1.90 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. இதற்கென சர்வர், ஸ்கேன் சேமிப்பு, தடையில்லா மின்சாரம் வழங்கும் கருவிகள், கணினிகள், இயங்குதளப் பயன்பாடு மற்றும் தரவுத் தளம்

ஆகியவை வாங்கப்பட்டன. இதுதவிர ஸ்ட்ரெச்சர், ஏணி, குண்டு துளைக்காத கவசங்கள் ஆகியவை ரூ.32.10 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டது.

**MPF இன் செயல்திறனை மேம்படுத்தும் திட்டம்:-**

காவல்துறை கண்காணிப்பாளர் (அலுவலக தானியங்கி மற்றும் கணினிமயமாக்கல்) என்ற பதவியினை காவல்துறை உதவி தலைவர் (நவீனம்) என்று மாற்றம் செய்து அரசு ஆணையிட்டது. இப்பதவி நவீனமயமாக்கும் திட்டம் மற்றும் கொள்முதல் தொடர்பான பணியினை விரைந்து முடிக்கவும் சீரிய முறையில் கண்காணிக்கவும் உதவும்.

காவல்துறை தலைவர் (நவீனம்) என்ற பதவியினை தரம் உயர்த்தி கூடுதல் காவல்துறை இயக்குநர் (நவீனம்) என்று அரசு ஆணையிட்டுள்ளது. இது மேலும், நவீனமயமாக்கும் திட்டம் மற்றும் கொள்முதல் தொடர்பான பணியினை தொய்வின்றி விரைந்து முடிக்க இயலும்.

மேற்கண்ட நிகழ்வுகள் தாமதமின்றி துவக்கத்தில் உள்ள அனைத்து செயற்பாடுகளையும் விரைந்து முடிக்க இயலும்.

### பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS)

ஒன்றிய அரசாங்கம் மத்திய நிதியுதவி திட்டங்களுக்காக (CSS) இவ்வமைப்பின் மூலம் நிதி உதவி செய்கிறது இதற்காக ஒற்றைச்சாளர அமைப்பு உருவாக்கப்பட்டது. PFMS திட்டத்திற்கென புதிய வங்கிக் கணக்கு ஒன்று உருவாக்கப்பட்டது. இக்கணக்கு PFMS திட்டத்துடன் இணைக்கப்பட உள்ளது.

### GeM Portal மூலம் கொள்முதல்

கொள்முதல் செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தவும், பல்வேறு பொருட்களின் பல்வேறு உற்பத்தியாளர்கள் / விற்பனையாளர்களிடமிருந்து அதிகபட்ச பங்கேற்பைப் பெறவும் MPF பிரிவு அனைத்து முக்கிய பொருட்களையும் GeM Portal மூலம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது ஏல

செயல்முறை நேரத்தை விரைவுபடுத்தும் மற்றும் திட்டமிட்ட காலக்கெடுவுக்குள் கொள்முதல்களை முடிக்க உதவும்.

**(iii) காவல் நிர்வாகம் - மனித வள மேலாண்மை**

அதிகாரிகள், அமைச்சுப் பணியாளர்களின் பணிநலன் கருதி காலத்தே அனைவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 52 இந்திய காவல் பணி அதிகாரிகள் காவல்துறை இயக்குநர், காவல் துறை கூடுதல் இயக்குநர், காவல்துறை தலைவர், காவல்துறை துணை தலைவர் ஆகிய பதவிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. 6 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களாகவும், 91 காவல் ஆய்வாளர்கள் காவல் துணைக் கண்காணிப்பாளர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அது போன்று அமைச்சுப் பணியாளர்களுக்கும் உதவியாளர் முதல் முதுநிலை நிர்வாக அலுவலர்கள் பதவி வரை பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

"உங்கள் துறையில் முதலமைச்சர் திட்டத்தின்" கீழ் காவலர் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்டம், சரகம், மண்டலம் மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டது. அதில் **3056** மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

"சிறு தண்டனைகள் ரத்து செய்யப்படும்" என்ற அறிவிப்பின் படி, காவல் ஆளிநர்களுக்கு எதிரான **1926** சிறு தண்டனைகள் அவர்கள் வருங்காலத்தில் பதவி உயர்வு பெறும் பொருட்டு ரத்து செய்யப்பட்டன.

காவல் நிர்வாகத்தில் சீர்திருத்தம் செய்யும் முயற்சியாக வெளிப்படைத்தன்மையைக் கொணரும் வகையில் காவல் ஆளிநர்கள் மற்றும் கீழ் நிலை பணியாளர்களின் பணி விவரங்கள் மற்றும் ஆண்டு மேம்பாட்டுத்திறன் அறிக்கைகளை கணிணி மயமாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

**காவல் ஆணையம்**

கடந்த ஆண்டு சட்டப்பேரவையில் மானியக்கோரிக்கையின் போது அறிவித்ததற்கிணங்க காவலர் - பொதுமக்களுக்கிடையேயான உறவை மேம்படுத்தவும், காவல் துறை பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், அவர்களுக்குத் தேவையான திட்டங்களையும், புதிய பயிற்சி முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற மாண்புமிகு நீதியரசர் திரு.C.T.செல்வம் அவர்களது தலைமையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐந்தாவது காவல் ஆணையம் **(Fifth Police Commission)** ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**XI. காவல்துறை கட்டிடங்கள் மற்றும் காவலர்களுக்கான வீட்டுவசதி**

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகமானது காவலர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் முக்கிய

குறிக்கோளோடு நிறுவப்பட்டது. அதன்பிறகு பல்வேறு காலகட்டங்களில் காவலர் வாடகை குடியிருப்புகள், காவல் நிலையங்கள் மற்றும் இதர காவல் துறை கட்டடங்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையினருக்கு இதர கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்கும் ஆணை வழங்கப்பட்டது.

சீருடைப் பணியாளர்களுக்கு இது வரை 57,279 குடியிருப்புகள் மற்றும் அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதன்படி காவல் துறையினரின் குடியிருப்பு தேவைகள் 52 விழுக்காடு நிறைவடைந்துள்ளது. மேலும், 4136 சீருடைப் பணியாளர்கள் குடியிருப்புகள், அலுவலகங்கள் மற்றும் சொந்த இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்படும் நிலையில் உள்ளது.

காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர், ஆய்வாளர் மற்றும் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு வீடுகளின் கட்டட பரப்பளவு விகிதசாரபடி உயர்த்தி வழங்கி தமிழக அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இது காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களிடையே மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடம் காவல் துறையினரின் பயன்பாட்டுக்கு விரைவில் ஒப்படைக்கப்பட உள்ளது.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள பையூர்பிள்ளைவயல், சேலம் மாவட்டத்திலுள்ள தாரமங்கலம் மற்றும் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கண்டம்பாக்கம் ஆகிய இடங்களில் வீடுகள் கட்டப்பட்டு பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப்பட உள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம் மேலக்கோட்டையூரில் “உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின்” கீழ் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இதுவரையில் **1940** வீடுகளுக்கு பத்திரப் பதிவுகள் செய்து தரப்பட்டுள்ளது.

## XII. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை ஆகியவற்றிற்கு தகுந்த சீருடை சார்நிலைப் பணியாளர்களை தேர்வு செய்யும் நோக்கத்தோடு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் உருவாக்கப்பட்டது.

**சாதனைகள்**

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் **969** காவல் உதவி ஆய்வாளர்கள் (தாலுகா, ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் படை) பதவிகளுக்கான முடிவுகள்

இறுதி செய்யப்பட்டு தற்போது அவர்கள் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், காவல், தீயணைப்பு, சிறை மற்றும் சீர்திருத்த சேவைகள் துறைகளில் 11,813 இரண்டாம் நிலை காவலர்கள், இரண்டாம் நிலை சிறை காவலர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு 14.03.2022 முதல் அவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன.

இதுதவிர, தாலுகா மற்றும் ஆயுதப்படை காவல் உதவி ஆய்வாளர்களுக்கான 444 காலி பணியிடங்களின் அறிவிப்பாணையை 08.03.2022 அன்று தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ளது.

## XIII. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை

குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத்துறையானது, 1955-ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டம்,

1980-ஆம் ஆண்டு கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோக பராமரிப்புச் சட்டம் மற்றும் இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு வெளியிடும் பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளை அமல்படுத்தி வருகிறது. இப்பிரிவு காவல் துறை இயக்குநரின் தலைமையில் இயங்கி வருகிறது. அவருக்கு உதவியாக, சென்னை மற்றும் மதுரையில் தலா ஒருவர் என இரண்டு காவல் கண்காணிப்பாளர்களும், 34க்கும் மேற்பட்ட குடிமைப் பணிகள் குற்றப் புலனாய்வுத்துறை அலகுகளைக் கண்காணிக்க சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை உட்கோட்டங்களில் நான்கு காவல் துணைக் கண்காணிப்பாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். 22 அலகுகளுக்கு காவல் ஆய்வாளர்களும், 12 அலகுகளுக்கு காவல் உதவி ஆய்வாளர்களும் தலைமை வகித்து வருகின்றனர். கூடுதலாக, தலைமையகத்தின் நிர்வாகம்

மற்றும் நுண்ணறிவுப் பிரிவுகளில் **2** ஆய்வாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இத்துறையானது, காவல் துறையின் நிர்வாக ஒத்துழைப்புடன், உணவுத் துறையின் செயலாக்கக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

**2021**-ல் குடிமைப் பணிகள் குற்றப் புலனாய்வுத் துறை, ரூ.**7.62** கோடி மதிப்பிலான **46886** குவிண்டால் ரேஷன் அரிசி, **21,302** லிட்டர்கள் மண்ணெண்ணை, **724** எரிவாயு உருளைகள் மற்றும் இதர பொருட்களையும் கைப்பற்றி **7360** வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. குடிமைப் பணிகள் குற்றப் புலனாய்வுத் துறையினர், **1382** வாகனங்களைக் கைப்பற்றியதோடு, **7578** நபர்களை கைது செய்தும் உள்ளனர். இக்காலகட்டத்தில், **1980**ஆம் ஆண்டைய கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோக பராமரிப்புச் சட்டத்தின் கீழ் **62** நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**2021-க்கான புதிய முன்முயற்சிகள்**

குடிமைப் பணிகள், குற்றப் புலனாய்வுத் துறை காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் மற்றும் கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோக பராமரிப்புச் சட்டம் ஆகிய சட்டங்களை சிறப்பாக அமலாக்கம் செய்வதற்காக ரூ.9.93 இலட்சம் செலவில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது.

## XIV. தடய அறிவியல் துறை

தமிழ்நாடு தடய அறிவியல் துறையானது, சட்ட அமலாக்க முகமைகளான மாநில காவல் துறை, சுங்கத் துறை, மத்திய குற்றப் புலனாய்வு கூடம், போதை பொருட்கள் நுண்ணறிவுப் பிரிவு, தேசிய புலனாய்வு முகமை உள்ளிட்ட துறைகளுக்கு அறிவியல் சார்ந்த பணிகளை வழங்கி, குற்றவியல் நீதி நிர்வாக முறைமையில் ஒரு முக்கிய பங்காற்றி வருகிறது. அறிவியல் உதவியுடன் முறையான

நீதியை நிலைநாட்டுவதில் நீதித்துறைக்கு இத்துறை பெருமளவில் உதவிபுரிந்து வருகிறது.

சென்னை முதன்மை தடய அறிவியல் ஆய்வகத்தில் 15 சிறப்பு பிரிவுகளும், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, வேலூர், விழுப்புரம், இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் தலா ஒன்று என்ற விகிதத்தில் 10 மண்டல தடய அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் ஒவ்வொரு காவல் மாவட்டம் / ஆணையரகங்களில் தலா ஒன்று என்ற விகிதத்தில் 38 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்களுடன் சென்னையில் பிரதான ஆய்வகத்துடன் தடய அறிவியல் துறை தமிழ்நாடு அரசின் உள்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அறிவியல், தொழில்நுட்பம், அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் என மொத்தம் 617 பணியாளர்கள் இத்துறையில் பணிபுரிந்து வருகின்றனர்.

**2021-க்கான புதிய முன்முயற்சிகள்**

கீழ்க்கண்டவற்றிற்கு அரசு ஆணை வழங்கியுள்ளது :

- ரூ.8.45 கோடி செலவில் சென்னையிலுள்ள பிரதான ஆய்வகத்தை சர்வதேச தரநிலைகளுக்கு இணையாக ஒரு மிகச்சிறந்த தடய அறிவியல் மையமாக தரம் உயர்த்துதல்.
- ரூ.2.19 கோடி செலவில், அரியலூர், தென்காசி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் தலா ஒன்று என்ற விகிதத்தில் 7 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் அமைத்தல்.
- ரூ.60.75 இலட்சம் செலவில், சென்னை மாநகர காவல் ஆணையகரத்திலுள்ள இரண்டு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் விழுப்புரம், வேலூர் மற்றும் தஞ்சாவூர் காவல் மாவட்டங்களிலுள்ள மூன்று நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்களின் திறன்களை பலப்படுத்துதல்.

- ரூ.3.26 கோடி செலவில் தஞ்சாவூரிலுள்ள மண்டல தடய அறிவியல் ஆய்வகத்தில் டிஎன்ஏ பகுப்பாய்வு பிரிவை உருவாக்குதல்.
- ரூ.4.46 கோடி செலவில், மதுரை மற்றும் திருச்சியிலுள்ள மண்டல தடய அறிவியல் ஆய்வகங்களில் கணினி தடய அறிவியல் பிரிவை உருவாக்குதல்.

**2021-ம் ஆண்டிற்கான சாதனைகள்**

14 பிரத்யேக ஆய்வுப் பிரிவுகளுடன் கூடிய சென்னை தலைமை ஆய்வகம் மிக விரைவில் NABL ISO / IEC 17025:2017 தரச் சான்று பெற உள்ளது.

2021-ம் ஆண்டில் இத்துறை குற்ற மற்றும் பிற வழக்குகளில் சம்பந்தப்பட்ட 2,84,642 தடய மற்றும் பிற ஆய்வுப் பொருட்களை பகுப்பாய்வு செய்து தடய அறிவியல் ஆய்வக அறிக்கைகளை அளித்துள்ளது. தடய அறிவியல் துறையானது

உரிமையியல் நீதிமன்றங்களிலிருந்து பெறப்படும் சான்றுப் பொருட்கள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபான மாதிரிகளை ஆய்வு செய்து அறிக்கை அளிப்பதற்காக பெறப்படும் ஆய்வுக் கட்டணம் வாயிலாக சுமார் ரூ.11.00 கோடி அளவிற்கு அரசுக்கு வருவாய் ஈட்டியுள்ளது.


## XV. முடிவுரை

சாதாரண பொதுமக்கள், வறுமையில் வாடுவோர், சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் உட்பட அனைவருக்கும் தக்க பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்கின்ற உயரிய குறிக்கோளுடன் செயல்படும் தமிழக அரசுக்கு உறுதுணையாக தமிழக காவல்துறை பணியாற்றி வருகிறது. மாநிலத்தின் ஒட்டுமொத்த வளம், பொருளாதார வளர்ச்சி மற்றும் துரித தொழில் முன்னேற்றத்திற்கு தேவையான திறமையான நிர்வாகத்தை, தொடர்ந்து தமிழக காவல்துறை வழங்கி வருகிறது. பெருந்தொற்று காலகட்டத்தில், தமிழ்நாடு


காவல்துறையினர் முன்கள போர்வீரர்களாக களத்தில் நின்று, பொது மக்களை பாதுகாக்க தங்களையே அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்டனர். அரசாங்கத்தின் உன்னத நோக்கங்களை அடையும் வகையில், காவல்துறையினர் பொதுமக்களுக்கு சேவையாற்றுவதற்கான உகந்த சூழலை இந்த அரசு ஏற்படுத்தி உள்ளது. பொதுமக்களுக்கான சேவைகளை மனித நேயத்துடன் அளிப்பதில் தகுந்த திட்டமிடுதல் மற்றும் முயற்சிகள் மூலமாக குற்றங்கள் நிகழாத மற்றும் நல்லிணக்க சமுதாயத்தை உருவாக்கும் உன்னத குறிக்கோள்களை தமிழக காவல்துறை நிச்சயம் எட்டும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு உள்ளது. தமிழ்நாடு காவல்துறைக்கு இந்த அரசு எப்போதும் வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் விளங்கும்.

**மு.க.ஸ்டாலின்**
**முதலமைச்சர்**

விளக்கப்படம் – I : காவல் துறையின் நிர்வாக அமைப்பு



விளக்கப்படம் – I I: காவல் துறையில் உள்ள சிறப்புப் பிரிவுகள்



## பிற்சேர்க்கை - I

## 2019 முதல் 2021 வரையிலான சொத்து தொடர்பான வழக்குகளும், கண்டுபிடிப்பும்

| வ. எண் | குற்றத்தின் தலைப்பு | 2019 | | 2020 | | 2021 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவு | க.பி | பதிவு | க.பி | பதிவு | க.பி |
| 1 | ஆதாயக் கொலை | 67 | 62 | 64 | 57 | 89 | 85 |
| 2 | கொள்ளை | 113 | 107 | 128 | 123 | 111 | 109 |
| 3 | வழிப்பறி (உடைமை பறிப்பு வழக்குகள் உட்பட) | 2444 | 2368 | 2023 | 1570 | 2550 | 2050 |
| 4 | கன்னக் களவு | 4392 | 2794 | 4275 | 2347 | 5157 | 2831 |
| 5 | திருட்டு | 15684 | 8497 | 12492 | 6465 | 14274 | 8602 |
| | மொத்தம் | 22700 | 13828 | 18982 | 10562 | 22181 | 13677 |


**குறிப்பு** : 2021 ஆம் ஆண்டிற்கான தரவு தற்காலிக எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டில் குற்றத்திற்கான இறுதி தரவு வெளியிடப்படவில்லை.

பதிவு - பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)

க.பி - கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)

**விளக்கப்படம் –III**

**சொத்து தொடர்பான குற்றங்கள் தாக்கலானவை மற்றும் கண்டுபிடிக்கப்பட்டவை 2019 முதல் 2021**



## பிற்சேர்க்கை -II

## (ரூபாய் கோடியில்)

| வ. எண் | சொத்து | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|
| 1 | இழக்கப்பட்ட சொத்து | 172.31 | 111.43 | 182.11 |
| 2 | மீட்கப்பட்ட சொத்து | 114.68 | 68.96 | 115.79 |
| 3 | மீட்பு சதவீதம் | 67% | 62% | 64% |

குறிப்பு: 2021 - ம் ஆண்டிற்கான தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே.

தமிழ்நாட்டில் நடைபெற்ற 2021-ம் ஆண்டுக்கான குற்றம் தொடர்பான விவரங்கள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

# பிற்சேர்க்கை - III

2019 முதல் 2021 வரை பதியப்பட்ட இந்திய தண்டனைச் சட்ட குற்றங்கள் (தலைப்பு வாரியாக)

| வ. எண் | குற்றத்தின் தலைப்பு | 2019 | 2020 | 2021 *** |
|---|---|---|---|---|
| | **சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள்** | | | |
| 1 | ஆதாயக் கொலை | 67 | 64 | 89 |
| 2 | கூட்டுக் கொள்ளை | 113 | 128 | 111 |
| 3 | கூட்டுக் கொள்ளையில் ஈடுபட குழுமியிருத்தல் | 61 | 68 | 128 |
| 4 | வழிப்பறி | 2444 | 2023 | 2550 |
| 5 | கன்னக்களவு | 4392 | 4275 | 5157 |
| 6 | திருட்டு | 15684 | 12492 | 14274 |
| | **கொடுங்குற்றங்கள்** | | | |
| 7 | கொலை | 1678 | 1597 | 1597 |
| 8 | கொலை முயற்சி | 2478 | 2548 | 2842 |
| 9 | கொலை என கருதமுடியாத மரணம் விளைவிக்கும் குற்றம் | 68 | 72 | 71 |
| 10 | அடிதடி வழக்கு | 19041 | 20867 | 22170 |
| 11 | கலவரங்கள் | 1722 | 2122 | 2275 |
| | **பெண்களுக்கு எதிரான குற்றங்கள்** | | | |
| 12 | கற்பழிப்பு | 370 | 404 | 442 |
| 13 | வரதட்சணை மரணங்கள் | 28 | 40 | 27 |
| 14 | மானபங்கம் | 803 | 892 | 1077 |
| 15 | பாலியல் வன்கொடுமை | 7 | 31 | 40 |
| 16 | கணவன் மற்றும் உறவினர்கள் கொடுமை | 781 | 689 | 875 |
| 17 | பெண் கடத்தல் | 728 | 633 | 653 |

| | | | | |
|---|---|---|---|---|
| | **பிற முக்கிய குற்றங்கள்** | | | |
| 18 | ஆள் கடத்தல் | **170** | **132** | **168** |
| 19 | நம்பிக்கை மோசடி | **154** | **141** | **121** |
| 20 | தீ வைத்தல் | **395** | **463** | **461** |
| 21 | மோசடி | **3289** | **2717** | **3361** |
| 22 | கள்ளநோட்டு | **69** | **38** | **61** |
| 23 | மரண விபத்துக்கள் | **17196*** | **13868*** | **14747** |
| 24 | மரணம் ஏற்படுத்தாத விபத்துக்கள் | **45489*** | **35976*** | **40935** |
| 25 | பிற இந்திய தண்டனைச் சட்ட குற்றங்கள் | **55786**** | **53912**** | **67507** |
| 26. | கோவிட்-19 விதி மீறல் வழக்கு | - | **739864** | **146114** |
| | **மொத்த இந்திய தண்டனைச் சட்ட வழக்குகள்** | **168111**** | **891696**** | **327853** |
| | **குற்ற விகிதாச்சாரம்** | **205.89** | **1075.33** | **395.37** |
| | **மக்கள் தொகை (இலட்சங்களில்)** | **816.49** | **829.23** | **829.23** |

**குறிப்பு :** *2019 மற்றும் 2020 - ற்கான சாலை விபத்து வழக்குகள் மறு சீராய்வு செய்யப்பட்ட வழக்குகள்.

**தமிழ் நாட்டில் 2019 மற்றும் 2020 -ல் மறு சீராய்வு செய்யப்பட்ட சாலை விபத்து எண்ணிக்கையால் மொத்த இ.த.ச வழக்குகள் மாற வாய்ப்புள்ளது. மறு சீராய்வுக்குப்பின் ஏதேனும் மாற்றம் இருப்பின் சரிசெய்யப்படும்.

***2021-ம் ஆண்டிற்கான தற்போது வழங்கப்பட்ட புள்ளிவிவரம் தற்காலிகமானது.தமிழ் நாட்டிற்கான குற்ற வழக்குகளின் புள்ளிவிவரம் இன்னும் வெளியிடப்படவில்லை.

# பிற்சேர்க்கை -IV

## வன்குற்ற நிகழ்வுகளும், தீர்க்கப்பட்டவைகளும்

## 2019 முதல் 2021

| வருடங்கள் | வழக்குகளின் நிலை | தலைப்பு | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கொலை | கொலை முயற்சி | காயம் | கலவரம் | மொத்தம் |
| 2019 | பதிவு | 1678 | 2478 | 19041 | 1722 | 24919 |
| | கு.ப. | 961 | 989 | 9355 | 617 | 11922 |
| | பு.வி | 669 | 1449 | 8788 | 997 | 11903 |
| | பி.வ. முடிப்பு | 48 | 40 | 898 | 108 | 1094 |
| 2020 | பதிவு | 1597 | 2548 | 20867 | 2122 | 27134 |
| | கு.ப. | 919 | 826 | 8495 | 647 | 10887 |
| | பு.வி | 638 | 1696 | 11620 | 1376 | 15330 |
| | பி.வ. முடிப்பு | 40 | 26 | 752 | 99 | 917 |
| 2021 | பதிவு | 1597 | 2842 | 22170 | 2275 | 28884 |
| | கு.ப. | 903 | 1012 | 7898 | 567 | 10380 |
| | பு.வி | 660 | 1803 | 13644 | 1616 | 17723 |
| | பி.வ. முடிப்பு | 34 | 27 | 628 | 92 | 781 |

**குறிப்பு:** 2021 ஆம் ஆண்டிற்கான தரவு உத்தேச எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டில் குற்றத்திற்கான தரவு வெளியிடப்படவில்லை.

பதிவு - பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)

கு.ப. - குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவை (தண்டனை, விடுவிப்பு, முடிக்கப்பட்டது மற்றும் நீதிமன்ற விசாரணை நிலுவை) வருடம் வாரியாக

பு.வி. - புலன் விசாரணையில் உள்ளவை (வருடம் வாரியாக)

பி.வ. முடிப்பு - பிற வகையில் முடிக்கப்பட்டவை (கண்டுபிடிக்க முடியாதவை, உண்மைக்கு அல்லது சட்டத்துக்குப் புறம்பானவை, மாற்றம் அல்லது தள்ளுபடி செய்யப்பட்டவை வருடம் வாரியாக)

| பிற்சேர்க்கை -V | | | | |
|---|---|---|---|---|
| 2019 முதல் 2021 வரை நடந்த கொலை நிகழ்வுகளுக்கான காரணங்கள் | | | | |
| வ. எண் | காரணங்கள் | 2019 | 2020 | 2021 |
| 1 | குடும்பத் தகராறு | 430 | 357 | 379 |
| 2 | வாய்த் தகராறு | 320 | 322 | 337 |
| 3 | முன்விரோதம் | 275 | 312 | 220 |
| 4 | காதல் மற்றும் பாலியல் காரணங்கள் | 251 | 229 | 221 |
| 5 | பணம் கொடுக்கல் வாங்கல் | 72 | 55 | 59 |
| 6 | நிலத்தகராறு | 118 | 123 | 115 |
| 7 | குடிபோதையில் தகராறுகள் | 67 | 68 | 109 |
| 8 | வரதட்சணை | 3 | 5 | 4 |
| 9 | அரசியல் காரணங்கள் | 3 | 4 | 1 |
| 10 | இதர காரணங்கள் | 131 | 118 | 143 |
| 11 | ஜாதி பாகுபாடு | 8 | 4 | 9 |
| மொத்தம் | | 1678 | 1597 | 1597 |

**குறிப்பு** : 2021 ஆம் ஆண்டிற்கான தரவு தற்காலிக எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டில் குற்றத்திற்கான தரவு வெளியிடப்படவில்லை.

## பிற்சேர்க்கை -VI

| பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | | | | |
|---|---|---|---|---|
| வ. எண். | குற்ற வகைகள் | 2019-ல் பதிவானவை | 2020-ல் பதிவானவை | 2021-ல் பதிவானவை |
| 1 | பாலியல் பலாத்காரம் | 370 | 404 | 442 |
| 2 | வரதட்சணை மரணம் | 28 | 40 | 27 |
| 3 | கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை | 781 | 689 | 875 |
| 4 | மானபங்கம் | 803 | 892 | 1077 |
| மொத்தம் | | 1982 | 2025 | 2421 |

**குறிப்பு** : 2021 ஆம் ஆண்டிற்கான தரவு தற்காலிக எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டில் குற்றத்திற்கான தரவு வெளியிடப்படவில்லை.

## பிற்சேர்க்கை -VII

## பெண்களுக்கு எதிரான குற்ற நிகழ்வுகளும், தீர்த்துவைக்கப்பட்டவையும் 2019 - 2021

| வருடங்கள் | வழக்குகளின் நிலை | தலைப்புகள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பாலியல் பலாத்காரம் | வரதட்சணை மரணம் | கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை | மானபங்கம் | மொத்தம் |
| 2019 | பதிவு | 370 | 28 | 781 | 803 | 1982 |
| | கு.ப. | 159 | 19 | 246 | 360 | 784 |
| | பு.வி | 188 | 9 | 458 | 387 | 1042 |
| | பி.வ. முடிப்பு | 23 | 0 | 77 | 56 | 156 |
| 2020 | பதிவு | 404 | 40 | 689 | 892 | 2025 |
| | கு.ப. | 205 | 16 | 205 | 360 | 786 |
| | பு.வி | 184 | 24 | 446 | 457 | 1111 |
| | பி.வ. முடிப்பு | 15 | 0 | 38 | 75 | 128 |
| 2021 | பதிவு | 442 | 27 | 875 | 1077 | 2421 |
| | கு.ப. | 156 | 11 | 180 | 369 | 716 |
| | பு.வி | 270 | 14 | 649 | 665 | 1598 |
| | பி.வ. முடிப்பு | 16 | 2 | 46 | 43 | 107 |

**குறிப்பு :** பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)

கு.ப. - குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவை (தண்டனை, விடுவிப்பு, முடிக்கப்பட்டது மற்றும் நீதிமன்ற விசாரணை நிலுவை) வருடம் வாரியாக

பு.வி. - புலன் விசாரணையில் உள்ளவை (வருடம் வாரியாக)

பி.வ. முடிப்பு - பிற வகையில் முடிக்கப்பட்டவை (கண்டுபிடிக்க முடியாதவை, உண்மைக்கு அல்லது சட்டத்துக்குப் புறம்பானவை, மாற்றம் அல்லது தள்ளுபடி செய்யப்பட்டவை) வருடம் வாரியாக

## பாலியல் குற்றத்திலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012 (POCSO Act) படி 2019 - 2021 வரை பதிவான வழக்குகளின் எண்ணிக்கை.

| வ. எண் | குற்றத் தலைப்பு | குற்றப் பதிவு | | |
|---|---|---|---|---|
| | | 2019 | 2020 | 2021 |
| 1 | பாலியல் பலாத்கார வழக்குகள் | 1742 | 2229 | 3425 |
| 2 | இதர வழக்குகள் | 654 | 861 | 1044 |
| 3 | மொத்த வழக்குகள் | 2396 | 3090 | 4469 |

**குறிப்பு** : 2021 ஆம் ஆண்டிற்கான தரவு தற்காலிக எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டில் குற்றத்திற்கான தரவு வெளியிடப்படவில்லை.

| பிற்சேர்க்கை - VIII | | |
|---|---|---|
| **காவல்துறையின் பயன்பாட்டில் உள்ள வாகனங்களின் விவரங்கள்** | | |
| **வாகனத்தின் வகை** | **வாகனம்** | **வாகன எண்ணிக்கை** |
| கனரக வாகனங்கள் | பேருந்து / லாரி | **855** |
| மிதரக வாகனங்கள் | சிற்றுந்து / வேன் | **1866** |
| இலகுரக வாகனங்கள் | கார்/ ஜீப் | **6323** |
| இரு சக்கர வாகனங்கள் | மோட்டர் சைக்கிள், ஸ்கூட்டர்/ ஏடிவி மோட்டார் சைக்கிள் மிதிவண்டி | **10377** |
| சிறப்பு வகை வாகனங்கள் | வஜ்ரா, வருண், க்ரேன், கைதிகள் வழிக்காவல், ஆம்புலன்ஸ், ரெக்கர், தண்ணீர் லாரி, நடமாடும் நீதிமன்றம், நடமாடும் கழிவறை வேன் போன்றவைகள் | **600** |
| **மொத்தம்** | | **20021** |



காவல்துறை செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் - 17.07.2021.



தருமபுரி மாவட்டம் அதியமான் கோட்டை காவல் நிலைய ஆய்வு - 29.09.2021.



காவல்துறை அருங்காட்சியகத்தைத் துவக்கி வைத்து பார்வையிடல் - 28.09.2021.



தாம்பரம் மற்றும் ஆவடி மாநகர காவல் ஆணையரகங்களைத்
துவக்கி வைத்தல் - 01.01.2022.



குழந்தைகளுக்கு எதிரான பாலியல் (போக்சோ) குற்றங்கள்
குறித்த ஆய்வுக் கூட்டம் - 27.11.2021.




காவல்துறையின் பயன்பாட்டிற்காக முகம் அடையாளம் கண்டறியும் மென்பொருளைத் துவக்கி வைத்தல் - 04.10.2021.




தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் ஒருங்கிணைந்த இணையதள குற்றப் பயிற்சி வளாகத்திற்கு அடிக்கல் நாட்டுதல் - 29.07.2021.




உதவி ஆய்வாளராக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்குதல் - 26.07.2021.



காவல் உதவி ஆய்வாளராக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு உயர் பயிற்சியகத்தில் பயிற்சி வகுப்பினைத் துவக்கி வைத்தல் - 01.09.2021.




சென்னை, மாநில காவல் கட்டுப்பாட்டு அறைக்கு British Standards Institution-னால் வழங்கப்பட்ட ISO தர சான்றிதழை வழங்குதல் - 03.11.2021.




காவலர் முதல் தலைமைக் காவலர் வரை வாரத்தில் ஒரு நாள் ஓய்வு அறிவித்ததற்காக
நன்றி தெரிவித்துக்கொள்ளுதல் - 06.11.2021.



தாம்பரம் மற்றும் ஆவடி மாநகர காவல்துறையின் பயன்பாட்டிற்காக புதிய வாகனங்களைக் கொடியசைத்து துவக்கி வைத்தல் - 13.01.2022.



குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் பற்றிய விழிப்புணர்வு வாகனத்தைக்
கொடியசைத்து துவக்கி வைத்தல் - 06.12.2021.



காவல் துறைக்கு புதியதாகக் கட்டப்பட்ட கட்டிடங்களைத் திறந்து வைத்தல் - 30.08.2021.



காவலர்களாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு

பணி நியமன ஆணை வழங்குதல் - 08.03.2022.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.